விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 பங்குனி 16 திங்கட்கிழமை (30.03.2015) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 101

ராம்கோ
THE RAMCO CEMENTS LIMITED
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்,உலகதர 14001, 9001 சான்றிதழ் பெற்றுள்ள ஒரே சீமெந்து ராம்கோ

## பிரச்சினைகளை கையாள விசேட பிரதிநிதி

# வடக்கில் சிவில் நிர்வாகத்தை வலுப்படுத்த ரணில் வாக்குறுதி



(கிளிநொச்சி)

வடக்கில் சிவில் நிர்வாகத்தை மேலும் வலுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் வடக்கு மக்களின் பிரச்சினைகளை நிவர்த்தி செய்வதற்காக பிரதமர் காரியாலயத்தில் அதிகாரியொருவரை நியமிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் அடுத்துவரும் 5 ஆண்டுகளில் விசேட வேலைத்திட்டங்களை மேற்கொண்டு மக்களுக்கான அடிப்படைத்தேவைகளை நிறைவேற்றவுள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

வடபகுதிக்கான 3 நாள் விஜயத்தை மேற்கொண்டிருந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்றையதினம் நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரச திணைக்களங்களின் பிரதிநிதிகள் ஆகியோரை சந்தித்து கலந் 23ஆம் பக்கம் பார்க்க....

## படையினரால் அச்சுறுத்தப்படுகிறோம் ரணிலிடம் முன்னாள் போராளிகள் முறையீடு

(கிளிநொச்சி)

2009ஆம் ஆண்டு யுத்தம் நிறைவடைந்து 5 வருடங்கள் முடிந்திருக்கின்றன. ஆனாலும் எங்களுடைய வீடுகளுக்குள் படையினர் வருகிறார்கள். எங்களை அச்சுறுத்துகிறார்கள். நாங்கள் தினசரி துன்புறுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றோம் என விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளிகள் நேற்றையதினம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் சுட்டிக்காட்டியுள்ளனர்.

வட பகுதிக்கு 3 நாள் விஜயமாக கடந்த வெள்ளிக்கிழமை யாழ். வந்திருந்த பிரதமர் இறுதி நாளான நேற்றையதினம் கிளிநொச்சி மாவட்டத்தின் நிலைமைகள் குறித்து மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடல் நிகழ்வில் கலந்து கொண்டிருந்தார்.

இதன்போதே முன்னாள் போராளி ஒருவர் பிரதமரிடம் நேரடியாகவே இந்த விடயத்தை கூறியுள்ளார். குறித்த விடயம் தொடர்பாக முன்னாள் போராளிகள் பிரதமருக்கு கூறுகையில், புனர்வாழ்வு வழங்கப்பட்டு எம்மை 23ஆம் பக்கம் பார்க்க....

## கூட்டமைப்பை அரசியல் கட்சியாக பதிய தமிழரசுக் கட்சியின் ஒத்துழைப்பு தேவை



### சம்பந்தன் விளக்கம்

(திருகோணமலை)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஒரு அரசியல் கட்சியாக பதிவு செய்வதென்றால் அதில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் அனைத்து உறுப்பினர்களினதும் ஒத்துழைப்பும் அங்கீகாரமும் தேவை என தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் சனிக்கிழமையன்று திரு 23ஆம் பக்கம் பார்க்க....

## எனக்கு ஏதும் நடந்தால் அரசாங்கமே பொறுப்பு-மகிந்த

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனது உயிர் பாதுகாப்பு குறித்து அச்சம் வெளியிட்டுள்ளதுடன், தனக்கு எதுவும் நேர்ந்தால் அதற்கு அரசாங்கமே பொறுப்புக் கூற வேண்டும் எனக் கூறியுள்ளார்.

மகிந்த ராஜபக்ஷவின் ஊடக இணைப்பாளர் ரொஹான் வெலிவிட்ட இதுகுறித்து மேலும் தெரிவிக்கையில்,

முன்னாள் ஜனாதிபதி சமூக பணிகளில் ஈடுபட்டு வருவதாகவும் அரசாங்கம் 23ஆம் பக்கம் பார்க்க....

## 5ஆவது தடவையாக வாகை சூடியது ஆஸி



11ஆவது உலகக் கிண்ணத் தொடரில் அவுஸ்திரேலிய அணி சம்பியனாகியது. நேற்று நடைபெற்ற இறுதிப் போட்டியில் நியூசிலாந்து அணியை 7 விக்கெட்டுக்களால் தோற்கடித்து 5ஆவது தடவையாக வாகை சூடியது.

## 248 பேருக்கு இன்று ஆசிரியர் நியமனம்!

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில், ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம், விவசாயம், தகவல் தொழில்நுட்பம் ஆகிய பாடங்களுக்கு 248 பட்டதாரி ஆசிரியர்களை உள்ளீர்த்துக்கொள்ளும் முகமாக இன்று திங்கட்கிழமை அவர்களுக்கான நியமனம் வழங்கப்படவுள்ளது.

இந்த நிகழ்வு இன்று காலை யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியில், வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் தலைமையில் 23ஆம் பக்கம் பார்க்க....

## சிறிசேன ஓர் சூழ்ச்சிக்காரர் அனுரகுமார திஸாநாயக்க சாடல்

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஓர் சூழ்ச்சிக்காரர் என ஜே.வி.பியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

19-ம் திருத்தச் சட்டத்தை உரிய முறையில் அமுல்படுத்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தடை ஏற்படுத்தி வருவதாகக் குற்றம் சுமத்தியுள்ளார்.

1970, 1977 மற்றும் 1994-ம் ஆண்டுகளில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலை விடவும் 2015-ம் ஆண்டு நடைபெற்ற தேர்தல் மாறுபட்டது.

2015-ம் ஆண்டுக்கு முன்னதாக நடைபெற்ற தேர்தல்களில் வறுமை பற்றியே பேசப்பட்டது எனவும், 2015-ம் ஆண்டில் ஜனநாயகம் மற்றும் சுதந்திரத்தைப் பெற்றுக் கொள்வதற்காகவே தேர்தல் நடைபெற்றது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கடந்தகால தேர்தல்களைப் போன்று இந்த முறை நடைபெற்ற தேர்தல் எதிராளிக்கு சவால் விடுக்கும் வகையில் 23ஆம் பக்கம் பார்க்க....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவுநிலை தவறா [illegible] உங்கள் நாளிதழ்

# 3 வழிகளில் மைத்திரிக்கு அழுத்தம் கொடுக்கும் மகிந்த



(கொழும்பு)

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் அரசாங்கத்திற்கு தலைமை தாங்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராக போட்டியிட்டு தோல்வியடைந்த மகிந்த ராஜபக்ஷவை சூழ ஆபத்தான விதத்தில் இரட்டை பலம் கட்டியெழுப்பப்பட்டு வருவதாக அரசியல் விஞ்ஞான பேராசிரியர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்காக பொதுக் கூட்டங்களை நடத்தி, அவரை அடுத்த பிரதமராக பெயரிட வேண்டும் என்ற கருத்தை உருவாக்குவதன் மூலமாக இந்த இரட்டை பலம் கட்டியெழுப்பப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டிள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மூன்று துறைகளின் ஊடாக மகிந்த ராஜபக்ஷ அரச நிர்வாகத்திற்கு அழுத்தங்களை கொடுத்து வருகிறார். முதலாவது, மைத்திரிபால சிறிசேனவுக்கு சார்பானவர்கள் போல் காட்டிக்கொண்டு மகிந்த ராஜபக்ஷவுக்கு சார்பாக ஒரு குழு இரகசியமான வேலைகளில் ஈடுபட்டுள்ளது. இரண்டாவது பாதுகாப்பு மற்றும் நிர்வாக சேவையில் பணியாற்றும் உயர் அதிகாரிகள். மூன்றாவது சில பௌத்த பிக்குமாரும் ஏனைய மதங்களை சேர்ந்த மதகுருக்கள்.

இவர்கள் மதவாத மற்றும் இனவாத அரசியலை பரப்பி வருகின்றனர். இந்த மூன்று துறைகள் ஊடாகவே மகிந்த ராஜபக்ஷ, மைத்திரிபால அரசாங்கத்திற்கு அழுத்தங்களை கொடுத்து வருகிறார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியை சேர்ந்த பலருக்கு அமைச்சு பதவிகளை வழங்கி தன்வசம் தக்க வைக்க முயற்சிக்காமல், மோசடியாளர்களுக்கு தண்டனை வழங்க வேண்டும் என பேராசிரியர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன்மூலம் கிடைக்கும் மக்களின் ஆதரவுடன் அரசாங்கத்தின் அதிகாரத்தை ஸ்திரப் படுத்திக்கொள்ள முடியும் எனவும் அவர் கூறியுள்ளார்.

இவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுக்காது ஜனாதிபதி மைத்திரிபால தற்போது கையாண்டு வரும் அரசியல் செயற்பாடுகளால், ராஜபக்ஷ ஆதரவு சக்திகள் சூழ்ச்சிகளில ஈடுபட்டு வருகின்றன எனவும் குறித்த பேராசிரியர் மேலும் தெரிவித்துள்ளார். (11)

# புதிய தேர்தல் சட்டமூலம் ஜனாதிபதியிடம் ஒப்படைப்பு

(கொழும்பு)

புதிய தேர்தல் சட்டமூலம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிங்கள வார இதழ் இது தொடர்பான செய்திகளை வெளியிட்டுள்ளது.

தேர்தல் முறைமை மாற்றம் குறித்த அம்சங்கள் உள்ளடக்கப்பட்ட சட்டமூலம் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் மகிந்த தேசப்பிரியவினால் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் சீன விஜயத்திற்கு முன்னரே இச்சட்டமூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் செயலகம் அறிவித்துள்ளது என குறித்த வார இதழ் சுட்டிக்காட்டியுள்ளது. (11)

### அவன்கார்ட் ஆயுத களஞ்சிய விவகாரம்

# பயங்கரவாத தடைச் சட்டத்தை பயன்படுத்த வேண்டாம்

### வெளிவிவகார அமைச்சர்

(கொழும்பு)

அவன்கார்ட் நிறுவனத்திற்கு சொந்தமான மிதக்கும் ஆயுதக் களஞ்சியத்தின் சட்டரீதியான நிலமை குறித்து கடும் வார்த்தை பிரயோகங்கள் முன்வைக்கப்பட்டதுடன் அது பகிரங்க நீதிமன்ற விவாதம் போல் இருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

தேசிய நிறைவேற்றுச் சபையின் ஊழல் எதிர்ப்பு உப குழு கடந்த வாரம் கூடியது.

இதன்போது அடுத்த உத்தரவு அவன்கார்ட் நிறுவன தலைவர் நிஷ்சங்க சேனாதிபதி உட்பட 4 பேரின் கைதுக்கான உத்தரவாக இருக்க வேண்டும் எனக் கூட்டத்தில் கலந்து கொண்ட சிரேஷ்ட பிரதிநிதி கூறியுள்ளார். எனினும் அதற்கான சாட்சியங்கள் இல்லை என அவர் குற்றம் சுமத்தினார்.

தனது 30 வருட சேவை காலத்தில் தான் எதிர்நோக்கும் மிகவும் சிரமமான விசாரணை அவன்கார்ட் தொடர்பான விசாரணை என குழுவின் இரண்டாம் நிலை பிரதிநிதி குறிப்பிட்டுள்ளார்.

இந்த சம்பவத்துடன் தொடர்புடையவர்களுக்கு எதிராக பயங்கரவாத தடைச் சட்டம், துப்பாக்கிகள் மற்றும் வெடிப் பொருள்கள் சம்பந்தமான கட்டளைச் சட்டத்தின் கீழ் குற்றச் சாட்டுக்களை முன்வைக்க முடியும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த கூட்டத்தில் கலந்து கொண்ட வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் எதனையும் மேற்கொள்ள வேண்டாம் என கேட்டுக் கொண்டார்.

ஐக்கிய தேசியக் கட்சி பயங்கரவாத தடுப்புச் சட்டத்திற்கு ஆதரவு வழங்குகிறது என்ற கருத்து ஏற்பட்டு விடும் எனவும் இது நல்லிணக்க விடயத்தில் தாமதத்தை ஏற்படுத்தும் எனவும் மங்கள சமரவீர சுட்டிக்காட்டியுள்ளார்.

சட்டத்தரணிகள் இந்த விடயம் தொடர்பில் தனது சட்ட ரீதியான நிலைப்பாடுகளை எழுத்து மூலம் முன்வைக்குமாறும் தான் அது சம்பந்தமாக சட்டமா அதிபரின் கருத்தை கேட்டறிவதாக கூட்டத்தில் முன்னிலை வகித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார். (11)

# 234 உள்ளூராட்சி மன்றங்களின் ஆட்சிக்காலம் நீடிப்பு

(கொழும்பு)

234 உள்ளூராட்சி மன்றங்களின் ஆட்சிக் காலத்தை நீடிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அதற்கான வர்தமானி அறிவித்தலை வெளியிடுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக அமைச்சர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

இதன்படி 3 மாநகர சபைகள், 30 நகர சபைகளின் ஆட்சிக்காலத்தை மே மாதம் 15 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

மேலும் 201 பிரதேச சபைகளுக்கான ஆட்சிக்காலத்தை மே மாதம் 31ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (11)

# இரண்டு வாரங்களுக்குள் நாடாளுமன்றம் கலைக்கப்படலாம்

(கொழும்பு)

எதிர்வரும் இரண்டு வாராங்களுக்குள் நாடாளுமன்றத்தை கலைக்கும் சூழ்நிலை ஒன்று உருவாகலாம் என்றும் அமைச்சர் லக்ஸ்மன் கிரியல்ல தெரிவித்துள்ளார்.

அதன் பின்னர் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய கட்சியின் அரசாங்கம் சக்திமயப்படுத்தப்படும்.

இதற்கு மக்களின் ஆதரவு வழங்கப்பட வேண்டும்.

அதேநேரம் தற்போது எதிர்கட்சிக்கு தலைவர் ஒருவரை நியமித்துக் கொள்ள முடியாத நிலை உருவாகி இருக்கிறது.

எதிர்கட்சித் தலைவர் ஒருவரை நியமித்துக் கொள்ள முடியாதிருக்கின்ற கட்சி ஒன்றை நம்பி நாட்டை கொடுக்கக்கூடாது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (11)

# தேசிய டெங்கு கட்டுப்பாட்டு வாரத்தின் பணிகள் மும்முரம்

தேசிய நுளம்பு ஒழிப்பு மற்றும் டெங்கு கட்டுப்பாட்டு வாரத்தின் முதல் மூன்று வாரங்களில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளில் 7 ஆயிரத்து 266 பேருக்கு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

நாடளாவிய ரீதியாக 2 லட்சத்து 35 ஆயிரத்திற்கும் அதிகமான வளாகங்கள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

அவற்றில் நுளம்புகள் பரவும் வகையில் பேணப்படாமல் இருந்த 54 ஆயிரத்து 929 வளாகங்கள் இனங்காணப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

நுளம்பு குடம்பிகள் பெருகும் வகையில் இருந்த 4 ஆயிரத்து 405 இடங்களும் கண்டு பிடிக்கப்பட்டன.

தேசிய நுளம்பு ஒழிப்பு வாரம் கடந்த 26 ஆம் திகதி ஆரம்பமான நிலையில் எதிர்வரும் ஏப்ரல் முதலாம் திகதி நிறைவடைகின்றது. (11)

# 28 உயர்ஸ்தானிகரகங்களுக்கு தூதுவர்கள் நியமிக்கப்படவில்லை

28 வெளிநாட்டு தூதரகங்கள், உயர்ஸ்தானிகராலயங்களுக்கு தூதுவர்கள் மற்றும் உயர்ஸ்தானிகர்கள் இதுவரையில் நியமிக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. புதிய அரசாங்கம் ஆட்சிப் பொறுப்பினை ஏற்றுக் கொண்டதனைத் தொடர்ந்து அரசியல் ரீதியாக நியமிக்கப்பட்ட தூதுவர்கள், உயர்ஸ்தானிகர்கள் மீள அழைக்கப்பட்டிருந்தனர்.

இவ்வாறு மீள அழைக்கப்பட்ட 28 நாடுகளுக்கான இலங்கைத் தூதுவர்கள் உயர்ஸ்தானிகர்கள் பதவிகள் இன்னமும் வெற்றிடமாக காணப்படுகின்றன. குறித்த வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாராளுமன்றக் குழு ஒன்றின் மூலமே ராஜதந்திரிகளுக்கான அனுமதி வழங்கப்படுவதாக அரசாங்கம் அறிவித்துள்ளது. 17 பேரைக் கொண்ட சர்வகட்சி பாராளுமன்ற குழுவிற்கு முன்னாள் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தலைமை தாங்குகின்றார். (11)


## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

### அமரா பொன்னையா சதாசிவம்

[முன்னாள் மாத்தளை வர்த்தகர்]

அன்னை மடியில் 30 - 12 - 1938



ஆண்டவன் அடியில் 23 - 03 - 2013

திதி:-ஏகாதசி 30.03.2015 [திங்கட்கிழமை]

சந்ததிக்குள் நந்தவனமாய் வந்துதித்த தனிவிளக்கே
செந்தமிழாய் எம்மோடு வாழ்ந்திருந்த குலவிளக்கே
சொந்தத்துள் சந்தமாய் எம்மோடு உடனிருந்தீர்
சாந்தமே மறவோமே உமையென்றும் எம்வாழ்வில்

ஆண்டிரண்டு ஆனாலும் ஆறாதே உம் பிரிவு
ஆலயமாய் எம் வீட்டில் எப்போதும் வாழ்ந்திடுவீர்
கண்ணுக்கு இமைபோல எமைக்காத்த உத்தமரே
காலங்கள் மாய்ந்தாலும் மறவோமே உமதன்பை.

தருவன், பொலிகண்டி கிழக்கு,
வல்வெட்டித்துறை.

(சி-513)

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்



## மரண அறிவித்தல்

### திருமதி புவனேஸ்வரி நடேசன்

(மலையக்கா)



நவாலி கிழக்கைச் சேர்ந்த புவனேஸ்வரி நடேசன் காலமாகிவிட்டார்.

அன்னார் நடேசனின் (நவாலியூர் நடேசன்) அன்பு மனைவியும், எழில்வண்ணன், மாதுமை நடேசமூர்த்தியின் பாசமிகு தாயாரும், இ. சோமசுந்தரம், மகேந்திரன், சிறீதரன், அனுராதா ஜெயக்குமார், ரேவதி சதாசிவம், புவனேந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், பிரசாந்தி, ஆர்த்திகா, ஆருரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நவாலி கொத்துக் கட்டி இந்து மயானத்தில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு தகனம் செய்யப்படும் என்பதை அறியத் தருகின்றோம்.

நவாலி கிழக்கு,
மானிப்பாய்.

(9932)

இவ்வண்ணம்
குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி ஏப்ரலில் பாகிஸ்தான் பயணம்

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அடுத்த மாதம் பாகிஸ்தானிற்கு விஜயம் மேற்கொள்ள தீர் மானித்துள்ளார். இவ்விஜயத்திற்கான திகதி முடிவு செய்யப்பட்டுள்ளதாக இலங்கை வெளியுறவு துறை அமைச்சு தகவல் வெளியிட்டுள்ளது.

இதேவேளை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேவின் சகோதரர் பிரியந்த சிறிசேனவின் மரணத்திற்கு இலங்கைக்கான பாகிஸ்தான் பதில் உயர்ஸ்தானிகர் சப்ராஸ் சிப்ராதன் சார்பாகவும் பாகிஸ்தான் அரசாங்கம் மற்றும் மக்கள் சார்பாகவும் ஆழ்ந்த அனுதாபங்களை வெளியிட்டிருந்தார். மேலும் பிரியந்த சிறிசேனவின் ஆத்மா சாந்தி அடைவதற்காக பிரார்த்திப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)


## ALLIANCE FRANÇAISE DE JAFFNA

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி




கற்பதற்கு FRENCH EMBASSY யின்கீழ் இயங்கும் நம்பகரமான சர்வதேச நிறுவனம் AF மட்டுமே (யாழில் 1976 முதல்). இலங்கையில் நாம் மட்டுமே அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS வழங்குகிறோம். மொழி பெயர்ப்புகள். ஆசிரியர்கள்: யாழ். பல்கலைக்கழக பிரெஞ் ஆசிரியர்கள் (பிரான்ஸ் நாட்டவரும்). யாழ், வன்னி, மன்னாரைச் சேர்ந்த நூற்றுக் கணக்கானோர் AF இல் படித்தே FRANCE, CANADA, SWITZERLAND... செல்கிறார்கள். O/L, A/L மாணவர்களுக்கு கட்டண குறைப்பு

DELF A1 International Diploma : வகுப்பு ஆரம்பமாகியுள்ளது. பரீட்சைக் கட்டணம் AF மாணவர்களுக்கு 3850 ஏனையோருக்கு 9900

உடன் அழைத்து புதிய வகுப்புகளுக்கு பதிவுசெய்யுங்கள்...

021 222 8093 61இ கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

கச்சேரி → புகையிரதக்கடவை → AF or ஆரியகுளம், ஸ்ரான்லி றோட் → நக்கா றோட்; → AF

(9898)

## வேலை ஆட்கள் தேவை

எமது ஸ்தாபனத்திற்கு கணனி அறிவுள்ள வேலை ஆட்கள் தேவை. ஆரம்ப வேதனமாக ரூபாய் 12000/= வழங்கப்படும். வயது 18 தொடக்கம் 23 வரை ஆண்கள் மட்டும்.

கிங்ஸ் எலெக்ரோனிக்ஸ், T.P: 021 222 3857
11 A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(9924)

## வாழ்க்கையில் வெறுப்பா ?

பிரச்சினை எதுவானாலும்,
எம்முடன் தொலைபேசியில்
அல்லது நேரில் பேசுங்கள்.
இரகசியங்களைப் பேணுவோம்.

காலை 9.00 – பி.ப 1.00
மதச்சார்பற்றது

(C-342)

### கைகொடுக்கும் நண்பர்கள்

104, 4ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.
021 222 8117, 0779008776


# மரண அறிவித்தல்

## திருமதி அம்பிகையம்மா தியாகராசா (கண்ணகி)



கொக்குவில் கிழக்கு கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அம்பிகையம்மா தியாகராசா (கண்ணகி) கடந்த வெள்ளிக்கிழமை (27.03.2015) அன்று காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்றவர்களான பெரியதம்பி-அமிர்தம் தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-தில்லைவனம் (நயினாதீவு 5 ஆம் வட்டாரம்) தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சின்னத்தம்பி தியாகராசாவின் அன்பு மனைவியும், சத்தியசீலன் (பிரான்ஸ்), ஜெகசீலன் (உரிமையாளர் - ஜெகன் பாமசி, கிறீன் கிறாஸ் ஹோட்டல் - யாழ்ப்பாணம்), குகசீலன் (பிரான்ஸ்), திருச்செல்வி (அஜந்தி - பிரான்ஸ்), சசிகலா (ராஜா கிறீம் கவுஸ் - யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் 30.03.2015 இன்று திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக முற்பகல் 10.30 மணியளவில் கொக்குவில் கிழக்கு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கொக்குவில் கிழக்கு
கொக்குவில்.

தகவல்:-குடும்பத்தினர்
தொடர்புகளுக்கு :- 021 221 2343

(சி-511)

# இராசி பலன்

30.03.2015
(பங்குனி 16, திங்கட்கிழமை)
சூரிய உதயம் காலை 6.11 மணிக்கு
தசமி முற்பகல் 8.36 மணிவரை
பூசம் முற்பகல் 11.43 மணிவரை
இராகுகாலம் 7.43-9.13 மணிவரை
சுபநேரம் 12.13-1.43 மணிவரை

வளவன்

**மேடம்:** பொன்னான தகவல்கள் வந்து சேரலாம், மற்றவர்கள் வாங்கிய பொருளைப் பார்த்து நீங்களும் வாங்க நினைப்பீர்கள், பெற்றோரின் ஆதரவால் பெருமைகள் காண்பீர்கள்.

**இடபம்:** குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், நாடி வந்தவர்களுக்கு நன்மைகள் செய்து மகிழ்வீர்கள், அரசு வழியில் அனுகூலமுண்டு, பயணங்களால் பலனுண்டு

**மிதுனம்:** மாமன் மைத்துனர் வழியில் நல்ல செய்திகள் வந்து சேரலாம், இனிமையான அனுபவங்கள் ஏற்படும் நாள், பேச்சில் கனிவு பிறக்கும், தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**கடகம்:** பயணங்களால் பலனுண்டு, மனதில் இனம்புரியாத கற்பனைகள் தோன்றி மறையும், நீங்கள் தேடிச் சென்று பார்க்க நினைத்த நபர் உங்கள் இல்லம் தேடி வரலாம்.

**சிம்மம்:** செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், தொழிலில் ஆக்கபூர்வமான மாற்றங்களைச் செய்ய முற்படுவீர்கள், திடீரெனக் கேட்கும் செய்திகளால் திகைப்படையலாம்.

**கன்னி:** இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், நல்ல தகவலைத்தரும் தொலைபேசி அழைப்புகள் வந்து சேரலாம், திடீர் பணவரவு மனதிற்கு சந்தோசத்தைக் கொடுக்கும்.

**துலாம்:** ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், எதிர்பாராத தன வரவுகள் வந்து சேரலாம், வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், ஆரோக்கியமான நாள்.

**விருச்சிகம்:** வியக்கும் செய்திகள் வந்து சேரலாம், எதிர்பார்த்த வருமானங்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, பயணங்களால் பலனுண்டு, ஆன்றோர் சந்திப்புண்டு, யோக பயமுண்டு.

**தனுசு:** திட்டமிட்ட காரியங்களில் சிறு தடை தாமதங்கள் ஏற்படலாம், தொழிலில் சில மனஸ்தாபங்கள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், பிரயாண பயமுண்டு.

**மகரம்:** சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும் நாள், சொந்த பந்தங்களின் வருகையுண்டு, எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், செய்தொழில் மேன்மையுண்டு, வருமானம் திருப்திதரும்.

**கும்பம்:** உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், உடல் நலன் சீராகி உற்சாகப்படுத்தும், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**மீனம்:** பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், அரை குறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், வியாபார விருத்தியுண்டு, பணத் தேவைகள் பூர்த்தியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகக்கிண்ண கிரிக்கெட் அவுஸ்திரேலியா சம்பியன்




நியூசிலாந்து அணிக்கு எதிரான உலகக்கிண்ண இறுதிப் போட்டியில் அவுஸ்திரேலியா 7 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்று 5 ஆவது தடவையாக கிண்ணம் வென்றது.

உலகக்கிண்ண கிரிக்கெட் தொடர் கடந்த மாதம் 14ல் தொடங்கியது. இதில் பாகிஸ்தான், வங்கதேசம், மேற்கிந்திய தீவுகள், இலங்கை அணிகள் காலிறுதியுடன் திரும்பின.

அரையிறுதியில் நியூசிலாந்திடம் தென்னாபிரிக்க அணியும் இந்திய அணி அவுஸ்திரேலியாவிடமும் தோற்று, தொடரை விட்டு வெளியேறியது.

இந்நிலையில் நேற்று மெல்பேர்னில் நடந்த இறுதிப் போட்டியில், அவுஸ்திரேலியா, நியூசிலாந்து அணிகள் பலப்பரீட்சை நடத்தின.

நாணயச் சுழற்சியில் வென்ற நியூசிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

நியூசிலாந்து அணிக்கு தொடக்க வீரர்களாக அணித்தலைவர் மக்கலம், குப்டில் களமிறங்கினர்.

ஸ்டார்க் வீசிய முதல் ஓவரின் 5வது பந்தில் அணித்தலைவர் மக்கலம் டக்-அவுட் ஆகி ரசிகர்களுக்கு அதிர்ச்சி அளித்தார்.

பின்னர் குப்டிலுடன் வில்லியம்சன் ஜோடி சேர்ந்தார். இருவரும் நிதானமாக விளையாடி வந்த நிலையில் குப்டில் 34 பந்துகளுக்கு 15 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார்.

வில்லியம்சனும் அவுஸ்திரேலிய பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் திணறினார். இவர் ஜோன்சன் வீசிய வேகத்தில் அவரிடமே பிடி கொடுத்து வெளியேறினார்.

33 பந்துகளை சந்தித்த வில்லியம்சன் 12 ஓட்டங்களை எடுத்தார்.

இதைத் தொடர்ந்து ஜோடி சேர்ந்த டெய்லர், எலியாட் சிறப்பாக விளையாடினர்.

நிதானமாக விளையாடி வந்த நிலையில், டெய்லர் (40) பால்க்னர் பந்தில் ஆட்டமிழந்தார். அதே ஓவரில் கோரி ஆண்டர்சன் டக்-அவுட்டாக நடையை கட்டினார்.

இதனையடுத்து வந்த ரொஞ்சியும் ஓட்டங்கள் ஏதும் எடுக்காமல் வெளியேறினார். இதனால் நியூசிலாந்து இக்கட்டான நிலையில் சிக்கியது.

பின்னர் வெட்டோரி (9) ஜோன்சன் பந்தில் பவுல்ட் ஆக, மறுமுனையில் சிறப்பாக ஆடி வந்த எலியாட்டும் 83 ஓட்டங்கள் (7 பவுண்டரி, 1 சிக்சர்) எடுத்த நிலையில் வெளியேறினார்.

இதைத் தொடர்ந்து களமிறங்கிய ஹென்றி ஓட்டங்கள் ஏதும் எடுக்காமலும், சவுத்தி ஓட்ட முறையிலும் வெளியேறினர்.

இதனால் நியூசிலாந்து அணி 45 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 183 ஓட்டங்களை மட்டுமே எடுத்தது.

அவுஸ்திரேலிய தரப்பில், பால்க்னர், ஜோன்சன் தலா 3 விக்கெட்டுகளையும், ஸ்டார்க் 2 விக்கெட்டுகளையும், மக்ஸ்வெல் 1 விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இதைத் தொடர்ந்து எளிய இலக்கை நோக்கி களமிறங்கிய அவுஸ்திரேலிய அணிக்கு பின்ஞ் டக்-அவுட் ஆகி ஏமாற்றம் அளித்தார்.

வோர்னர் 45 ஓட்டங்களில் ஆட்டமிழக்க, பின்னர் ஜோடி சேர்ந்த சுமித், அணித்தலைவர் கிளார்க் சிறப்பாக விளையாடி அணியை வெற்றிப் பாதைக்கு அழைத்து சென்றனர்.

வெற்றி பெறும் தருணத்தில் கிளார்க் (74) அரைச்சதம் கடந்த நிலையில், ஹென்றி வீசிய பந்தில் பவுல்ட் ஆனார்.

இருப்பினும் அவுஸ்திரேலிய அணி 33.1 ஓவர்களில் 3 விக்கெட் இழப்பிற்கு 186 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது.

சுமித் (56) அரைச்சதம் கடந்த நிலையிலும், வோட்சன் 2 ஓட்டங்கள் எடுத்த நிலையிலும் களத்தில் இருந்தனர்.

இதனால் அவுஸ்திரேலியா 7 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்று உலகக்கிண்ணத்தை வென்றது. உலகக்கிண்ண அரங்கில் இது அவுஸ்திரேலியாவுக்கு 5ஆவது உலகக்கிண்ணம் ஆகும்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக அவுஸ்திரேலியா அணியின் பால்க்னரும் தொடர் நாயகனாக அவுஸ்திரேலியா அணியின் ஸ்டாக்கும் தெரிவானார். (க)

## உலகக்கிண்ண வெற்றி ஹியூக்ஸ்க்கு அர்ப்பணிப்பு

### ஆஸி.கப்டன் கிளார்க் தெரிவிப்பு



மெல்பேர்ன் நகரில் நேற்று நடைபெற்ற உலகக்கோப்பை போட்டியில் அவுஸ்திரேலியா வெற்றி பெற்றது.

அவுஸ்திரேலியா இந்த உலகக் கோப்பையை வெல்ல 72 பந்தில் 74 ஓட்டங்கள் அடித்த கிளார்க்கும் ஒரு முக்கிய காரணமாக இருந்தார்.

இந்த போட்டிக்கு பிறகு கிளார்க் கூறியதாவது, "சிட்னியில் நடைபெற்ற உள்ளூர் போட்டியில் பந்து தாக்கி எனது நண்பர் பிலிப்ஸ் ஹியூக்ஸ் இறந்தார். இந்த உலகக் கோப்பையை அவருக்கு அர்ப்பணிக்கிறேன். உலகக்கோப்பையில் அவுஸ்திரேலியா அணியில் 15 பேர் இடம் பெற்றிருந்தனர். ஆனால், ஹியூக்ஸ் உடன் 16 பேர் என்று நான் நினைத்துக்கொள்வேன். அவுஸ்திரேலிய அணிக்காக விளையாடும் வரை நான் கறுப்பு கயிறு அணிவேன்" என்றார்.

பிலிப்ஸ் ஹியூக்ஸும் கிளார்க்கும் நீண்ட கால நண்பர்கள். ஹியூக்ஸ் இறுதிச்சடங்கு நடைபெறும் வரை அவரது வீட்டிலேயே இருந்தார் அவரது மரணத்திற்கு இரங்கல் தெரிவிக்கும் வகையில் நேற்றைய போட்டியிலும் தனது இடது கையில் கறுப்பு கயிறு கட்டியிருந்தார். (க)

## சங்காவை முந்திய குப்தில்



உலககோப்பை போட்டியில் அதிக ஓட்டங்கள் எடுத்த வீரராக இலங்கை முன்னாள் கப்டன் சங்கக்கார இருந்தார். அவர் 7 ஆட்டத்தில் 541 ஓட்டங்கள் குவித்து இருந்தார். இலங்கை கால்இறுதியோடு வெளியேறியதால் அவரது வாய்ப்பு முடிந்தது. ஆனால் அரை இறுதிப்போட்டி முடிந்த பிறகும் கூட யாரும் சங்கக்காரவை முந்தவில்லை. நேற்று நடந்த இறுதிப் போட்டியின் மூலம் தான் சங்கக்காரவை நியூசிலாந்து தொடக்க வீரர் குப்தில் முந்தினார். 2 ஆவது இடத்தில் இருந்த குப்தில் நேற்று 15 ஓட்டங்கள் எடுத்ததன் மூலம் முந்தினார். குப்தில் 547 ஓட்டங்களை எடுத்து முதல் இடத்தை பிடித்தார். அவரது சராசரி 68.37 ஆகும். இரண்டு சதம், ஒரு அரை சதமும் அடங்கும். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





தெல்லிப்பழை தமிழ்ச்சங்கத்தின் தமிழ் விழாவும் பேராளர் கௌரவிப்பும் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்துக்கு அருகிலுள்ள லயன்ஸ் கழக மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற போது... (படங்கள்: மானிப்பாய் செய்தியாளர்)



நல்லூர் கம்பன் கோட்டத்தில் அகில இலங்கை கம்பன் கழகம் நடத்திய வித்தகம் நிகழ்வு அண்மையில் நடைபெற்ற போது...



அமானா தக்காபுல் காப்புறுதி நிறுவனம் படகு மற்றும் இயந்திரத்திற்கு காப்புறுதி செய்திருந்த முல்லைத்தீவு மாவட்டதைச் சேர்ந்த செல்வகுமரன் என்பவருக்கு இழப்பீட்டுத் தொகையை வழங்கிய போது...







உடுப்பிட்டி தென்னிந்திய திருச்சபை முன்பள்ளியின் ஒளிவிழா அண்மையில் பாடசாலையில் நடைபெற்றது. இதில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் அதிபர் உரையாற்றுவதையும் சிறார்களின் கலை நிகழ்ச்சி இடம்பெறுவதையும் படங்களில் காணலாம்.





கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் வருடாந்த இல்ல மெய் வல்லுநர் போட்டி கடந்த வெள்ளிக்கிழமை கலாசாலை மைதானத்தில் இடம்பெற்ற போது... (படங்கள்:-மானிப்பாய் செய்தியாளர்)






புலம்பெயர்ந்து வெளிநாட்டில் வாழும் ஏழாலை அன்பர் ஒருவரின் 2 இலட்சம் ரூபா நிதியுதவியில் 30பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு கோழிக்குஞ்சுகளும் அவற்றுக்கு ஒரு மாதத்திற்குத் தேவையான உணவுப் பொதிகளும் அண்மையில் வழங்கப்பட்ட போது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏப்ரல் முதலாம் திகதிமுதல் பேருந்து சேவை ஆரம்பிப்பு

(யாழ்ப்பாணம்)

ஏப்ரல் முதலாம் திகதி முதல் சாவகச்சேரி பேருந்து நிலையத்திலிருந்து தினமும் காலை 6 மணிக்கு பேருந்து ஒன்று புறப்படும் என வடபிராந்திய இலங்கைப் போக்குவரத்துச் சபையின் யாழ்.சாலை முகாமையாளர் அறிவித்துள்ளார்.




வடக்குமாகாண மீன்பிடி போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரனுக்கு பயணி ஒருவர் தாம் எதிர்நோக்கும்போக்குவரத்துப் பிரச்சினைகள் தொடர்பாக முறையிட்டிருந்தார்.

இது விடயம் தொடர்பாக அமைச்சர் மேற்கொண்ட முயற்சியின் பயனாக நாளை மறுதினம் முதலாம் திகதி முதல் சாவகச்சேரியிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு மேற்படி பேருந்து சேவை ஒழுங்கு செய்யப்பட்டிருப்பதாக யாழ்.சாலை முகாமையாளர் செ.குலபாலசெல்வம் அறிவித்துள்ளார். (இ-3)




# வாழ்க்கை முறையை ஆவணப்படுத்தாதது எல்லோரையும் சார்ந்திருக்கும் குற்றமாகும்

## வடக்கு முதலமைச்சர் மன வருத்தம்

(யாழ்ப்பாணம்)

**வடக்கு-கிழக்கு மாகாணங்களில் வாழ்ந்து வந்தவர்கள் தமது பாரம்பரியத்தையும் வரலாற்றையும் வாழ்க்கை முறையையும் ஆவணப்படுத்தாது விட்டு விட்டனர் என்ற ஒரு குற்றம் எம் எல்லோரையும் சார்ந்திருக்கின்றது. எனவே வடக்கு மாகாண மக்கள் பற்றிப் போதுமான வரலாற்றுச் செய்திகளை இனியேனும் கணனிப்படுத்தி வைக்க வேண்டிய அவசியம் எழுந்துள்ளதாக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

வலி.தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச கலாசாரப் பேரவையின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் மானிப்பாய் பிரதேச சபை மண்டபத்தில் இடம்பெற்ற கலாசார விழா, நூல் வெளியீட்டு விழா நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொதுவாக இந்நாட்டின் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழ்ந்து வந்தவர்கள் தமது பாரம்பரியத்தை, வரலாற்றை, வாழ்க்கை முறையை ஆவணப்படுத்தாது விட்டு விட்டனர் என்ற ஒரு குற்றம் எம் எல்லோரையுஞ் சார்ந்திருக்கின்றது. அதற்கான காரணங்களையும் எமது சரித்திராசிரியர்களும் தொல பொருளியலாளர்களும் எடுத்தியம்பி உள்ளார்கள். முக்கியமாக நிரந்தரமாக நிலைக்கூடிய கருங் கற்பாறைகளும் குகைகளும் இல்லாமையே இதற்குக் காரணம் என்றிருக்கின்றார்கள். அதாவது கர்ண பரம்பரையாகச் செய்திகளைச் சொல்லி வருவது ஒரு வழி. ஆனால் அது மிகைப்படுத்தலுக்கும் மறதிக் கும், மாற்றலுக்கும் ஆட்படக் கூடியது. ஓலைச்சுவடிகளில் எழுதி வைப்பது அடுத்தவழி. அவை நிரந்தரமாக நிலைக்கக்கூடியவையல்ல. அடுத்து கல்வெட்டுக்களில் கடைந்து வைப்பது. சிலாசாசனங்களில் செதுக்கி வைப்பது. அதற்கான கருங்கற்களைக் கொண்டிராத பிரதேசமே எமது வட மாகாணம்.

புத்த சமயம் இலங்கைக்கு வந்த பின்னர் தம்புள்ள, சிகிரியா, பொலநறுவை, அநுராதபுரம் போன்ற இடங்களில் செய்திகளைக் கருங்கறகளில் செதுக்கி வைத்துச் சென்றார்கள் பௌத்த பிக்குகளும் அக்கால அரச அலுவலர்களும். இதனால் பெரும்பான்மையின மக்களின் வரலாறு பலவாறாக வெளியிடப்பட்டுள்ளது. ஆனால் இங்கு வாழ்ந்து வந்த தமிழ்பேசும் மக்களின் தரமான பாரம்பரியம் தவறாகப் புனையப்பட்டு வருகிறது.

அண்மையில் பற்பல கல்வெட்டுக்கள் கண்டுபிடிக்கப்பட்டதென்னவோ உண்மைதான். எமது பேராசிரியர் பத்மநாதன் அக் கல்வெட்டுக்களைக் கண்டு ஆராயப் பகீரதப்பிரயத்தனங்களில் ஈடுபட்டு ஓரிரு வருடங்களின் பின்னரே அவற்றைக் கண்டதாகக் கூறியுள்ளார் இந்து பாரம்பரியம் பற்றிய அவரின் சரித்திர நூலில். தமிழ் பேசும் மக்களைப் பற்றிய சாதகமான கல்வெட்டுக்கள் காட்சிக்கு வைக்கப்படாதிருப்பதே இதற்குக் காரணம். வடமாகாண மக்கள் பற்றிப் போதுமான வரலாற்றுச் செய்திகளை இனியேனுங்கணனிப படுத்தி வைக்க வேண்டிய அவசியம் எழுந்துள்ளது. எமது பொது நூலகம் ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்தியொன்றில் ஆயிர ஆயிரமாம் அருமருந்தன்ன நூல்களை அக்கினிக்கு ஆகுதி செய்த போது எமது வரலாறு வாயடைக்கப்பட்டது. அழிந்து போன தொண்ணூற்று ஐயாயிரத்திற்கும் மேலான நூல்கள் எமது தொன்மையைத் துடைத்தெறிந்து விட்டன. உங்களுக்கும் ஒரு பாரம்பரியமா, உங்களுக்கும் ஒரு தொடர் கதையா என்று கேட்பது போல் காப்பாற்றி வைத்த நூலோவியங்களைக் கரும் புகைக்கு ஆளாக்கி விட்டார்கள் கயவர்கள் சிலர். ஆனால் அதனால் எமது வரலாறு வாழாத ஒரு வாழ்க்கை என்று ஆகிவிடாது. எமது பாரம்பரியம் பாதியில் பறிபோன பரம்பரை வழி என்றாகிவிடாது. எமது கர்ண பரம்பரை காற்றோடு காற்றாகி விட்ட கருத்துக்கள் என்றாகிவிடாது.

தீயினால் தீயவர்கள் தீய்த் திருந்தாலும் எமது வரலாறுந், தொன்மையும், பாரம்பரியங்களும், பல்கலைகளும், பாடப் புத்தகங்களில் இருந்து பறிமுதல் செய்யப்பட்டிருந்தாலுங் கூட இப்பேர்ப்பட்ட ஆவணப்படுத்தல்கள் மூலம் எமது பல காலப் பண்பாடு, வளமான வரலாறு, சிறப்பான வாழ்க்கைமுறை யாவும் அம்பலப்படுத்தப்படுவன. எமது வடமாகாணம் எங்கிலும் வாழ் எம்மவர் தம் பாரம்பரியங்களைத் இனித் தரமாக வெளிக் கொண்டுவர வழியமைத்துக் கொடுத்துள்ளீர்கள்.

இதேபோன்று சகல எமது செயலகங்களும் தம் தனியிடத்துத் தகைமைகளை, தத்துவங்களை, தொன்மையான தரவுகளை ஆவணப்படுத்த முன்வந்துள்ளதாக அறிகின்றேன்.

வரலாறு இல்லாது வள்ளத்தில் வந்த வகையற்ற மக்களே எம்மவர்கள் என்று அதிகாரத்தில் உள்ளவர்கள் எமது வரலாறு தெரியாது பிதற்றுவதைச் சரிசெய்ய சகல எமது செயலகங்களும் இவ்வாறான கலையான, களையான கைங்கரியங்களில் ஈடுபடுவது எமக்கு நல்லதொரு எதிர்காலத்தை நல்கும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

## திருநெறிய தமிழ்மன்றக்கழகம் நடத்தும் பண்ணிசைப் போட்டி

(யாழ்ப்பாணம்)

இணுவில் ஸ்ரீபரராஜசேகரப் பிள்ளையார் கோவில் திருநெறிய தமிழ் மறைக் கழகம் நடத்தும் பண்ணிசைப்போட்டி எதிர்வரும் மேமாதம் 10 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 8.30 மணிக்கு கோவில் மணிமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

விண்ணப்பக் கட்டணமாக கீழ்ப்பிரிவு தரம் 4, 5, 6 இற்கு 25 ரூபாவும் மத்தியபிரிவு தரம் 7,8, 9 மற்றும் மேற்பிரிவு தரம் 10, 11, 12 இற்கு 50 ரூபாவும் செலுத்தப்பட வேண்டும்.

போட்டி விதிகள் பின்வருமாறு,

பிரிவுக்குரிய பாடல்கள் யாவும் மனனம் செய்திருத்தல்.

பரிசில்களும் சான்றிதழ்களும் ஒவ்வொரு பிரிவிலும் முதலாம் இடத்தைப் பெறுவோருக்கு தங்கப் பதக்கமும் ஏனையோருக்கு முதல் 3 இடங்களுக்குப் பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.

நால்வர் துதி சொல்லித் தொடங்க வேண்டும். இப்போட்டியில் கலந்து கொள்ளும் மாணவர்கள் தங்களுக்குரிய சமய ஆசாரத்துடன் கலந்து கொள்ள வேண்டும்.

விண்ணப்பப்படிவத்தில் பிரிவு, மாணவர் முழுப்பெயர், முகவரி, பால், பிறந்ததிகதி 31.04.2014 இல் வயது என்பன அதிபரால் அல்லது தலைவரால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

போட்டிகள் கீழ்ப்பிரிவு, மத்திய பிரிவு, மேற்பிரிவு என, 3 பிரிவுகளாக நடத்தப்படவுள்ளன.

விண்ணப்ப முடிவுத்திகதி 24.04.2015 இற்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

சென்ற வருடங்களில் ஏதாவதொரு பிரிவில் பங்குபற்றித் தங்கப் பதக்கம் பெற்ற மாணவர்கள் மீண்டும் அதேபிரிவில் பங்குபற்றி போட்டியிட முடியாது.

பிந்திய விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

விண்ணப்பப்படிவங்களை கீழ்காணும் முகவரியில் சேர்ப்பிக்கவும்.

திருமதி வை.கணேசபிள்ளை (ஓய்வு பெற்ற ஆசிரியை, அமைப்பாளர், திருநெறிய தமிழ்மறைக்கழகம், இணுவில் தெற்கு, இணுவில்)

மணிமண்டபம் ஸ்ரீபரராஜ சேகரப்பிள்ளையார் கோவில், இணுவில் தெற்கு, இணுவில்

இணுவில் பொதுநூலகம் சனசமூக நிலையம், இணுவில் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

## கடை உடைத்து திருட்டு

(கரணவாய்)

நெல்லியடி நகரப் பகுதியில் நேற்று முன்தினமிரவு தேநீர் கடை ஒன்று உடைக்கப்பட்டு 9 ஆயிரம் ரூபா பணம் திருடப்பட்டுள்ளது.

நேற்று முன்தினமிரவு 9.30 மணியளவில் கடை உரிமையாளர் தமது கடையைப் பூட்டிவிட்டுச் சென்ற பின்னர் இத்திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பாக விஜயன் கபே உரிமையாளரால் நேற்று நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-3-60)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதார ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கு தீர்மானம்

**(கொழும்பு)**

**சுவீடன் பிரதமர் ஸ்டீவன் லொபென், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆகியோருக்கு இடையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சந்திப்பில் இலங்கைக்கும், சுவீடனுக்கும் இடையில் பொருளாதார ஒத்துழைப்புக்களை மேம்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.**

ஜனாதிபதி உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு சீனாவுக்கு சென்றுள்ள நிலையிலேயே இச்சந்திப்பு இடம்பெற்றுள்ளது என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.



இந்த சந்திப்பில் இலங்கை ஜனாதிபதியின் வெற்றியை பாராட்டிய சுவீடன் பிரதமர், இலங்கையின் தற்போதைய அரசாங்கம் மேற்கொண்டுள்ள அபிவிருத்தி திட்டங்களையும் வரவேற்றுள்ளதுடன், எதிர்காலத்தில் தமது நாட்டு சுற்றுலா பயணிகளை அதிகளவில் இலங்கைக்கு அனுப்புவதற்கான வேலைத்திட்டங்களையும் மேற்கொள்வதாக தெரிவித்துள்ளார்.

மேலும் இலங்கையின் வளர்ச்சிக்கு சுவீடன் அரசாங்கம் எப்பொழுதும் உறுதுணையாக இருக்கும் என தெரிவித்ததோடு இருநாட்டு பொருளாதார ஒத்துழைப்புக்களையும் மேலும் வலுப்படுத்த வேண்டும் என அவர் மேலும் கேட்டுக் கொண்டுள்ளார். (இ-5)


கோடை கால

**ஃபேஷியல்கள்**



(சி-494)

இப்போது தூரிகையில்...
குளிரூட்டப்பட்ட இதமான சூழலில்
எமது வழமையான கட்டணங்களில்
செய்து கொள்ளலாம்.

**முற்பதிவுகளுடன் ஞாயிறுகளிலும் ஃபேஷியல் செய்து கொள்ளலாம்**

**தூரிகை பியூட்டி பார்லர்**

மத்திய கல்லூரி வீதி, நெல்லியடி


## அபிஷேக ஆராதனை

யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணை வடகிழக்கு கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தான பங்குனி உத்தரத்தை முன்னிட்டு எதிர்வரும் ஏப்ரல் மாதம் 3ஆம் திகதி வெள்ளிக்கிழமை அபிஷேக ஆராதனை நிகழ்வுகள் நடைபெற வுள்ளன.

அன்றைய தினம் முற்பகல் 10.30 மணியளவில் விநாயகப் பெருமானுக்கும் முருகப் பெருமானுக்கும் அபிஷேகம் நடைபெற்று மூலமூர்த்தி பூஜை, வசந்த மண்டபப்பூஜையுடன் விநாயகப் பெருமான் திருவீதியுலா வரவுள்ளார். (இ-3)

## தேர்த்திருவிழா

(யாழ்ப்பாணம்)

வண்ணை வைத்தீஸ்வரன் ஆலய தேர்த் திருவிழா எதிர்வரும் ஏப்ரல் மாதம் 2 ஆம் திகதி முற்பகல் இடம்பெறவுள்ளது. (இ)


**பண்டிதர் பரந்தாமன் கவின்கலைக் கல்லூரி**

**கலை மேலோர் விருது வழங்கல்- 2014**

**விண்ணப்பம் கோரல்**

பண்டிதர் பரந்தாமன் கவின்கலைக் கல்லூரியின் முதலாம் ஆண்டு நிறைவையொட்டி இயல் இசை நாடகம் ஆகிய துறைகளுக்கான "கலை மேலோர் விருதும் பொற்கிழியும் வழங்கல் 2014"

மேற்படி துறைகளுக்கான சிறந்த கலைஞர்களுக்கு ஒவ்வோர் ஆண்டும் கலை மேலோர் விருதும் பொற்கிழியும் வழங்கி மதிப்பளிக்கப்படவுள்ளதனால் இதற்கு தகுதியும் ஆற்றலும் உடையவர்கள் தமது விண்ணப்பத்தினை சான்றாவணங்களின் படிகளுடனும் ஒளிப்படங்களுடனும் கீழ்வரும் முகவரிக்கு 2015.04.20 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**விதிமுறைகள்:-**

01.மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் மட்டும் விண்ணப்பிக்க முடியும்.

02.50 அகவைக்கு மேற்பட்ட இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

03.ஒரு மாவட்டத்திற்கும் மூன்று துறைகளுக்கும் தனித்தனியாகத் தகுதியான ஒரு கலைஞர் மட்டும் தெரிவு செய்யப்படுவார்.

04.தெரிவுக்குழுவின் முடிவே இறுதியானது.

**குறிப்பு: கலைமன்றம், தமிழ்மன்றம் என்பன தகுதியான கலைஞரை இனம்கண்டு அவர்களின் சார்பில் விண்ணப்பங்களை அனுப்பிவைக்கமுடியும்.**

**அனுப்பவேண்டிய முகவரி:** **இயக்குநர் பண்டிதர் பரந்தாமன்**
**கவின்கலைக்கல்லூரி,**
**எண் -9, 2ஆம் குறுக்குத்தெரு,**
**கிளிநொச்சி.**
**தொடர்புகளுக்கு 0772880830, 0778049166**

(சி-509)



இவர்களுக்கு மணமகள் தேவை — கல்யாண மாலை — இவர்களுக்கு மணமகன் தேவை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>கி.பா: 37<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: Dip in teaching/ ஆசிரியர்<br>தொ.இ: B/4322 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா: 28 சூரிசெவ் 4 இல்<br>உயரம்: 166cm<br>தகைமை/தொழில்: BA<br>தொ.இ:G/4330 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 8<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: A/L/ தனியார் தொழில்<br>தொ.இ: B/4323 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா: 70 செவ் 1 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: BED/ ஆசிரியர்<br>தொ.இ: G/4331 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 34 1/2<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: BSC/ QS கட்டார்<br>தொ.இ: B/4324 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 62 சூரிசெவ் 7 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: O/L<br>தொ.இ: G/4333 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 27<br>தகைமை/தொழில்: O/L லண்டன் NOT PR<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம்<br>தொ.இ: B/4325 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 36 செவ் 12 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/4334 |

**கல்யாண மாலை**

(சர்வதேச திருமண சேவை)

இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்

பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே

தொடர்பு:- 021 720 1005

E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

அலுவலகம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வடக்கு முதலமைச்சருக்கும் பிரதமருக்கும் இடையிலான முறுகல் கட்சிக்குள்ளும் குழப்பத்தை ஏற்படுத்துகின்றது

## சிவசக்தி ஆனந்தன் எம்.பி.தெரிவிப்பு

(குருமன்காடு)

**வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் இடையில் முறுகல் நிலை காணப்படுகின்றது. வடக்கு மாகாண முதலமைச்சரை புறக்கணித்து பிரதமர் நிகழ்வுகளை நடத்துவது கட்சிக்குள்ளும் குழப்பத்தை ஏற்படுத்துகின்றது என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.**

வவுனியா, பூவரசன்குளம் மகாவித்தியாலய தொழில்நுட்ப ஆய்வு கூடத்தை கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதாகிருஷ்ணன் அண்மையில் திறந்து வைத்தார்.

இத்திறப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வன்னி மாவட்டத்தின் வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய பகுதிகளில் கல்வி தொடர்பான பல பிரச்சினைகள் இருக்கின்றன. இவை தொடர்பாக கலந்துரையாடி தீர்வுகளை எட்டுவதற்கு கல்வி அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும். மாகாண மற்றும் தேசிய பாடசாலைகளில் பௌதீக வளப்பற்றாக்குறை, ஆசிரியர் பற்றாக்குறை, அதிபர் பிரச்சினை என நிறையவே பிரச்சினைகள் இருக்கின்றன. இவற்றுக்கு நாம் ஒரு தீர்வு காண வேண்டும். அதேநேரம் நாங்களும் அமைச்சரும் விரைவாக நாடாளுமன்ற தேர்தல் ஒன்றை சந்திக்க இருக்கின்றோம். எனவே இருக்கக் கூடிய குறுகிய காலத்திற்குள்ளே இவற்றை தீர்க்கக் கூடிய வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

கடந்த காலத்தில் வன்னி பாடசாலைகளில் பலர் தொண்டர் ஆசிரியர்களாக கற்பித்துள்ளார்கள். அவர்களது பிரச்சினை பாரிய பிரச்சினை. 400இற்கு மேற்பட்ட தமிழ் தொண்டர் ஆசிரியர்களும் 177இற்கு மேற்பட்ட சிங்கள தொண்டர் ஆசிரியர்களும் இருக்கிறார்கள். இவர்கள் கடந்த கால அரசாங்கத்தால் ஏமாற்றப்பட்டவர்கள். இவர்கள் இருக்கும் போதே வேறு பலர் நியமனங்களை பெற்றுள்ளார்கள்.

எனவே இவர்களுக்கும் நியமனம் வழங்க வேண்டும். தற்போது கட்சி பேதமில்லாமல் எல்லோரும் ஒன்று சேர்ந்து செயற்பட முடிகிறது. ஆனால் கடந்த ஆட்சிக் காலத்தில் அவ்வாறு செய்ய முடியவில்லை. தமிழ் மக்கள் எல்லோரும் இணைந்து இந்த மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளார்கள். இந்த மாற்றம் நிரந்தரமான ஒரு மாற்றமாக இருக்க வேண்டும். தமிழ் மக்களுக்கு ஒரு தீர்வினை தரவேண்டும்.

வடக்கிற்கு விஜயம் செய்கின்ற பிரதமர், அமைச்சர்கள், ஜனாதிபதி ஆகியோர் இந்த மாற்றத்தை ஏற்படுத்திய தமிழ் தேசியக் கூட்டமைப்பினருடன் இணைந்து செயற்பட வேண்டும். கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள், உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் எல்லோரும் மாற்றத்திற்காக வேலை செய்திருக்கிறார்கள்.

ஆனால் எங்களுக்கு ஒரு கவலை என்ன வென்றால் வடக்கிற்கு விஜயம் செய்த ரணில் விக்கிரமசிங்கவுக்கும் வடக்கின் முதலமைச்சருக்கும் இடையில் முறுகல் நிலை காணப்படுகிறது. தேசிய அரசாங்கம் என்ற வகையில் இதற்கு விரைவாக முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். நாம் இணைந்து செயலாற்றியே அபிவிருத்தி உள்ளிட்ட பல வேலைகளை செய்ய வேண்டியுள்ளது. அண்மையில் வடக்கிற்கு வந்த பிரதமர் முதலமைச்சருக்கு முறையான அழைப்புக்களை வழங்கவில்லை.

வடக்கின் முதலமைச்சர், அதிகபடியான தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்டவர். அவரை புறக்கணித்து வடக்கில் நடவடிக்கைகளையும் முக்கிய நிகழ்வுகளையும் மேற்கொள்வது கவலை தருகிறது.

இது கட்சிக்குள் குழப்பதை ஏற்படுத்துகிறது. எனவே இதனை நாம் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த அரசாங்கம் இந்த விடயத்தில் கவனம் செலுத்த வேண்டும் எனவும் தெரிவித்தார். (2-250)





வவு/ பூவரசு ஆரம்ப பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு அண்மையில் பாடசாலையின் அதிபர் தலைமையில் நடைபெற்ற போது....

(படங்கள்:-குருமன்காடு செய்தியாளா)

# அபிவிருத்திப் பணிக்கென ஒதுக்கப்படும் நிதி உரிய முறையில் பயன்படுத்தப்படுவதில்லை

## பொதுமக்கள், கிராமமட்ட அமைப்புக்கள் கவலை

(ஜெயந்திநகர்)

பாராளுமன்ற உறுப்பினர்கள், வட மாகாணசபை உறுப்பினர்கள் ஆகியோர் பொதுமக்களின் அபிவிருத்திப் பணிக்கென ஒதுக்கீடு செய்கின்ற நிதி உரிய வகையில் பயன்படுத்தப்படுவதில்லையென கிராமமட்ட அமைப்புக்களும் பொதுமக்களும் விசனம் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது, வடக்கு மாகாண சபை உறுப்பினர் சு.பசுபதிப்பிள்ளையின் 2014 ஆம் ஆண்டிற்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியில் தனக்கு ஒதுக்கப்பட்டதில் இருந்து 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பணத்தினை பேருந்து தரிப்பிடம் கட்டுவதற்காக வழங்கியுள்ளார்.

குறித்த பேருந்து நிலையம் பூநகரி பல்லவராயன் கட்டு சந்தியில் வலைப்பாடு, கிராஞ்சி , வேரவில் ஆகிய இடங்களைச் சேர்ந்த மக்களின் நலன்கருதி பூநகரி பிரதேச சபையினரால் அமைக்கப்பட்டுள்ளது.

இப்பேருந்து தரிப்பிடத்தின் வேலைகள் பூர்த்தி செய்யப்படாமல் அரைகுறையாக வீதிப்போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

இக்கட்டடம் முழுமை பெறாமையால் அதில் தரித்து நின்று பயணத்தை மேற்கொள்ள முடியாது உள்ளதாக பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதேபோன்று முழங்காவில் மார்க்கண்டு வீதியில் அமைக்கப்பட்டுள்ள விநாயகர் முன்பள்ளிக்கு 2014 ஆம் ஆண்டு வடக்கு மாகாண சபை உறுப்பினர் ப.அரியரத்தினத்தால் ஒரு இலட்சம் ரூபா நிதி முன்பள்ளி உபகரணங்களின் கொள்வனவிற்கென ஒதுக்கப்பட்டது.

கிளிநொச்சி உள்ளூராட்சித் திணைக்களத்தினால் இந்நிதி ஊடாக பொருட்கள் வழங்குவதற்கான பட்டியல் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டு ஒப்பம் பெறப்பட நிலையில் இன்றுவரை அப்பொருட்கள் முன்பள்ளிக்கு வழங்கப்படவில்லையென தெரிவிக்கப்படுகின்றது.

எனவே மக்களின் அபிவிருத்திப் பணிக்கென நிதியை ஒதுக்கீடு செய்பவர்கள் நிதியொதுக்கீடு செய்வதோடு நின்றுவிடாமல் அதன்பலன் சரியான முறையில் மக்களைச் சென்றடைவதையும் உறுதிப்படுத்தவேண்டுமென பொதுமக்களும் கிராமமட்ட அமைப்புக்களும் கோரிக்கை விடுக்கின்றன. (2-284)




# விபத்துக்களை தடுக்கும் துண்டுபிரசுரங்கள் பொலிஸாரால் பொதுமக்களுக்கு விநியோகம்

(மல்லாவி)

வீதி விபத்துக்களைத் தடுக்கும் நோக்கில், மாங்குளம், மல்லாவி ஆகிய இடங்களைச் சேர்ந்த பொலிஸார், நகர வர்த்தகர்களுடன் இணைந்து மாணவர்களுக்கும் பொதுமக்களுக்கும் வீதி விபத்துக்கள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகின்றனர்.

அத்துடன் விபத்துக்களை ஏற்படுத்தும் காரணிகளைக் கண்டறிந்து நடவடிக்கை மேற்கொள்வதுடன் துவிச்சக்கர வண்டிகளுக்கு ஒளி தெறிப்படையக் கூடிய மஞ்சள் நிற ஸ்ரிக்கர்களையும ஒட்டி வருகின்றனர்.

இந்நிலையில் ஏ-9 வீதியிலுள்ள மாங்குளம் பொலிஸார், மு/மாங்குளம் மகா வித்தியாலயம், மு/சண்முகரெட்ணம் ஆரம்ப வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் கல்வி பயின்று வருகின்ற மாணவர்களுக்கு அண்மையில் வீதி விபத்து தொடர்பான அறிவுறுத்தல்களை வழங்கியதுடன் மாணவர்களின் துவிச்சக்கர வண்டிகளுக்கு இரவு நேரத்தில் ஒளி தெறிப்படையக்கூடிய மஞ்சள் நிற ஸ்ரிக்கர்களையும் ஒட்டியுள்ளனர். இதேபோன்று பொதுமக்களின் துவிச்சக்கரவண்டிகளுக்கும் குறித்த மஞ்சள் நிற ஸ்ரிக்கர்களையும் ஒட்டியதுடன் வீதி விபத்துக்களைத்தவிர்ப்பது தொடர்பான ஆலோசனைகளையும் துண்டுப் பிரசுரங்களையும் வழங்கியுள்ளனர்.

இதேபோன்று மல்லாவி பொலிஸார் கட்டாக்காலிகளாக அலைந்து திரயும் கால்நடைகளினால் ஏற்படும் விபத்துக்களில் இருந்து பொதுமக்களை பாதுகாக்கும் நோக்குடன் அவற்றினை மல்லாவி நகரப்பகுதியில் கட்டுப்படுத்தி வருகின்றனர்.

அத்துடன் வீதி போக்குவரத்து பொலிஸார் வாகனங்களுக்கான சாரதி அனுமதிப்பத்திரம் உட்பட ஏனைய ஆவணங்களையும் சோதனை செய்து வருகின்றனர். ஆவணங்கள் இன்றி வாகனங்களைச் செலுத்தும் சாரதிகளுக்கு தண்டப்பணமும் விதிக்கின்றனர். இவர்களது செயற்பாடுகளை அடுத்து பொதுமக்கள் மற்றும் மாணவர்கள் மத்தியில் விபத்து தொடர்பான விழிப் புணர்வு ஏற்பட்டு வருவதை அவதானிக்க முடிகின்றது. (2-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியன் வீட்டுத்திட்டத்தில் புறக்கணிக்கப்பட்ட குடும்பங்களுக்கு தீர்வைபெற்றுத் தாருங்கள்

## இ.தொ.கா.வன்னி மாவட்ட அமைப்பாளர் பிரதமருக்கு கடிதம்

வன்னி மாவட்டத்தின் இந்தியன் வீட்டுத் திட்டத்தின் ஊடாக பல குடும்பங்களுக்கு வழங்கப்படவிருந்த வீடுகள் திட்டமிட்ட வகையில் இல்லாதொழிக்கப்பட்டுள்ளன.

இந்த பாகுபாடு, பாரபட்சம் அநீதிக்கு எதிராக பாதிப்புக்குள்ளான மக்கள் வீதியில் இறங்கிப் போராட்டம் நடத்தியும் தீர்வு கிடைக்கவில்லை.

எனவே பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வீடமைப்பு பிரச்சினைக்குரிய தீர்வை பெற்றுக்கொடுக்குமாறு இ.தொ.கா.வன்னி மாவட்ட அமைப்பாளர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு கடிதம் மூலம் அண்மையில் கோரிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.

அக் கடிதத்தில் அவர் குறிப்பிட்டிருப்பதாவது,

வன்னி யுத்தத்தால் வவுனியா,மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்டத்தில் பல்லாயிரக்கணக்கான குடும்பங்கள் 1990 ஆம் ஆண்டு மீள்குடியேற்றம் செய்யப்பட்டன. இவர்களுக்கு அக்கால கட்டத்தில் தற்காலிக வீடுகள் வழங்கப்பட்டன.

பல வருடகாலம் இக் குடும்பங்கள் கூறப்பட்ட தற்காலிக வீடுகளிலேயே வாழுகின்றன.

இம்மக்களுக்கான நிரந்தர வீடமைப்பு திட்டத்தை உருவாக்க இந்திய அரசு வீடமைப்பு திட்டத்தை ஏற்படுத்திக்கொடுத்துள்ளதை தாங்கள் அறிவீர்கள்.

வவுனியா செட்டிக்குள பிரதேச செயலகப்பிரிவு, வவுனியா பிரதேச செயலக பிரிவு, நெடுங்கேணி பிரதேச செயலக பிரிவு ஆகிய வ ற்றினுள் வரும்பல கிராமங்கள் இந்த வீடமைப்புத்திட்டத்தில் உள்வாங்கப்படவில்லை.

எனவே சம்பந்தப்பட்ட மக்கள் உரிய வீடு வசதிஇல்லாது பல்வேறு மன அழுத்தங்களுக்கும் சொல்லமுடியாத சமூக சீர்கேடுகளுக்கும் நிம்மதியிழந்து தாங்க முடியாத துன்ப சுமையுடன் தமது வாழ்க்கையை நடத்திவருகின்றனர்.

ஆனால் இன்றைய அரசும் எமது தேவைகளை பூர்த்தி செய்வதிலும் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவதிலும் மெத்தனப் போக்கை கடைப்பிடிக்கின்றது என மக்கள் அங்கலாய்க்கின்றனர்.

இந்த விவகாரத்துக்கு சாதக தீர்வை பெற்றுக்கொடுக்குமாறு கோரிக்கை விடுத்து அமைதிப்போராட்டங்கள்நடத்திவவுனியா அரச அதிபர் ஊடாக ஜனாதிபதிக்கு மகஜர் கையளிக்கப்பட்டு தீர்வினை எதிர்பார்த்து காத்திருக்கின்றனர்.

மேலும் இவ்விடயம் தொடர்பாக சமீபத்தில் மீள் குடியேற்ற மற்றும் புனர்வாழ்வு அமைச்சர் சுவாமிநாதன் வவுனியாவிற்கு விஜயம் செய்தபோது பல கிராமத்திலும் கிராம அபிவிருத்திச் சங்க நிர்வாகிகளினாலும் பாதிக்கப்பட்ட மக்களாலும் வீடமைப்பு திட்டத்தில் தாங்கள் புறம்தள்ளப்பட்டுள்ளதையும் இதன் தாற்பாரியத்தால் தாங்கள் அனுபவிக்கின்ற கஷ்ட நிலைமைகளையும் விலாவாரியாக எடுத்துரைத்தனர்.

இதற்குரிய துரித நடவடிக்கை எடுத்து தீர்வு பெற்றுக்கொடுக்கப்படும் என்ற உறுதி மொழி வழங்கப்பட்டுள்ளது. ஆனால் ஜனாதிபதிக்கு கையளித்த மகஜருக்கோ எவ்விதமான தீர்வோ பதிலோ கிடைக்கவில்லையென மக்கள் விசனம் தெரிவிப்பதுடன் இந்த அலட்சிப்போக்கினை கடுமையாக கண்டிப்பதாக கருத்து வெளி--யிடுகின்றனர்.

இதற்குரிய தீர்வு காலக்கிரமத்தில் சம்பந்தப்பட்ட அமைச்சும் அரசும் பெற்றுக் கொடுக்காவிடில் மக்கள் பல்வேறு வழிகளில் வீதியில்இறங்கி போராடுவதாக பகிரங்கமாக கூறுகின்றனர்.

எனவே வேதனையிலும் கண்ணீருடனும் வாழுகின்ற இந்த மக்களுக்கு இந்திய வீடமைப்புத் திட்டத்தில் வீடு பெற்றுக்கொடுக்க தங்களின் நேரடியான கவனத்தையும் தலையீட்டையும் செய்து இம்மக்களுக்கு தீர்வு பெற்றுக்கொடுக்குமாறு மக்கள் சார்பாக வேண்டுகோள் விடுப்பதாக தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (2-250)

## பெய்து வரும் கடும் மழையால் நெற்பயிர்கள் நீரில் மூழ்கின

### விவசாயிகள் ஆதங்கம்

(மன்னார்)

மன்னார், மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் கடந்த சில தினங்களாக தொடர்ந்து பெய்துவரும் கடும் மழை காரணமாக நெல் அறுவடை பாதிப்படைந்துள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

தற்போது அறுவடைக்காலம் ஆரம்பித்துள்ள நிலையில், திடீர் திடீர் என மழை பெய்து வருகின்றமையினால் அறுவடை பாதிக்கப்பட்டுள்ளதோடு அறுவடை செய்ய வேண்டிய நெற்பயிர்கள் மழை நீரில் மூழ்கியுள்ளதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் இம்முறை நெல் விளைச்சல் கிடைக்கப்பெற்றுள்ள போதும் அதனை அறுவடை செய்ய முடியாது காணப்படுவதாகவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர். அதேவேளை, அறுவடை செய்து காய வைத்த நெல் மூடைகளும் மழை நீரில் நனைந்துள்ளதாக அவர்கள் தெரிவித்துள்ளனர். (2)

## மிதிபலகையில் பயணித்த இளைஞனின் கால் முறிந்தது


(தருமபுரம்)

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த புகையிரதத்தில் மிதி பலகையில் அமர்ந்து பயணித்த இளைஞன் ஒருவர் புகையிரத நிலைய மேடையுடன் மோதுண்டு கால்முறிந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில்அனுமதிக்கப்பட்டார்.

இச் சம்பவம் அண்மையில் புளியங்குளம் புகையிரத நிலையத்தில் நடைபெற்றுள்ளது.

இதில் கிளிநொச்சி கண்டாவளையைச் சேர்ந்த நாகராசா நாகரதன் (வயது 31) என்ற இளைஞனே விபத்திற்குள்ளானவர் ஆவார். இது தொடர்பில் தெரியவருவதாவது,

பிரஸ்தாப இளைஞன் குறித்த புகையிரதத்தின் மிதிபலகையில் அமர்ந்து பயணித்துள்ளார். இதன்போது புகையிரத நிலைய மேடையை சென்றடைந்த போது விபத்து நேர்ந்துள்ளது. இதனை அடுத்து இளைஞன் கிளிநொச்சி புகையிரத நிலையத்தில் இறக்கப்பட்டு வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். (2-282)



வன்னி யுத்தத்தில் பாதிக்கப்பட்டு பெற்றோர்களை இழந்து வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மாணவர்களின் கல்வியை ஊக்குவிக்கும் முகமாக துவிச்சக்கர வண்டிகள் அண்மையில் கிளிநொச்சி அறிவகத்தில் நடைபெற்ற நிகழ்வில் வைத்து வழங்கி,வைக்கப்பட்டதைப் படத்தில் காணலாம்.

## மகாகும்பாபிஷேகம்

(கிளிநொச்சி)

முல்லைத்தீவு அம்பகாமம் மம்மில் பிள்ளையார் ஆலயத்தின் மகாகும்பாபிஷேகம் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 6 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.20 தொடக்கம் 10.20 மணி வரையுள்ள சுபவேளையில் நடைபெறவுள்ளது.

இதற்கான ஆயத்த பூசை வழிபாடுகள் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 3 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி நடைபெறும்.

எதிர்வரும் 4,5 ஆம் திகதிகளில் எண்ணெய்க்காப்பு சாத்துதல் நிகழ்வு நடைபெறுமென ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (2-272)




## வைத்தியசாலைகளுக்கு விஜயம் செய்த ஹசன்அலி குறைபாடுகள் குறித்து ஆராய்வு

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் செயலாளரும் சுகாதார இராஜாங்க அமைச்சருமான எம்.ரி.ஹஸன் அலி, நேற்று முன் தினம் முல்லைத்தீவுக்கு விஜயம் செய்தார்.

முல்லைத்தீவுக்கு விஜயம் செய்த சுகாதார இராஜாங்க அமைச்சர், மாஞ்சோலையிலுள்ள மாவட்ட பொதுவைத்தியசாலைக்கு சென்று வைத்தியர்களுடனும் அங்கு கடமை புரியும் ஊழியர்களுடனும் வைத்தியசாலையில் காணப்படும் குறைபாடுகள் பற்றி கேட்டறிந்துகொண்டார்.

அத்துடன், குறித்த வைத்தியசாலையில் காணப்படும் குறைபாடுகள் குறித்து அமைச்சரின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டதுடன், அவற்றை விரைவில் நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் அமைச்சர் இதன்போது வாக்குறுதியளித்தார்.

இதனையடுத்து வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலைக்கு விஜயம் செய்த அவர் அவ் வைத்தியசாலையின் தற்போதைய நிலைமைகள் தொடர்பிலும் தேவைகள் குறித்தும் கேட்டறிந்து கொண்டார்.

வவுனியா வைத்தியசாலையில் இடம்பெற்ற இக் கலந்துரையாடலில் வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான ஹுனைஸ் பாறுக் முத்தலிக் பாவா, வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் ரவீந்திரன், வவுனியா வைத்தியசாலை பணிப்பாளர் கு.அகிலேந்திரன் மற்றும் துறைசார் வைத்தியர்கள், தாதியர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர். (2)

## கரைச்சி பிரதேச செயலகத்தின் நுழைவாயிலை மாற்றி அமையுங்கள்

### பொதுமக்கள் கோரிக்கை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலகத்தின் பிரதான நுழைவாயில் நாற்சந்திக்கு முன்பாக அமைக்கப்பட்டுள்ளது. இப்பிரதேச செயலகத்திற்கு சென்று வரும் பொதுமக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதாகவும் விபத்துக்களைச் சந்திப்பதாகவும் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் அவர்கள் தெரிவிக்கையில,

கிளிநொச்சி புகையிரத நிலையத்திற்கு அண்மையாக அமைந்துள்ள குறித்த பிரதேச செயலகத்தின் நுழைவாயிலின் முன்பாக நான்கு இணைப்பு வீதிகள் காணப்படுகின்றன.

இவ் ஒருங்கிணையும் இடத்திலேயே பிரதான நுழைவாயில் காணப்படுகின்றது.

இருப்பினும் பிறிதொரு நுழைவாயில் இப்பிரதேச செயலகத்திற்கு காணப்படுகின்ற போதிலும் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு அந்நுழைவாயில் திறந்து விடப்படுவதில்லை என பொதுமக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

பொருத்தமற்ற இடத்தில் அமைக்கப்பட்டுள்ள இந்நுழைவாயிலை பயன்படுத்தும் பொதுமக்கள் பல்வேறு அசௌகரியங்களை சந்திப்பதாகத் தெரிவிக்கின்றனர்.

எனவே இவ் விடயத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அக்கறை கொண்டு போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படாத வகையில் பாதையை மாற்றி அமைத்துத் தருமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (2-272)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

1103



# முன்யோசனை!

...நீங்கள் அங்கே போவதால் உங்கள் பீப்பாய்களிலுள்ள நீரைக் கொட்டிவிட்டு புதிதாக நீரை நிரப்பிக் கொள்ளுங்கள்." என்று கூறினான். அந்த வண்டியில் இருந்தவனும் அவனோடு வந்த ஆட்களும் மனிதர்களைக் கொன்று தின்னும் ராட்சஸர்கள். அவ்வழியே வருபவர்களைப் பேச்சால் மயக்கி அவர்களைத் தாகத்தாலும் பசியாலும் தவிக்கவட்டு இறந்துபோகச் செய்து அந்த உடல்களைத் தின்றுவிடுவார்கள்.

இதை அறியாத மந்தமதி தன் வண்டிகளில் இருந்த பீப்பாய்களில் இருந்த தண்ணீரைக் கொட்டி காலி செய்தான். பிறகு பயணத்தைத் தொடரவே அந்த கனவான் காட்டிய காட்டை அடைய முடியவில்லை. அவன் போகப் போக அந்தக் காடும் நகர்ந்து போய்க் கொண்டே இருந்தது. எங்கும் மழை பெய்த தடயமும் இருக்கவில்லை. மந்தமதியும் அவனது ஆட்களும் தண்ணீருக்குத் தவித்து நாவறண்டு இறந்து போனார்கள். அவர்களது வண்டிகளை இழுத்து வந்த எருதுகளும் இறந்துபோயின. இறந்துபோன மனிதர்களையும் எருதுகளையும் ராட்சஸர்கள் தின்றனர். மிகுந்த எலும்புகளை அந்தப் பாலைவனத்திலேயே விட்டு விட்டுப் போனார்கள்.

மந்தமதி கிளம்பிப் போய் பதினைந்து நாட்களான பிறகே போதிசத்வர் தம் வண்டிகளில் சரக்குகளையும்நீரையும்உணவையும் எடுத்துக்கொண்டு சென்றார். எல்லோரும் பாலைவணப் பகுதியை அடைந்தபோது போதிசத்வர் தம் ஆட்களிடம் "இந்தப் பகுதி அபாயகரமானது என்று கேள்விப்பட்டிருக்கிறேன். இங்கு மனிதமாமிசத்தை விரும்பி உண்ணும் ராட்சஸர்களின் நடமாட்டம் உள்ளது எனவும் கேள்விப்பட்டிருக்கிறேன். அவர்கள் பயணிகளிடம் நயமாகப் பேசி ஏமாற்றி அவர்களைத் தம் வலையில் சிக்க வைப்பார்களாம். எனவே நீங்கள் என்னிடம் கேட்காமல் எதையும் செய்யக் கூடாது" என்று எச்சரித்தார். அவர்கள் கொஞ்சத் தூரத்தில் அழகிய வண்டியில் வரும் கனவான் போன்றவனையும் அவனது ஆட்களையும் பார்த்தார்கள்.

அந்த கனவான் போலிருந்தவன் மந்தமதியிடம் கூறியது போலவே போதிசத்வரிடம் சொன்னான். போதிசத்வரோ "நீங்கள் சொல்லி முடித்தாகிவிட்டதல்லவா? உங்கள் வழியே போங்கள். தண்ணீரைக் கண்ட பிறகே எங்கள் பீப்பாய்களிலுள்ள நீரைக கொட்டிவிட்டுப் புதிதாக நிரப்பிக் கொள்வோம்" என்றார். அதைக் கேட்ட அந்த ராட்சஸர்கள் "உங்கள சிரமத்தைக் குறைக்கலாம் என்று எண்ணியே இதைக் கூறினோம. இதன்படி நடப்பதும் நடக்காததும் உங்கள் இஷ்டம்" என்று சலிப்புடன் கூறினார்கள். போதிசத்வரோ அவர்கள் கூறியதை ஏற்காததால் எதுவும் பேச முடியாமல் மௌனமாகச் சென்றார்கள். போதிசத்வரும் "பார்த்தீர்களா? நாம் வந்த இவ்வளவு தூரத்தில் மழை பெய்யவே இல்லை. ஈரக் காற்றும் வீசவில்லை. ஆகாயத்தில் ஒரு மேகம் கூடத் தெண்படவில்லை.எனவே இவர்கள் சொனனது எல்லாம் பொய் என்றும் இவர்கள் மனிதர்களைக் கொன்று தின்னும் ராட்சஸர்கள் என்றும் புரிந்து கொண்டேன். நம்மை ஏமாற்றப் பார்த்தார்கள், முடியவில்லை. நமக்கு முன் இங்கு வந்த மந்தமதியையும் அவனது ஆட்களையும் ஏமாற்றிக் கொன்று விட்டார்கள் போலிருக்கிறது" எனறார்.

அவர்கள் கொஞ்சத்தூரம் போனதும் மனித எலும்புக் கூடுகளையும் எருதுகளின் எலும்புகளையும் கண்டார்கள். மந்தமதி கொண்டு சென்ற சரக்குகளைக் கண்டு அவர்கள் அவற்றையும் தம்மோடு எடுத்துப் போய் விற்று லாபம் அடைந்தார்கள். போதிசத்வரின் முன் யோசனையால் ஒருவர் கூட உயிர் இழக்கவில்லை.

(முற்றும்)



03.2015
30

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1632 - கியூபெக் ஆங்கிலேயரிடம் இருந்து பிரெஞ்சுக்களிடம் கைமாறியது.
- 1792 - 13 நாட்களின் முன்னால் சுடப்பட்ட சுவீடனின் மூன்றாம் குஸ்தாவ் மன்னன் இறந்தான்.
- 1807 - 4 வெஸ்டா என்ற இதுவரை அறிந்தவற்றில் மிக வெளிச்சமான சிறுகோளை ஜேர்மனிய வானியலாளர் ஹைன்ரிக் ஓல்பர்ஸ் கண்டுபிடித்தார்.
- 1849 - பஞ்சாபை ஐக்கிய இராச்சியம் கைப்பற்றியது.
- 1857 - பிரித்தானியக் கிழக்கிந்தியக் கம்பனியின் வங்காள இராணுவத்தைச் சேர்ந்த மங்கல் பாண்டே என்ற சிப்பாய் பிரித்தானிய ஆட்சிக்கெதிராக கிளர்ச்சியை ஆரம்பித்தார். இதுவே பின்னர் இந்திய விடுதலைப் போருக்கு முன்னோடியாக அமைந்தது.
- 1867 - கனடாக் கூட்டமைப்பை ஜூலை 1 இல் உருவாக்குவதற்கான பிரித்தானிய வட அமெரிக்க சட்டத்தை பிரித்தானியாவின் விக்டோரியா மகாராணி அரச ஒப்புதலை அளித்தார்.
- 1886 - ஜோர்ஜியாவின் அட்லாண்டாவில் ஜோன் பெம்பேர்ட்டன் என்பவர் முதல் தொகுதி கொகக் கோலா மென்பானத்தைத் தயாரித்தார்.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: வி-1 பறக்கும் குண்டு கடைசித் தடவையாக இங்கிலாந்தைத் தாக்கியது.
- 1971 - மைலாய் படுகொலைகள்: அமெரிக்காவின் லெப்டினண்ட் வில்லியம் கலி என்பவன் கொலைக் குற்றம் சாட்டப்பட்டு ஆயுள் தண்டனை பெற்றான்.
- 1973 - வியட்நாம் போர்: அமெரிக்கப் படைகள் தெற்கு வியட்நாமை விட்டு முற்றாக வெளியேறினர்.
- 1974 - நாசாவின் மரைனர் 10 விண்கலம் புதன் கோளை அண்மித்த முதலாவது விண்கலம் என்ற பெயரைப் பெற்றது.
- 2004 - பல்கேரியா, எஸ்தோனியா, லாத்வியா, லித்துவேனியா, ருமேனியா, சிலோவாக்கியா, சிலொவேனியா ஆகியன நேட்டோ அமைப்பில் முழுமையான அங்கத்துவம் பெற்றன.
- 2004 - அயர்லாந்து புகைத்தலை உணவகங்கள் உட்பட எல்லா வேலையிடங்களிலும் தடை செய்த முதல்நாடானது.
- 2005 - யாஹூ 360 சேவை ஆரம்பிக்கப்பட்டது.
- 2007 - கணிதத்தில் நோபல் பரிசு எனப்படும் நோர்வே நாட்டின் ஏபல் பரிசு தமிழரான சீனிவாச வரதனுக்கு அறிவிக்கப்பட்டது.

### பிறப்புக்கள்

- 1790 - ஜான் டைலர், 10ஆவது அமெரிக்க ஜனாதிபதி (இ. 1862)
- 1927 - ஜோன் வேன், நோபல் பரிசு பெற்ற ஆங்கிலேயர் (இ. 2004)
- 1941 - ஜோசப் டெய்லர், இளையவர், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர்

### இறப்புக்கள்

- 1985 - ஜார்ஜ் பீட்டர் மர்டாக், மானிடவியலாளர் (பி. [illegible])
- 2000 - [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் வாழ்க்கை வரலாறு

92

...“ஆனாலும், அட்வான்ஸ் பணத்தைத் திருப்பித் தரவேண்டாம். அதை நீயே வச்சுக்க. உன் இஷ்டப்படியே போ. என்றைக்காவது ஒருநாள், மீண்டும் நடிக்க வேண்டும் என்று நிச்சயமாகத் தோன்றும். அப்போது நீ திரும்பி வா!”என்று கூறினார். அதற்கு மேல்தன் குருநாதரிடம் வாதாடாமல், பணத்துடன் திரும்பினார்.

மனம் தனிமையை நாடியது. சில நாட்கள் ஊர் ஊராகச் சுற்றித் திரிந்தார். பின்னர் சென்னை திரும்பினார்.

**முத்துராமன் சந்திப்பு**

இந்த சமயத்தில் ரஜினியின் அதிக படங்களை டைரக்ட் செய்தவரான எஸ்.பி.முத்துராமன், அவரை சந்தித்தார்.

“ரஜினி! கோடிக்கணக்கான ரசிகர்கள் உனக்கு இருக்கிறார்கள். இவ்வளவு பேருடைய அன்பும், ஆதரவும் ஒருசிலருக்கு மட்டுமே கிடைக்கும். கடவுள் அருளால் உனக்கு கிடைத்திருக்கிறது. இப்போது நீ தனி மனிதன் அல்ல. மக்களின் பொதுச்சொத்து. எனவே தொடர்ந்து நடிக்க வேண்டும்” என்றார், எஸ்.பி.முத்துராமன்.

ரஜினி இதை பொறுமையாக கேட்டுக்கொண்டார். முத்துராமன் தொடர்ந்து சொன்னார்:-

“படங்களில் நீ நடிப்பதால், பலன் அடைகிறவர்கள் ரசிகர்கள் மட்டும் அல்ல. படத்துக்கு கதை-வசனம் எழுதுகிறவர்கள், இசை அமைப்பவர்கள், பாடுகிறவர்கள், ஒளிப்பதிவு செய்கிறவர்கள், தயாரிப்பாளர்கள், தியேட்டர்காரர்கள், நோட்டீஸ் ஒட்டுகிறவர்கள் என்று லட்சக்கணக்கான பேர் உன்னால் வாழ்க்கை நடத்துகிறார்கள். நீ படத்தில் நடிக்காவிட்டால், இவ்வளவு பேரும் பாதிக்கப்படுவார்கள்.”



முத்துராமன் சொன்னதையெல்லாம் ரஜினி கேட்டுக்கொண்டாரே தவிர, பதில் ஏதும் கூறவில்லை.

நடிகர் கமலஹாசன் மற்றும் ரஜினி மீது அன்பு கொண்ட பலரும் ரஜினியை சந்தித்துப் பேசியும், அவர் மனம் மாறவில்லை. தன் முடிவில் உறுதியாக இருந்தார்.

**ரசிகர்களின் சக்தி**

இதற்குள் விடயம் வெளியே பரவிவிட்டது. ரஜினியின் ரசிகர்கள் பெரும் அதிர்ச்சி அடைந்தனர்.

ரசிகர்கள் கூட்டம் கூட்டமாக ரஜினியின் வீட்டுக்குச் சென்றார்கள். “வேண்டாம், இந்த முடிவு!” என்று கெஞ்சினார்கள். ரஜினி மவுனமாக இருந்தார்.


“உங்கள் முடிவை மாற்றிக் கொள்ளாவிட்டால், தீக்குளிப்போம்” என்று ஆவேசத்துடன் முழக்கமிட்டார்கள், ரசிகர்கள்.

ரசிகர்கள் தன் மீது கொண்டுள்ள அன்பைக் கண்டு மனம் நெகிழ்ந்தார், ரஜினி.

தன்னிடம் எந்த சிறு உதவியும் பெறாதவர்கள், தனக்காக உயிரையும் கொடுக்கத் தயாராக இருப்பதைக்கண்டு கண் கலங்கினார்.

அவர் மனம் மாறியது. தொடர்ந்து நடிக்க முடிவு எடுத்தார்.

ரசிகர்களின் அன்பு, ரஜினியிடம் புதிய உத்வேகத்தை உண்டாக்கியது. முன்பைவிட வேகத்துடனும், துடிப்புடனும் நடிக்கலானார். *(தொடரும்)*



# கருவாச்சி காவியம்



**வைரமுத்து- 103**

...பெத்த பிள்ளைக்காகத் தத்துப்பிள்ள தலய வெட்டலாமா? நீயே சொல்லு. நியாயமா? ஆத்தா ஒன் நேத்திக்கடன நான் இல்லேங்கல. தெரிஞ்சதப் பாருன்னு சொல்லிட்டுத் திரும்பிப்போக வரல. எம் பொழப்பு தழப்பு நல்லாருந்தா சந்தையில ஒரு கெடாய வெலைக்கு வாங்கி வெட்றேன். அதுக்கும் எனக்கும் விதியில்லையா.. நான் வளத்த பூலித்தேவன் தன்சாவு வந்து செத்தா ஒன் வாசல்ல குழியெடுத்துப்பொதைச்சுக் கும்பிட்டுப் போயிடறேன். என்ன நான் சொல்றது?

சொல்றதச் சொல்லிப்பிட்டேன்; செய்யிறதச் செஞ்சுக்கன்னு நெனச்சுக்கிட்டு பூலித்தேவன ஒரு கையிலயும் பிள்ளைய ஒரு கையிலயும் புடிச்சு விறுவிறுன்னு கருவாச்சி வெளியேறிட்டா கோயில விட்டு.

சுத்துவட்டாரமெல்லாம் பூலித்தேவன்... பூலித்தேவன்னு.... பெரும் பேராகிப்போச்சு. அது வீட்ட விட்டு வெளியேறி வீதிக்கு வந்து, கட கட கடன்னு தலையாட்டிக் கொம்ப ஒரு சிலுப்புச் சிலுப்பி ரெண்டு பக்கமும் அண்ணாந்து பாக்கிற அழகப் பாக்கவே வேல வெட்டியப் போட்டுட்டு வெளிய நிக்கிது ஊருசனம். புலிக்கும் பூலித்தேவனுக்கும் சண்ட வந்தா, புலியப் போட்டுத் தள்ளிருமப்பா பூலித்தேவன்னு பேசுது ஊரு. அஞ்சாறு ஊருக்குப் பொலிகடா அதுதான். பூலித்தேவன் கொம்பத் தொட்டுப்புட்டா ஒரு ரூவா. பல பேரு பந்தயம் போட்டுத் தொடப்போயி, துண்டக் காணோம் துணியக் காணோம்ன்னு ஓடி விழுந்து ஒளிஞ்சிருக்காக.



அப்பப்பப் போயி வம்பவிருத்தி வேற பண்ணிட்டு வருது.

மந்தையில இருந்த ஒரு செந்நாயி எப்பவும் இதப் பாத்து உர்று உர்றுன்னு உறுமிக்கிட்டேயிருந்துச்சு. பூலித்தேவன் தலையெடுத்த பெறகு தன் பதவி போச்சேன்னு பொறாமை அதுக்கு.

பூலித்தேவன் பதவிய அது பறிக்க முடியலைன்னாக்கூட நானும் இருக்கேன்னு அப்பப்ப உறுமி அறிக்க விட்டுக்கிட்டேயிருந்துச்சு.

அந்தப் பல்லுச் செத்த நாயி தன்னப் பாத்துப் பம்மிப் பம்மிக் குலைக்கிறத கொஞ்ச நாளாவே அட்டஞ்சாச்சுப் பாத்துக்கிட்டேயிருந்துச்சு பூலித்தேவன.


ஒரு நாள் வள்வள்ளுன்னு அது வாயத் தெறக்கவும் தலையத் தரையில சாச்சுக் கொம்புக்கு மத்தியில கோத்து எடுத்து ஓங்கி ஒரு சுத்துச் சுத்தி வீசியெறிஞ்சதுல வேலியோரத்துல போயி விழுந்து போச்சு நாயி. முள்ளுமேல விழுந்த வாழப்பழத் தோலு மாதிரி மூஞ்சி தொங்கிக் கெடக்கு பாவம்.

ஒடிஞ்ச ஒரு காலத் தூக்கிக்கிட்டு இனி ஒன் வம்புக்கே வரல சாமின்னு மூணுகால்ல நடந்துபோனதுதான். அப்பறம் கண்ணுள்ளவுக யாரும் அந்த நாய ஊருக்குள்ள பாத்ததா ஒரு தகவலும் இல்ல.

*(தொடரும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யார் தடுத்தாலும் தலைவர் பதவி வந்து சேரும்!



## சம்பந்தன் நம்பிக்கை

(கொழும்பு)

**பாராளுமன்ற விதிமுறைகளின்படி எதிர்க்கட்சித் தலைவர் பதவி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கே என்ற நிலை இருந்தால் அதனை யார் தடுத்தாலும் அது எமக்கே வந்து சேரும், அப்போது தனிப்பட்டவர்களின் கருத்துக்கள் செல்லுபடியற்றதாகிவிடும் என கூட்டமைப்பின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.**

எதிர்க்கட்சித் தலைவர் பதவி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குக் கிடைத்தால் அந்தப் பதவியை ஏற்பீர்களா? என்று இரா. சம்பந்தன் எம்.பி.யிடம் வினவிய போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் பதவியை நாம் நாடவும் இல்லை. அந்தப் பதவி வேறொரு கட்சியில் உள்ளவருக்குச் சென்றடையக் கூடாது என்று நாம் எண்ணவும் இல்லை. வேறொரு கட்சியில் உள்ளவர் எதிர்க்கட்சித் தலைவர் பதவியைப் பொறுப்பேற்றால் அதனை நாம் எதிர்க்கவும் மாட்டோம்.

ஆனால், பாராளுமன்ற விதிமுறைகளின்படி எதிர்க்கட்சித் தலைவர் பதவி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கே என்ற நிலைமை வருமானால் அந்தப் பதவியை நாம் ஏற்பதா, இல்லையா? என்று எமது கட்சி கூடி ஆராய்ந்து இறுதி முடிவெடுக்கும்.

எதிர்க்கட்சித் தலைவர் பதவி விடயத்தில் முன்னாள் அமைச்சர்களான தினேஷ் குணவர்த்தன, வாசுதேவ நாணயக்கார, விமல் வீரவன்ச, மேல் மாகாண சபை உறுப்பினர் உதய கம்மன்பில மற்றும் தற்போது எதிர்க்கட்சித் தலைவர் பதவியில் இருக்கும் நிமால் சிறிபால டி சில்வா ஆகியோரின் தனிப்பட்ட கருத்துக்களோ அல்லது கூட்டுக் கருத்துக்களோ ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

பாராளுமன்றத்துக்கென விதிமுறைகள் உள்ளன. அந்த விதிமுறைகளே எதிர்க்கட்சித் தலைவர் பதவி யாருக்கு என்பதைத் தீர்மானிக்கும். எனவே, தனிப்பட்டவர்களின் கருத்துக்கள் செல்லுபடியற்றதாகும் எனவும் சம்பந்தன் தெரிவித்தார்.

அதேவேளை, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தற்போது ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து தேசிய அரசு அமைத்துள்ள நிலையில் சுதந்திரக் கட்சி ஆளும் கட்சியாக மாறிவிட்டது. இந்நிலையில், நிமால் சிறிபால டி சில்வா ஆளும் கட்சியில் இருந்துகொண்டு எதிர்க்கட்சித் தலைவர் பதவியை வகிக்க முடியுமா? என்ற கேள்வி எழுந்துள்ளது.

அவர் அந்தப் பதவியில் தொடரமுடியாத நிலை ஏற்பட்டால் நாடாளுமன்றத்தில் மூன்றாவது பலம் பொருந்திய கட்சியாக இருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் எம்.பி. எதிர்க்கட்சித் தலைவராகப் பதவியேற்க வேண்டிய நிலை ஏற்படும்.

இதேவேளை, தானே எதிர்க்கட்சித் தலைவர் என்றும் இதனை எவராலும் மாற்ற முடியாது என்றும் தற்போது எதிர்க்கட்சித் தலைவர் பதவியில் இருக்கும் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார். (இ-5)

# ரணிலின் கீழுள்ள அரசாங்கத்தில் அமைச்சுப் பதவி தேவையில்லை

## முத்துஹெட்டிகம கூறுகிறார்

(கொழும்பு)

ரணில் தலைமைத்துவத்தின் கீழ் அமைச்சர் பதவி பெற்றுக்கொள்ளும் அளவுக்கு அவ்வளவு மட்டமான நிலையில் நான் இல்லை என பாராளுமன்ற உறுப்பினர் நிஷாந்த முத்துஹெட்டிகம தெரிவித்துள்ளார்.

இது ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம். எங்களுக்கு அமைச்சர் பதவிகள் எப்படி கிடைக்கும? ரணிலிடம் அமைச்சர் பதவி பெற் றுக்கொள்ளும் மட்டமான நிலையில் நாங்கள் இல்லை. இவ்வாறு அவர் தெரிவித்ததாக சிங்கள ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எனக்கு அமைச்சர் பதவி வேண்டாம். அதற்கு தேர்தலில் போட்டியிடாமல் வீட்டில் இருந்துவிடுவேன்.

உண்மையில் இந்த அரசாங்கம் அரசாங்கமே இல்லை.

எதிர்வரும் சில வாரங்களில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்தின் கீழ் அமைச்சர் பதவிகளை பெற்றுக் கொள்ள ஆயத்தமாகவுள்ளேன் என பாராளுமன்ற உறுப்பினர் நிஷாந்த முத்துஹெட்டிகம தெரிவித்துள்ளார். (இ-5)

# இலங்கை மீனவர்கள் இந்தியாவில் கைது!

இந்திய கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டதாகக்கூறி இலங்கை மீனவர்கள் ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்கள் என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இலங்கை மீனவர்கள் சென்னை துறை முகத்திலிருந்து 95 மைல்கல் தொலைவில் கிருஷ்ணாம்பட்டினம் அருகில் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

இவர்கள் கடலோர காவற்படையினரால் கைது செய்யப்பட்டு துறைமுக பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், மீனவர்களின் படகொன்றும், 220 கிலோ கிராம் மீனும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை கச்சதீவு பகுதியில் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இராமேஸ்வரம் மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் தாக்கப்பட்டுள்ளனர்.

500 விசை படகுகளில் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த மீனவர்களை கடற்படையினர் தாக்கியுள்ளதுடன், மீன்பிடி சாதனங்களையும் வெட்டி சேதப்படுத்தியுள்ளனர் என இந்திய ஊடகங்கள் தெரிவித் துள்ளன. (இ-5)

# பட்டதாரி ஆசிரியர்கள் 284பேருக்கு நியமனம்

*(நேற்றைய தொடர்ச்சி...)*

**ஆங்கிலம**

செல்வி.குலரத்தினசேகரம் ஹேதினி-898242579V, சிவசிதம்பரம் நிருசன்-840734382V, செல்வி.அம்பிகை குமாரசாமி-866571333V, செல்வி.இரத்தினசிங்கம் சுதர்சினி-815706064V, ஜேசுதாசன் லபேன் சுதன்-811800651V, அருட் தந்தை தார்சியஸ் அன்சன் றெஜிகுமார்-801212867V, செல்வி.உமாகாந்தன் உமையாள்-885483119V, செல்வி. கணபதிப்பிள்ளை கீர்த்தனா- 887771065V, அன்ரனி ஜோசப் டயஸ்-851823140V, கருப்பையா ஆனந்த்பாபு-852540699V, தனபாலசிங்கம் ஜெகதீஸ்வரன்-810794291V, சவுந்தரநாயகம் அல்பேட் றீகன்-813063867V, செல்வி. நடராஜா போதநாயகி-896112961V, செல்வி.பிரேம்நாத் தரங்கிணி-856093980V, அருட் தந்தை. ஆரோக்கியநாதர் மக் மயூரன்-812140795V, செல்வி.தவகுமாரன் மதுரந்தி-897442574V, திருமதி.சங்கீர்த்தனன் பத்மகுமாரி-887852570V, தமிழ்செல்வன் நாவேந்தன்-872171754V, திருமதி குலொட் நளினி பெர்னாண்டோ-867733930V, கணபதிப்பிள்ளை பிரதீபன்-811601896V, செல்வி.இந்திரன் கஸ்தூரி-896851853V, ஜனாப் அப்துல் நாசர் நஸ்ரின் சிபா- 877391264V, செல்வி.,லச்சுமணன் அனோஜா-895171131V, திருமதி பிரதாபன் செல்வரஜிதா-885553028V, சுப்பிரமணியம் தனராஜ்-820232623V, செல்வி.சிவகடாச்சண்யம் கவிதா-897020807V, செல்வி. பாலகோபாலன் பூங்குழலி-895021520V, சிவபாதராஜா ரஜீவ்-830173765V, எம்.டி. நிரோஸா டிலாந்தி அர்சகுலரத்தினம்-827020028V, திருமதி அருந்தவராஜா குருஸ் அந்தோனிற்றா ரோஜ்-837012503V, செல்வி. சரண்யபுரியேஸ்வர சர்மா லலித் மேகா-886572492V, திருமதி. ஜுட்குமார் உதயதர்சிகா-867391525V, செல்வி. டெனிஸ் ஜீரொ சுகந்தினி-887341672V, காசிலிங்கம் கிருபாகரன்-832893870V, சற்குணானந்தம் அஜிந்தன்- 842050626V, திருமதி.கம்சன் கவிதா-888040498V, அருட் தந்தை. சின்னையா பற்றிக் லியோ-802311540V, அருட் தந்தை. பத்திநாதர் றெனார்ட் செறில்னஸ்-822321399V, செல்வி.பிருந்தா முருகதாசன்-878660595V, திருமதி.சிவாநந்தன் கனிஅன்ரனீற்றா-866902801V, செல்வி.வன்னியசிங்கம் மதுரியா-907612449V, செல்வி. கந்தசாமி கார்த்திகா-886972423V, செல்வி.மகேஸ்வரன் மயூரா-886952970V, செல்வி.ஜெகநாதன் மேனகா-868470011V, கணேந்திரராஜா கஜமுகன்-813621932V, அருட் சகோ. சகாயநாதன் ஜேசுநேசன்டயஸ்- 823452101V, செல்வி.தியாகராஜா உசா-877930262V, திருமதி.துஸ்யந்தன்சரண்யா- 865391250V, செல்வி. செல்வராஜா பிரசாந்தினி-837763487V, செல்வி. கைலாயபிள்ளை கிருபாகரி-885480101V, திருமதி.வசிகரன் சகிலா-878270223V, திருமதி.செந்தூரன் கம்சவதனி- 876312638V, தங்கராஜா கவிக்ஸ்-823662319V, செல்வி. சேனாதிராஜா வனிதா-855402688V, ராஜகோபால் கணநாதன்-881332752V, திருமதி.வேணு சோலாகுலாஸ்-896772228V, சந்திரசேகரன ஜசிந்தன்- 883441591V, செல்வி. தங்கவேலாயுதம் வத்சலா-836622510V, எரோணிமஸ் தேவராஜ் சோசை- 842993431V, செல்வி. செல்வநாயகம் டெஜிதா-927975262V, திருமதி. ஆனைமுகனம்பி கிருஷ்சாந்தி-845971692V, திருமதி. சாமுவேல்தேவதயாளன் ஜெயதிலகம்-826001739V, சண்முக வடி வேல் கஜீபன்-883213831V, ஸ்ரனிஸ்லஸ் அன்ரனி ஜெஸ்ரின்-822234623V ஆகியோரின் பெயர் விபரம் அறிவிக்கப்பட்டுள்ளது. *(முற்றும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்த மீண்டும் வந்தால் இந்நாடு நாசமாகிவிடும்

## தலதா அத்துகோரள அச்சம்

(கொழும்பு)

**எதிர்வரும் பொதுத் தேர்தலில் அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கு முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ச போன்றவர்கள் பகல் கனவு காண்கின்றார்கள் எனவும் அதற்கு மக்கள் ஏமாற மாட்டார்கள் என்றும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மீண்டும் வந்தால் நாடு நாசமாகிவிடும் எனவும் அமைச்சர் தலதா அத்துகோரள அச்சம் வெளியிட்டுள்ளார்.**



நேற்று முன்தினம் காவத்தையில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவி க்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கு எதிர்க்கட்சியினர் முயற்சிக்கிறார்கள். அவை அனைத்துமே பகல் கனவு தான்.

எங்கள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை அதிகாரத்திற்கு கொண்டு வந்தது மோசடிக்காரர்களை ஒழிப்பதற்காகவே.

மகிந்த ராஜபக்ஷவின் தலைமையில் அரசாங்கம் மீண்டும் வந்தால் நாடு நாசமாகிவிடும். அதற்கு ஒருபொழுதும் மக்கள் இடமளிக்க மாட்டார்கள்.

விமல் வீரவன்சவின் பகல் கனவை கலைத்து மீண்டும் ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கம் ஒன்றையே அமைப்போம் என அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# ஐ.தே.கவுடன் இணைவது வாக்களித்த மக்களுக்கு இழைக்கும் துரோகம்

சிறுபான்மையாகவுள்ள ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்து செயற்படுவது வாக்களித்த மக்களுக்கு செய்யும் துரோகம் என முன்னாள் அமைச்சர் ரி.பி.ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

சிங்கள அச்சு ஊடகமொன்றிற்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், வெற்றிலை சின்னத்தில் மக்கள் வாக்குகளினால் நாடாளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டு பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பலத்தை கொண்டுள்ள நாம் ஐ.தே.க வுடன் இணைவதுவெட்கக்கேடு அமைச்சு பதவியைபெறுவ பேற்குமாறு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா எனக்கு அழைப்பு விடுத்தார் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (3-5)

# இந்தியப் பிரஜைகள் இருவர் கைது

(கொழும்பு)

50 இலட்சம் ரூபாய் பெறுமதியான தங்க பிஸ்கட்டுகளை தங்களுடைய குதங்களில் மறைத்து வைத்து கடத்துவதற்கு முயன்ற இந்தியப்பிரஜைகள் இருவரை கட்டுநாயக்க சர்வதேச விமான நிலைய சுங்கப்பிரிவினர் நேற்றுக்கைது செய்துள்ளனர்.

சிங்கபூரிலிருந்து அவ்விருவரும் வருகைதந்து கிறீன் செனல் ஊடாக விமான நிலையத்திலிருந்து வெளியேறுவதற்கு முயன்றபோதே கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஒருவரிடம் ஆறு தங்க பிஸ்கட்டுகளும் மற்றவரிடம் நான்கு தங்க பிஸ்கட்டுகளும் இருந்துள்ளன. அதன் ஒன்றின் நிறை ஒரு கிலோ கிராம என்றும் சுங்கப்பிரிவினர் அறிவித்துள்ளனர்.

அவ்விருவரும் இலங்கை விமான சேவைக்கு சொந்தமான யு.எல்.309 என்ற விமானத்தின் மூலமாக விமான நிலையத்து வந்துள்ளனர். நடப்பதற்குகடும்சிரமப்பட்டதையடுத்தே இவ்விரு வரும் கைது செய்யப்பட்டதாக சுங்கப்பிரிவினர் தெரிவித்தனர். (இ)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி | சுன்னாகம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 30 | 30 | 40 | 40 | 20-40 |
| உருளைக்கிழங்கு | 90 | 90 | 90 | 80 | 90 |
| பச்சைமிளகாய் | 40 | 40 | 60 | 80 | 50 |
| தக்காளி | 80 | 60 | 60 | 80 | 30-40 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 50 | 60 | 40-50 |
| கோவா | 80 | 30 | 40 | 60 | 30 |
| கரட் | 180 | 120 | 100 | 120 | 100-120 |
| பூசணி | 40 | 40 | 50 | 60 | 40 |
| புடோல் | 40 | 50 | 40 | 40 | 40 |
| வாழைக்காய் | 60 | 80 | 60 | 60 | 40 |
| சின்ன வெங்காயம் | 80 | 60 | 70 | 80 | 50-60 |
| பெரிய வெங்காயம் | 80 | 80 | 80 | 80 | 90 |
| பாகற்காய் | 120 | 100 | 90 | 80 | 80-100 |
| வெண்டிக்காய் | 40 | 70 | 40 | 40 | 50 |
| கருணைக் கிழங்கு | 40 | 70 | 60 | 80 | 50 |
| பயற்றங்காய் | 60 | 80 | 60 | 60 | 60 |
| லீக்ஸ் | 200 | 140 | 190 | 200 | 140 |
| பீற்றூட் | 40 | 50 | 80 | 80 | 40-50 |
| கறிமிளகாய் | 200 | 140 | 100 | 80 | 100 |
| முருங்கைக்காய் | 300 | 350 | 350 | 320 | 300-400 |
| போஞ்சி | 200 | 100 | 70 | 120 | 100 |
| கத்தரிதம்புள்ள | 20 | 20 | 30 | 40 | — |
| கீரை - 1 பிடி | 10 | 20 | 20 | 30 | 30-40 |
| தேசிக்காய் | 60 | 120 | 80 | 60 | 70 |
| தேங்காய் (ஒன்று) | 25-60 | 50 | 55 | 50-60 | 60 |
| இராசவள்ளி | 150 | 100 | 100 | 120 | 120 |
| வெங்காயப்பூ | 100 | 120 | — | 160 | — |
| முள்ளங்கி | 30 | 30 | 40 | 60 | 40 |
| பொன்னாங்காணி | 30 | 20 | 20 | 40 | 30 |
| வல்லாரை | 10 | 10 | 20 | 20 | 10 |

# facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 326

இலக்கியா நகுலன்

யாருக்காக சிரித்தாயோ அவரை ஒரு வேளை மறந்து விடலாம். ஆனால் யாருக்காக அழுதாயோ அவரை ஒரு நாளும் உன்னால் மறக்க முடியாது.

ருக்சி சிவகுமார்




நிரோஜன் கிங்




பிரவின் தாஸ்




மயூரதன் மயூரன்



தர்சன் கவிதா




அறிந்தவன் மட்டும் ஆசான் அல்ல மற்றவன் அறிந்து கொள்ளட்டுமே என்று நினைப்பவனும் ஆசானுக்கு நிகரே!

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோடியின் அறிவுரையும் யாழ்.மக்களின் யதார்த்தமும்



...உள்ளூர் மக்களின் கடன் அதிகரிப்பிற்கு வங்கிகளே காரணமாகும். இவ்வங்கிகள் குறைந்தளவு வட்டி விகிதத்தில் மக்களுக்கு கடன்களை வழங்கு கின்றன. இதன்மூலம் மக்கள் தமது நிலங்களுக்குத் தேவை யான நுகர்வுப் பொருட்கள் தொட க்கம் உழவு இயந்திரங்கள் வரை அனைத்தையும் கடனுக் குக் கொள்வனவு செய்துள்ள னர். ஆனால் இவர்களால் தமது கடனை மீளவும் வழங்க முடி யாத நிலையிலுள்ளனர்.

சொந்த நிலத்தைக் கொண்டி ராத தொழிலாளர்கள் இரண்டு தொடக்கம் நான்கு இலட்சம் இலங்கை ரூபாக்களைக் கடனா கப பெற்றுள்ள போதிலும் அதனை ஒருபோதும் திருப்பிச் செலுத்த முடியாதவர்களாக உள்ளனர்.

இந்த அடிப்படையில், நிலத் தின் உரிமை, இலங்கை இரா ணுவத்திடமிருந்து அதனை மீளப்பெற்றுக் கொள்வதிலுள்ள சிக்கல்கள் போன்றன யாழ்ப் பாண மக்களின் பாரியதொரு பிரச்சினையாகக் காணப்படுகி றது.

போரின் போது 6500 ஏக்கர் நிலப்பரப்பு இலங்கை இராணு வத்தால் கையகப்படுத்தப்பட்டது. கையகப்படுத்தப்பட்ட நிலங் களை மீளவும் அவற்றின் உரிமை யாளர்களிடம் வழங்குமாறு இலங்கை அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்கப்படுகின் றன.

போர்க்குற்றங்கள் தொடர்பில் விடுக்கப்படும் அழுத்தங்கள் போன்றே நிலங்கள் கையளி க்கப்பட வேண்டும் எனவும் அழுத்தம் வழங்கப்படுகிறது.

சிறிசேன அரசாங்கம் பதவி க்கு வந்த கையோடு 1000 ஏக்கர் நிலப்பரப்பை அதன் உரி மையாளர்களிடம் வழங்குவ தாக வாக்குறுதி அளித்தது.

ஆனால் இரண்டு வாரங் களுக்கு முன்னர் 200 ஏக்கர் நிலப்பரப்பு மாத்திரமே கிராமத் தவர்களிடம் கையளிக்கப்பட்ட தாக சுமந்திரன் கூறுகிறார்.

ஆகவே நிலங்களைக் கைய ளிக்கின்ற பிரச்சினை தீர்க்க ப்படுவதற்கு இன்னமும் நீண்ட காலம் எடுக்கும்.

இலங்கையில் போர் முடிவ டைந்தாலும், தற்போதும் யாழ் ப்பாணம் இராணுவமயப்படுத் தப்பட்ட பிரதேசமாகவே காணப் படுகிறது.

போர்க் குற்றச்சாட்டுக்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக வெளிப்படையானதும் நேர்மையானதுமான விசாரணை கள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்ட போதிலும் ராஜபக்ச அரசாங்கம் இதனை ஏற்றுக் கொள்ளவி ல்லை.

ராஜபக்ச அரசாங்கத்தை எதிர் த்துச் செயற்பட்டவர்கள் மீது தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட் டன. இது யாழ்ப்பாணத்தில் வாழும் மக்களை மேலும் அச்ச த்திற்கு உள்ளாக்கியது. இதனால் இங்கு வாழும் மக்கள் தமது அடையாளங்களை வெளிப்ப டுத்த விரும்பவில்லை.

ஜனவரி மாதத்தின் முன்னர் இந்த மக்கள் ஊடகவியலாளர் களைச் சந்திப்பதே சாத்தியப் பாடற்ற விடயமாகக் காணப்பட்ட தாக மக்கள் கூறுகின்றனர்.

தற்போது ராஜபக்ச பதவியி லிருந்து விலகிய பின்னர், சில கட்டுப்பாடுகளில் தளர்வுகள் ஏற் பட்டுள்ளன.

ஆனால் தற்போதைய அரசா ங்கத்துடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் கொண்டுள்ள தொடர்பானது வேறுபட்டதாகக் கருதப்படுகிறது.

இதனால் கூட்டமைப்பானது போர்க் குற்றங்கள் விசாரணை செய்யப்பட வேண்டும் என புதிய அரசாங்கத்திடம் வலியுறுத்த வேண்டும்.

அத்துடன் இலங்கை வாழ் தமிழ் மக்களுக்கான இறுதியான அரசியற் தீர்வை எட்டுவதற்கான பணியில் ஈடுபடவேண்டும்.

அத் துடன் வடக்கு மாகாண த்தில் பொருளாதாரத்தை மீளக் கட்டி யெழுப்புவதற்கான செயற் பாடுகளில் கூட்டமைப்பின் தலைமை அதிக கவனம் செலு த்த வேண்டும்.

இலங்கையின் புதிய அரசாங் கத்தின் செயற்பாடுகள் தொடர்பில் பொறுமை காத்து, தமிழ் மக் களின் கோரிக்கைகளைப் பரிசீ லித்துச் செயற்படுவதற்கான கால அவகாசத்தை வழங்குமாறு தமி ழ்த் தேசியக் கூட்டமைப்புடனான சந்திப்பின்போது பிரதமர் நரேந் திர மோடி அதன் தலை[illegible] வலியுறுத்தியிருந்தார்.

இலங்கை அரசாங்கமானது ஒருபோதும் அழுத்தமின்றித் தனக்கான பணிகளை ஆற்றவி ல்லை என்பதைத் தனது 67 ஆண்டுகால அனுபவத்தின் மூலம் உணர்ந்துள்ளதாக முதல மைச்சர் விக்னேஸ்வரன் குறிப் பிடுகிறார். ஆகவே இவர் கூறிய இந்த அழுத்தம் என்பது இந்திய அரசாங்கத்திடமிருந்து வர வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் கூறு கிறார்.

'இந்தியாவின் தலையீட்டின் மூலம் மட்டுமே நாங்கள் மாகாண சபை முறைமையைப் பெற்றுக் கொண்டோம். இந்தியா வின் தலையீட்டின் மூலம் நாங் கள் பலதை அடைந்துள்ளோம்' என்பது சுமந்திரனின் கருத்தா கும்.

'இந்தியா தமிழர்களின் விடய த்தில் ஒருங்கிணைப்பாளராக, நடுவராக, அனுசரணையாள ராகச் செயற்பட வேண்டும்' என முதலமைச்சர் விக்னேஸ்வரன் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் மக்களின் பிரச்சினை கள் தொடர்பில் நேரடியாக கொழு ம்புடன் பேச்சுக்களில் ஈடுபடு வதை விட வேறெதுவும் பயன ளிக்காது என தமிழீழ விடுத லைப் புலிகளின் சினைப்பர் தாக்குதலில் கொல்லப்பட்ட இலங்கையின் முன்னாள் வெளி விவகார அமைச்சரான லக்ஸ் மன் கதிர்காமரின் மருமகனான கதிர்காமர் தெரிவித்தார்.

'யாழ்ப்பாணத்தில் மக்கள் ஆர்ப்பாட்டங்களை ஒழுங்குபடுத் துகின்றனர்.

ஆகவே இடைவெளி என்பது ஏற்படத் தொடங்கியுள்ளது. இல ங்கை அரசாங்கத்தின் மனப்பாங் கும் வித்தியாசமாக உள்ளது என நான் நினைக்கிறேன்.

ஆனால் இரண்டு தரப்பின ரும் இணைந்து செயற்பட வேண் டும். தமிழ் சமூகமானது சுயவிமர் சனத்தை முதலில் மேற்கொள்ள வேண்டும். இதுவே இப்பிரச்சி னையைத் தீர்ப்பதற்கான வழியை ஏற்படுத்தும்' என கதிர் காமர் குறிப்பிடுகிறார்.

யாழ்ப்பாணத்தின் மக்கள் தொகையானது 900,000 இலி ருந்து 600,000 ஆகக் குறைந் துள்ளது.

கடந்த மூன்று பத்தாண்டு களில் இந்த மக்கள் போரின் தாக்கத்தால் புலம்பெயர்ந்துள்ள னர். ஆறு ஆண்டு சமாதான காலத்தில் இவர்களில் சிலர் நாட்டிற்குத் திரும்பியுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் புதிதாகத் திறக்கப்பட்டுள்ள ரில்கோ விடுதி யின் உரிமையாளரான திலக் திலகராஜாவும் அவரது மனைவி யாரான கோகிலாவும் பிரித்தானி யாவிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு வந்து காணி வாங்கி விடுதியை நிர்மாணித்து நடத்துகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் பணிபுரிய வரும் முதலீட்டாளர்கள், நிதி வழங்குனர்கள் போன்றவர்கள் தங்கிநின்று பணிபுரிவதற்கு தங்குமிடம் தேவை என திலக ராஜா கூறுகிறார்.

தற்போது 150 பணியாளர் களுக்கு தனது விடுதி மூலம் தொழில் வாய்ப்பை வழங்கியுள் ளதாகவும் தான் இதன்மூலம் மிகப்பெரிய சவாலை எதிர் நோக்குவதாகவும், இதுபோன்று ஏனையவர்களும் இங்கு வந்து பணியாற்ற வேண்டும் எனவும் திலகராஜா தெரிவித்தார்.

திலகராஜாவும் கதிர்காமரும் வெவ்வேறு துறைகளைச் சேர் ந்தவர்களாயினும் இவர்கள் இலங்கைத் தமிழர்களின் பொரு ளாதாரம், கலாசாரம் மற்றும் அரசியல் மையம் என்கின்ற பெருமையை இழந்து நிற்கும் யாழ்ப்பாணத்தை மீளவும் பொலி வுறச் செய்வதற்காக யாழ்ப்பாண த்திற்குத் திரும்பி வரவேண்டிய தேவையேற்பட்டுள்ளது.

இதேபோன்று ஏனையவர் களும் தமது சொந்த இடம் நோக் கிய பயணத்தை ஆரம்பித்துள்ள னர். இவர்கள் வெளிநாடுகளிலோ அல்லது இலங்கையின் ஏனைய பகுதிகளிலோ தமது தொழில் வாய்ப்பை மேம்படுத்தும் எண் ணத்தைக் ைகவிட்டு யாழ்ப்பா ணம் நோக்கிப் பயணிக்க வேண் டும்.

யாழ்ப்பாணத்திற்குச் செல்வ தற்கான வீதி கடந்த ஆறு ஆண் டில் செப்பனிடப்பட்டுள்ளதாகவும் ஆனால் இந்த மக்கள் தங்களில் தாங்களே தங்கியிருப்பதற்கு இன்னமும் நீண்ட காலம் தேவை ப்படும் என இவர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்கின் றனர்.

(தொடரும்)

-நித்தியபாரதி-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவத்துக்கு அவதூறு ஏற்படுத்தும் காணொலி பொலிஸாரால் நேற்று மீட்பு!

(கொழும்பு)

**இலங்கை இராணுவத்துக்கு அவதூறு ஏற்படும் வகையில் தயாரிக்கப்பட்ட காணொலி ஒன்றையும் அதற்கு பங்களிப்பு வழங்கிய நபர்களையும் பொலிஸார் நேற்றுக் கைது செய்துள்ளனர். படையினருக்கு அவதூறை ஏற்படுத்தும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ள இந்தக் காணொலி இந்தியாவில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அதேவேளை சிங்களத்தில் மொழி பெயர்த்து குரல்களை பதிவு செய்வதற்காக இந்த காணொலி இலங்கைக்கு கொண்டு வரப்பட்டுள்ளது எனவும் தெரிய வந்துள்ளது.**

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை போன்றதொரு அமைப்பிடம் சமர்ப்பிக்கும் நோக்கில் இக் காணொலி தயாரிக்கப்பட்டுள்ளது.

நாரஹேன்பிட்டியில் அமைந்துள்ள வீடொன்றில் காணொலிக்கான பின்னணி பேசும் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருந்த போது பொலிஸார் சுற்றி வளைத்துள்ளனர்.

ஐந்து தமிழர்களும் மூன்று சிங்களவர்களும் இந்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் பொலிஸ் பிணையில் பின்னர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

பின்னணி பேசுவதற்காக பயன்படுத்திய கருவிகளை பொலிஸார் மீட்டு நீதிமன்றில் முன்னிலைப் படுத்தியுள்ளனர். (இ-5)

# விரைவு படுத்தப்பட்ட சட்ட திருத்தம் அவசியம்

(கொழும்பு)

இந்நாட்டின் சட்ட முறைமையில் விரைவுபடுத்தப்பட்ட சட்ட திருத்தங்கள் அவசியம் என மக்கள் விடுதலை முன்னணி தெரிவிக்கின்றது.

இலாபம் சரிசமமாக பிரிக்கப்பட்டு அனுப்பாவிட்டால் நீதியும் சாதாரணமாக அமையாதென அம் முன்னணி சுட்டிக்காட்டுகின்றது.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்ட மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க இதனை தெரிவித்தார்.

தற்பொழுது வெலிக்கடை சிறைச்சாலைக்கு சென்று பாருங்கள் சிறையில் அடைக்கப்பட்டவர்களை பார்வையிட செல்பவர்கள் யாரும் பெரிய வாகனங்களில் வருபவர்கள் அல்ல. எல்லோரும் ஏழைகளே. அப்படி என்றால் வசதியானவர்கள் தவறு செய்வதில்லையா, ஏழைகள் மாத்திரமா தவறு செய்கின்றார்கள்? ஆனால் தண்டனை கிடைப்பது ஏழைகளுக்கே.

சட்டதிருத்தங்கள் நியாயமான முறையில் இடம்பெறுகின்றதா பணம்வைத்திருப்பவர்களைகைது செயயாமல்இருப்பது உத்தமமானசட்டமா?

இன்று நாட்டில் உள்ள சட்ட முறைமையில் சாதாரணம் இல்லை, பணக்காரர்கள் நல்ல சட்டத்தரணிகளை தங்களுக்காய் வாதாடுவதற்கு அழைப்பார்கள், ஏழைகள் சாதாரணமான சட்டத்தரணிகளையே நாடுவார்கள் எனவும் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-5)

# பங்களாதேஷ் பிரஜைக்கு விளக்கமறியல்

(கொழும்பு)

குடிவரவு மற்றும் குடியகல்வு சட்டத்தினை மீறி இந்த நாட்டில் தங்கியிருந்த பங்களாதேஷ் பிரஜையை மேமாதம் 2 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு தெல்தெனிய பதில் நீதவான் சிரோமி பிரபோதிகா உத்தரவிட்டுள்ளார்.

தெல்தெனிய பன்வில பிரதேசத்தில் வீடொன்றில் மறைந்திருக்கையிலேயே இவர் கைது செய்யப்பட்டார்.

30 நாட்கள் சுற்றுலா விசாவில் அவர் இந்நாட்டிற்கு வந்து இரண்டு மாதங்களாக தங்கியிருக்கின் றமை தெரியவந்துள்ளது. (இ-5)

# இறுதிக் கூட்டத்தில் மகிந்த பங்கேற்பார்

(கொழும்பு)

இறுதிக் கூட்டத்தில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பங்கேற்பார் என பிவித்துரு ஹெல உறுமய கட்சியின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.



பொதுத் தேர்தலுக்காக நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதன் பின்னர் அநுராதபுரத்தில் நடத்தப்படவுள்ள பாரிய கூட்டத்தில் முன்னாள் ஜனாதிபதி பங்கேற்பார்.

இது தொடர்பில் ஏற்கனவே அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை பிரதமராக்கும் நோக்கில் கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

மகிந்தவை பிரதமராக்கும் நோக்கில் நடைபெற்று வரும் கூட்டத்தொடரின் அடுத்த கூட்டம் குருநாகலில் நடைபெறவுள்ளது.

ஏப்ரல் மாதம் 23 ஆம் திகதி நாடாளுமன்றம் கலைக்கப்படாவிட்டால் பாரிய போராட்டங்களை நடத்த நேரிடும் என உதய கம்மன்பில சிங்கள ஊடகமொன்றுக்கு அளித்த நேர்காணலில் தெரிவித்துள்ளார். (இ-5)

# இந்திய-சீன உறவை சம நிலையில் பேண முயற்சி

## த ஹிந்து தெரிவிப்பு

(சென்னை)

இலங்கை அரசாங்கம் இந்தியாவையும், சீனாவையும் சமநிலையில் கையாள முயற்சிப்பதாக த ஹிந்து பத்திரிகை தமது ஆசிரிய தலையங்கத்தில் தெரிவித்துள்ளது.

இந்திய பிரதமர் நரேந்திர மோடி இலங்கைக்கு விஜயம் செய்த ஒரு வார காலத்திற்குள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சீனாவுக்கான விஜயத்தை மேற்கொண்டுள்ளார்.

புதிய அரசாங்கம் இலங்கையில் பதவி ஏற்றதன் பின்னர் மேற்கொள்ளப்பட்ட சில தீர்மானங்கள் சீனாவை பாதிக்கும் வகையில் அமைந்திருந்தன.

இந்த நிலையில் இந்தியாவுக்கு நிகராக சீனாவுடனான உறவையும் சமநிலையில் பேணும் வகையிலான செயற்பாடுகளை புதிய அரசாங்கம் முன்னெடுப்பதாக அந்த பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது. (3)

# இன்று ஒரு தகவல்

## மயில்

மயில் ஆடுகிற அழகைப் பார்த்தாலே நமக்கு மகிழ்ச்சி ஏற்படுகிறதல்லவா? அதுபோலவே அதைப் பற்றிய செய்திகள் கூட நமக்கு மகிழ்ச்சி தருவதாக இருக்கும். அதனுடைய நீண்ட தோகையை அது விரித்து ஆடுகிற போதுதான் எத்தனை அழகு.

அதில் ஆண் மயிலுக்கு மட்டும்தான் அந்த அழகான தோகை உண்டு. பெண் மயிலுக்கு அது இல்லை. மயிலுடைய தோகை 3 முதல் 4 அடி வரை நீளமானதாக இருக்குமாம். மயிலிறகில் ஒளி பட்டால் பல வண்ணங்கள் ஒரே நேரத்தில் அதிலிருந்து பிரதிபலிக்கறதுக்குக் காரணம் மயில் இறகுல உள்ள மோட்டாலிக் பச்சைதான். பொதுவா மயில் அப்படின்னா ஆங்கிலத்துல Peacock அப்படின்னு சொல்றோம். எல்லா மயிலுக்கும் பொதுவா Peacock னுதான் சொல்றோம். ஆனா அது அப்படி இல்லையாம்.

தமிழில் நாம் ஆண்மயில் பெண்மயில் என்று சொன்னாக்கூட ஆங்கிலத்தில் ஆண்மயிலுக்கு Peacock பெண் மயிலுக்கு Pea-hen அப்படி என்று தான் சொல்றாங்க.

மயில பொதுவாகப் பறவை இனம் என்று சொன்னாக் கூட அதை சிறப்பாக வானத்தில பறக்கிற பறவை இனம் அப்படி என்று சொல்றதைக் காட்டிலும் அது ஒரு கோழி இனக் குடும்பத்தைச் சார்ந்தது தான் சொல்லணும். உலகத்தில் உள்ள 48 வகையான கோழி இனங்கள் இருக்குதாம். அதுல ஒண்ணுதான் இந்த மயில் இனமாம்.

மயில் உலகத்தில் எல்லா இடத்திலேயும் இருக்குதுதான். இரண்டே இடத்துல மட்டும் அது இல்லை என்கிறார்கள். அண்டார்டிகா அப்புறம் தென்னாபிரிக்கா. ஆனா இந்தியாவில எல்லா மாநிலத்திலேயும் இந்த மயில் இனம் இருக்குது அப்படி என்கிறாங்க. காட்டுப் பகுதிகளைப் பார்த்திங்கன்னா இந்த மயிலோட நடமாட்டம் இருக்கும். அந்த மயில் அப்பப்போ அகவுவதை நாம கேட்டிருப்போம். அது அகவுவது பெரும்பாலும் எதுக்காக இருக்கும் என்றால் நான் சந்தோஷமாக இருக்க விரும்புகிறேன். இதோ இந்த மரத்தடியில் இந்த மரக்கிளையில நான் காத்திருக்கிறேன். நீங்கள் வரலாம் அப்படி என்று பெண் மயிலப் பாத்து அது ஒரு கூவல் மூலமாக சொல்லுறதாம். அதைப் புரிஞ்சிக்கிட்ட பெண்மயில் அதைப் பார்க்கப் போகுதாம். அதுக்காகத்தான் அது அந்த ஒலியை எழுப்புகின்றது என்று சொல்லுகிறாங்க.

மழை மேகத்தைக் கண்டாலே மயில் ஆடும் என்று சொல்லுகிறாங்கள். மழை மேகத்தைக் கண்டாலே மயில் ஆடுகிறதில் அந்த அளவுக்கு உண்மை இல்லையாம். மழை பெய்கிற சூழ்நிலையைப் பார்க்கும் போதுதான் அந்த ஆண்மயிலுக்கு இனக்கவர்ச்சி உணர்ச்சி வருமாம். அதுக்காகத்தான் அது அந்த மாதிரி ஒலி எழுப்புது. அது பெண் மயிலை அங்கே வரவழைப்பதற்கு அது செய்கிற சாகசம்.

அது ஆடுவதைக் கூட மேகத்தைப் பார்த்து அது ஆடுதுன்னு நாம் நினைத்துக் கொண்டு இருக்கிறோம். ஆனா உண்மையிலேயே அந்தப் பெண்மயில் அது கவர்ச்சி பண்ணி இழுக்கிறதுக்காகத்தான் அந்தமாதிரி நடனம் அது ஆடுகிறது.

மயில் கோழி மாதிரியே இதுவும் முட்டை போட்டுக் குஞ்சு பொரிக்குமாம். மூன்று அல்லது ஐந்து முட்டைகளுக்கு மேலே அது இட மாட்டுது. பூமியில் தரையில் மறைவா ஓர் இடத்தில் முட்டையிட்டு அதுக்கு மேலே 25 நாட்கள் உட்கார்ந்து அடைகாத்து இது குஞ்சு பொரிக்குமாம்.

பொதுவான ஒரு கருத்து உண்டு. மயிலுக்குப் பாம்பு எதிரி அப்பிடின்னு. ஆனா அப்படியெல்லாம் கிடையாதாம். மயிலுக்கு எந்த ஒரு மிருகமோ, பறவையோ குறிப்பாக எதிரி என்று கிடையாதாம். அப்படி என்றால் பாம்புக்கு இது எதிரி என்று ஏன் சொன்னார்கள் என்றால் பாம்பைக் கண்டால் படையும் நடுங்கும் என்று நமக்குத் தெரியும். நாம் கூட ஓடி வந்து விடுவோம். ஆனா இந்த மயில் என்ன செய்யும் என்றா பாம்பா இருந்தாலும் பயப்படாமல் அதைக் கொத்துகிற வல்லமை இதற்கு உண்டு. அதுதானே தவிர அது தன் எதிரி என்றும் நினைக்காது. இப்படித்தான் தேவையில்லாத சில நம்பிக்கைகளை மக்களே உருவாக்கி விடுவார்கள்.

இப்ப புத்தகத்துக்குள்ள நோட்டுக்குள்ள மயில் இறகுகளை வைத்து அது குட்டிப் போடும் என்று நாம் சின்ன வயதில நினைக்கிறோம் அல்லவா? அப்படிக் குட்டி போட்டா படிப்பு நல்லா வரும் என்று வேறு சொல்லியிருப்பாங்க. அதுக்கு எந்த வகையான ஆதாரமும் இல்லை.

இப்பப் பாருங்களேன். கரடியை ஓர் இடத்தில கட்டிப் போட்டுட்டு அதனுடைய முடிய எடுத்து வித்து விட்டார் ஒருவர். இதில இருக்கிற ஒரு முடியை வாங்கினீர்கள் என்றால் நீங்க பெரிய இலட்சாதிபதியாகி விடலாம் என்று அங்கிருந்தவர்களைப் பார்த்துச் சொன்னார். சில பேர் அதை வாங்கிறதுக்காக நின்று கொண்டிருந்தார்கள். ஆனால் ஒரு விடயத்தை மட்டும் அங்கிருந்தவர்கள் யாரும் யோசிக்கவில்லை. இந்த முடியை வாங்கினா இலட்சாதிபதியாகிவிடலாம் என்றா அவர் கரடியவே பக்கத்தில வச்சிருக்கிறாரே அவர் இந்நேரம் இலட்சாதிபதியாகியிருப்பார். அப்படியெல்லாம் யோசிக்கிறதே இல்ல நம்ம ஆளுங்க.

*கலைமாமணி முனைவர் இளசை சுந்தரம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# புதிய அரசுக்கெதிரான சுதந்திர தின சதி முயற்சியும் தொடரும் இராணுவ தலைமை மாற்றங்களும்

கடந்த பெப்ரவரி 4 ஆம் திகதியன்று இடம்பெற்ற தேசிய தின கொண்டாட்டங்களுக்கு முன்னரே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்கள் பெற்றிருந்த புலனாய்வு எச்சரிக்கையொன்று பற்றிய செய்தியே தேசிய ஒருமைப்பாட்டு அரசின் ஒரு பகுதியினர் மத்தியில் அப்போதைய பேச்சாக அடிபட்டுக்கொண்டிருந்தது.

முழு விபரத் தெளிவற்ற மேலோட்டமான எச்சரிக்கையாக அது இருந்த போதிலும் கோட்டே- சிறிஜெயவர்த்தனபுர பாராளுமன்ற கட்டடத் தொகுதிக்கு வெளியே இடம்பெறும் இராணுவ அணிவகுப்பில் கலந்துகொள்ளவிருக்கும் அரச தலைவர் ஒருவரையோ தலைவர்களையோ இலக்கு வைத்தே அத்தாக்குதல் நடைபெறவிருக்கும் சாத்தியக்கூறு பற்றியே அத்தகவல் எச்சரிப்பதாக அமைந்திருந்தது.

**தேசிய தின அணிவகுப்பில் புதிய அரச தலைவர்களுக்கெதிராக இடம்பெறவிருந்த படுகொலைச் சதி பற்றிய தகவல்களும் அதனைத் தொடர்ந்து இராணுவ அதிகாரத் தலைமைகளில் இடம்பெறும் தற்போதைய மாற்றங்களும் எனும் தலைப்பில் சண்டே ரைம்ஸ் ஆசிரியர் தலையங்கத்தில் வெளியான கட்டுரையின் தமிழாக்கம் இங்கு பிரசுரமாகிறது.**







1981 ஆம் ஆண்டு எகிப்தில் இடம்பெற்ற இராணுவ அணி வகுப்பு மரியாதையொன்றினைப் பார்வையிட்டுக்கொண்டிருந்த அப்போதைய எகிப்திய ஜனாதிபதி அன்வர் சதாத் அவர்கள், அணிவகுப்பில் வந்துகொண்டிருந்த இராணுவ வாகனங்களிலிருந்து குதித்த வீரர்களால் சுட்டுக்கொல்லப்பட்ட அதே பாணியை ஒத்த நிகழ்வு போன்றதாகவே இதுவும் இடம்பெறவிருந்தது. அந்த எகிப்திய சம்பவத்தில் இராணுவ வாகனங்களிலிருந்து குதித்த வீரர்கள் மேடையிலிருந்த தலைவர்களுக்கான அதிவிசேட பகுதி மீதே சூட்டினை ஆரம்பித்திருந்தனர்.

புலனாய்வு எச்சரிக்கையினை பெற்றிருந்தவரான அரச பாதுகாப்புச் செயலர் பி.எம். யு.டீ பசநாயக்க அதுபற்றி ஜனாதிபதி சிறிசேனாவை எச்சரித்து உசார்ப்படுத்தியதுடன் எதிர்நடவடிக்கைகளை திட்டமிடுவதற்கான சந்திப்புக்களையும் தலைமை தாங்கி வழிப்படுத்தியுமிருந்தார்.

கட்டுப்பாட்டை மீறி எதுவும் இடம்பெற்றுவிடாதபடி நிலைமையை உறுதி செய்து கொள்வதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளனைத்தும் எடுக்கப்பட்டதாக அரச பாதுகாப்புத் தரப்பினர் கூறினர். எப்படியும் துல்லியமான இலக்கோ இலக்குகளோ பற்றிய தகவல்களுடன் எச்சரிப்புக்கான காரணகர்த்தாக்களாகக் காணப்படக்கூடிய எவர் பற்றிய எந்தவித தகவல்களையும் கசியவிடாத அந்த எச்சரிக்கைத் தகவல்மூலம், கிடைத்த அத்தகவலை "நம்பத்தகுந்த ஒன்றாக மட்டுமே" அடையாளப்படுத்தியிருந்தது.

இது இப்படியிருக்க, ஏற்கனவே இத்தகவலுக்கு முன்னர், இலங்கையின் இந்த 67 ஆவது சுதந்திரதின கொண்டாட்டங்களை இம்முறை பெருமெடுப்பில் அல்லாது குறிப்பிடத்தக்க அளவில் மதிப்பிற்குரிய, ஆடம்பரமற்ற ஒரு அடக்கமான நிகழ்வாக நடத்துவதற்கே ஜனாதிபதியவர்கள் தயாராகியிருந்தார்கள். பலவித ஆயுத தளபாட காட்சிப்படுத்தல்களோ ஜெட்சண்டை விமான சாகச பறத்தல்களோ இல்லாமலும் நூற்றுக் கணக்கிலான பாடசாலை சிறார்களை குவித்து மணிக்கணக்கில் நிறுத்தி வைத்துப் பார்ப்பதற்கோதானும் அவர் விரும்பவில்லை.

முன்னைய அரசாங்கம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுடைய சொந்த இடமாகிய வீரகெட்டியவில் [illegible] சுதந்திரதின கொண்டாட்டங்களைவெகுவிமரிசையாககொண்டாடுவதற்கான விரிவான ஏற்பாடுகளை பெரும் செலவின் மத்தியில் பெருமெடுப்பிலேயே செய்து வந்துள்ளது. இவ்வித ஆடம்பரங்களுக்கு மாற்றுவழியாக புதிய ஜனாதிபதி சிறிசேன அவர்களால் தெரிந்துகொள்ளப்பட்டதே குறிப்பிடத்தக்கதும் அடக்கமானதுமான இப்புதிய வழிமுறையாகும்.

மேலே குறிப்பிடப்பட்ட எகிப்திய நிகழ்வுக்கு முன்னர் 1973 இல்நடந்த 'யொம்கிப்பூர்' போரின் போது (war of yomkipoor- இஸ்ரேலிய சமய அனுஸ்டான தினங்களில் எகிப்து ஆரம்பித்தது) 'சுயெஸ்' கால்வாயைக் கடந்து எகிப்து நடத்திய அதிரடித்தாக்குதலில் 'சினாய்' வளைகுடாப்பகுதி இஸ்ரேலிய ஆக்கிரமிப்பிலிருந்து மீளவும் கைப்பற்றப்பட்டது. எகிப்திய ஜனாதிபதி அன்வர் சதாத்தின் வெற்றிச் சாதனையாக இது அமைந்தது. இப்போரின் அலைகள், பிற்பாடு அமெரிக்க உதவியினால் இஸ்ரேலுக்கு சாதகமாக திரும்பிய போதிலும் அதனைத் தொடர்ந்து எகிப்தும் இஸ்ரேலும் புதிய உடன்படிக்கையின் கீழ் சமாதானத்திற்குள் பிரவேசித்திருந்தமை ஜனாதிபதி சதாத் அவர்களின் மற்றுமோர் வெற்றிகர சாதனையாகவே பார்க்கப்பட்டது.

சுயெஸ் கால்வாய் கடந்து எகிப்தினால் மேற்கொள்ளப்பட்ட அந்த வெற்றிகர தாக்குதலை நினைவுகூரும் விதத்தில் 1981 ஒக்ரோபர் 17 இல் நிகழ்ந்ததே மேற்கூறப்பட்ட எகிப்திய வெற்றிப்பவனியான அந்த வருடாந்த இராணுவ அணிவகுப்பாகும். அந்த அணிவகுப்பின் போதான ஜெற்சண்டை விமாணங்களின் சாகசங்களை சதாத் அவர்கள் அவதானித்துக் கொண்டிருந்த போதே மேற்கூறிய அந்த படுகொலைத் தாக்குதலின் இலக்காகிய அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோது உயிரிழந்தார்.

அன்றைய எகிப்திய நிகழ்வு அவ்வாறிருக்க;-

இன்றைய இலங்கையின் புதிய பாதுகாப்பு அமைச்சரும் பிரதம கட்டளைத் தளபதியுமான ஜனாதிபதி சிறிசேன அவர்கள் கடந்த மாத இறுதி வாரங்களில் ஆயுதப் படைகளின் உயர் பதவிகளுக்குப் பொருத்தமான அதிகாரிகளைத் தெரிந்து கொள்வதில் ஈடுபாடு காட்டியிருந்தார். புதுடில்லி விஜயத்தை முடித்துக் கொண்டு அவர் நாடு திரும்பியவுடன் ஆரம்பித்த இந்த பணியில் முதலிரண்டு நாட்களுக்குள்ளேயே அவரது முதல் வேலை இராணுவத்திற்கான கட்டளைத் தளபதி ஒருவரது புதிய தெரிவாக இருந்தது. இதற்காக அரச தலைவர்கள் சிலரது ஆலோசனைகளையும் அவர் பெற்றிருந்தார். அவர்களுள், விடுதலைப் புலிகளுக்கெதிராக வெற்றிகரமாக படை நடத்தியவரும் தற்போது ஜனநாயக கட்சியின் தலைவராகவுமிருக்கும் ஜெ.சரத் பொன்சேகாவும் ஒருவராகும். இந்த முன்னாள் தளபதியும் பொருத்தமான சிலரது பெயர்களை சிபார்சு செய்திருந்த போதிலும் சிறிசேனாவின் விருப்பத்திற்குரிய தெரிவாக றோய்ல் கல்லூரியின் பழைய மாணவரும் முன்னைய அரசில் ஒரு மேஜர் ஜெனரலாகவுமிருந்த ஸ்ரீசாந்த டி சில்வாவே தெரிவாகினார்.

முன்னைய ஆட்சியின்போது ஆகக்கூடுதல் தகுதி வாய்ந்த ஓர் மூத்த அதிகாரியாயிருந்தும் பொருத்தமான அப்பதவிக்கு நியமிக்கப்படாமல் அதற்குப் பதிலாக ரஷ்யாவிற்கான இலங்கைத் துணைத்தூதுவராகவே அவர் அப்போது நியமிக்கப்பட்டிருந்தார். இதுவரையில் இப்பதவியில் இருந்தவர் லெப்.ஜென. தயாரட்ணாயக்க என்பவரேயாவார். ஏனைய உயர் பதவிகளுக்கான நியமனங்கள் வெகு விரைவில் எதிர்பார்க்கப்படுகிறது.

புதிய இராணுவத் தளபதியொருவர் நியமனம் பெறுவதற்கு முன்னரே இராணுவத்தில் அடுத்தடுத்த உயர்பதவிகளுக்கான மாற்றங்கள் சிலவும் இடம்பெற்றிருந்தன. கடந்த பெப்ரவரி 16 ஆம் திகதியிலிருந்து பதவிகளில் அமர்த்தப்பட்ட அநேகர், ஜெனரல் பொன்சேகாவுக்கு நெருக்கமானவர்களாக பரந்தளவில் கருதப்பட்டவர்களேயாவர். அவர்களுள், வன்னிப் பிராந்தியத்திற்கான புதிய பொதுக் கட்டளைத் தளபதியாக ('GOC') மேஜர் ஜென. அமல் கருணாசேகரா நியமிக்கப்பட்டுள்ளார். முன்னர் இராணுவ புலனாய்வு டிரெக்டர் ஜெனரலாக ('DGMI') இருந்த இவர் எகிப்தில் இருந்து கொண்டே எரித்திரிய நிலைமைகளை அவதானிப்பதற்கென்று நியமிக்கப்பட்டிருந்தார்.

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாயிருந்த எரித்திரிய முன்னாள் 'அஸ்மரா' அரசு இலங்கை ராஜதந்திரி ஒருவரை ஏற்றுக் கொள்ள மறுத்ததன் பின்னரே இந்த நியமனம் மேற்கொள்ளப்பட்டது. 2009 ஆம் ஆண்டின் இறுதியில் ஜெனரல் பொன்சேகா ஜனாதிபதி தேர்தலுக்கான வேட்பாளராக தன்னை அறிவித்துக்கொண்டதன் பின்னர் அரசினால் அவருக்கெதிராக மேற்கொள்ளப்பட்ட புலன் விசாரணைகளின்போது 'CID' பிரிவினருடன் ஒத்துழைக்கும்படி முன்னைய அரசு கேட்டுக்கொண்டதுடன் அவரை ஊக்குவித்திருந்தபோதும் அவற்றை உதாசீனப்படுத்தி எதிர்த்து வந்தவரே இந்த மேஜர் கருணாசேகராவாகும்.

-தமிழில் யோகர்- (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனாதிபதித் தேர்தலைத் தடுக்க

# போகோஹராம் தீவிரவாதிகள் கொலைவெறித் தாக்குதல்!

## எம்.பி.உட்பட 39 பேர் பலி!

(மைதுகுரி)

**நைஜீரியாவில் ஜனாதிபதித் தேர்தலைக் குழப்பும் நோக்குடன் போகோஹராம் தீவிரவாதிகள் மேற்கொண்ட தாக்குதலில் அந்நாட்டு பாராளுமன்ற உறுப்பினர் உட்பட 39 பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.**

இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

நைஜீரியாவில் கடந்த மாதம் 14 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், கடந்த 6 ஆண்டுகளாக அங்கு அட்டூழியம் செய்து வரும் போகோஹாரம் தீவிரவாதிகளின் மிரட்டலால் தேர்தல் 6 வாரங்கள் தள்ளி வைக்கப்பட்டது.

அதைத்தொடர்ந்து நேற்று முன்தினம் வாக் குப்பதிவு நடந்தது. அதில், தற்போதைய ஜனாதிபதி குட்லக் ஜோனாதன் மீண்டும் போட்டியிடுகிறார். அவரை எதிர்த்து முன்னாள் இராணுவ ஜெனரல் முகமது புகாரி களம் இறங்கியுள்ளார்.

இவர் 1980 ஆம் ஆண்டுகளில் ஆட்சி புரிந்தவர். இவர்களுடன் மேலும் 12 பேர் களத்தில் உள்ளனர்.

இந்த தேர்தலில் பொதுமக்கள் வாக்கு போடக்கூடாது மீறினால் சுட்டுக்கொல்வோம் என மிரட்டல் விடுத்து இருந்தனர். அதையும் மீறி பொதுமக்கள் துணிச்சலுடன் வந்து வாக்கு போட்டனர். வாக்குச் சாவடிகளில் நீண்ட வரிசையில் நின்று வாக்களித்தனர்.

இவர்களுக்கு ஹெலிகொப்டரில் பறந்து இராணுவ வீரர்கள் பாதுகாப்பு அளித்தனர். இருந்தும் போகோஹாரம் தீவிரவாதிகள் தங்களின் ஆதிக்கம் மிகுந்த வடகிழக்கு மாகாணங்களில் தாக்குதல் நடத்தினார்கள்.

கோம்பே மாகாணத்தில் பிரி மற்றும் டுக்கு நகராங்களில் துப்பாக்கி சூடு நடத்தினார்கள். இதில் பாராளுமன்ற உறுப்பினர் உமரு அலி உட்பட 14 பேர் பலியாகினர். மிரிங்கா, புரானட உள்ளிட்ட பகுதிகளில் ஊருக்குள் புகுந்து வீடுகளுக்கு தீவைத்தனர். தப்பி வெளியே வந்த பொது மக்களை சுட்டுக் கொன்றனர்.



மேலும் பலரை பிடித்து தலையை துண்டித்து கொன்றனர். மொத்தம் 25 பேர் படுகொலை செய்யப்பட்டனர். தாக்குதலில் 39 பேர் பலியாகியுள்ளனர்.

இருந்தும் வாக்குப் பதிவு தொடர்ந்து நடைபெற்றது. இதற்கிடையே பல இடங்களில் வாக்குப்பதிவு எந்திரங்களில் கோளாறு ஏற்பட்டது. அதனால் அங்கு வாக்குப்பதிவு நடக்கவில்லை. எனவே, நேற்றும் ஒருநாள் வாக்குப்பதிவு நடைபெற்றது. இந்த தேர்தலில் 50 சதவீதத்துக்கும் வாக்கு பெற்றவர்தான் வெற்றி பெற்றவராக அறிவிக்கப்படுவார். யாரும் அந்த அளவு வாக்குகள் பெறாத நிலையில் 7 நாட்கள் கழித்து மீண்டும் தேர்தல் நடைபெறும். இதற்கிடையே பதிவான வாக்குகள் எண்ணிக்கை தொடங்கி, நடைபெற்று வருகிறது. (இ-5)

## பழங்குடியினரின் திடீர் தாக்குதலில் கிளர்ச்சியாளர்கள் 21 பேர் மரணம்

(ஆடென்)

ஏமன் நாட்டில் கிளர்ச்சிப் படையினர் மீது நேற்று முன்தினம் பழங்குடியினர் நடத்திய தாக்குதலில், கிளர்ச்சி படையைச் சேர்ந்த 21 பேர் கொல்லப்பட்டனர். ஏமனில் உள்நாட்டு போர் வலுத்து வருகிறது. அந்நாட்டு ஜனாதிபதி அபெத் ரப்போ மன்சூரை எதிர்த்து, ஹவுதி கிளர்ச்சி படையினர் போரிட்டு வருகின்றனர்.

இராணுவத்துக்கும், கிளர்ச் சியாளர்களுக்கும் இடையே நடந்து வரும் சண்டையில் இதுவரை ஏராளமானோர் பலியாகியுள்ளனர். ஏமனின் பல்வேறு பகுதிகளை கிளர்ச்சியாளர்கள் தங்கள் வசம் கொண்டு வந்துள்ளனர். சமீபத்தில் தலைநகரான சனாவையும் அவர்கள் கைப்பற்றி விட்டனர்.

இந்நிலையில், ஜனாதிபதி மன்சூருக்கு ஆதரவாக சவுதி அரேபியா களம் இறங்கியுள்ளது. ஏமன் அரசுக்கு ஆதரவு அளித்து வரும் சவுதி அரேபியா கடந்த 2 தினங்களாக கிளர்ச்சியாளர்களுக்கு எதிராக வான்வழி தாக்குதல் நடத்தி வருகிறது. இதில் கிளர்ச்சியாளர்கள் பலர் கொல்லப்பட்டனர்.

இந்த சண்டையின்போது 36 பொது மக்களும் உயிரிழந்தனர். கிளர்ச்சியாளர்களும் பதிலடி கொடுத்து வருகின்றனர். இதனால் அங்கு சண்டை தீவிரமடைந்து வருகிறது. இந்நிலையில், கிளர்ச்சி படையினர் நேற்று முன்தினம் ஆயுதங்களுடன் லக்ஹஜ் பகுதியில் இருந்து ஏடன் நோக்கி சென்று கொண்டிருந்தனர்.

அப்போது, ஏடனில் இருந்து சுமார் 15 கிலோ மீற்றர் தூரத்தில் இருக்கும் பழங்குடியினர் வசிக்கும் பகுதியை கிளர்ச்சியாளர்கள் கடந்து சென்றனர். தங்கள் பகுதிக்குள் ஆயுதங்களுடன் கிளர்ச்சியாளர்கள் நுழைந்ததை கண்ட பழங்குடியினர், அவர்கள் மீது திடீர் தாக்குதல் நடத்தினர்.

இதில் கிளர்ச்சி படையை சேர் ந்த 21 பேர் உயிரிழந்தனர். ஏம னில் கிளர்ச்சியாளர்களின் கை ஓங்கியிருக்கும் நிலையில், அந்நாட்டு ஜனாதிபதி மன்சூர், சவுதி அரேபியாவில் தஞ்சம் புகுந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)






## பாக். திரா பள்ளத்தாக்கில் இராணுவ அதிரடி தாக்குதல்

### 15 தீவிரவாதிகள் உயிரிழப்பு

பாகிஸ்தான் திரா பள்ளத்தாக்கில் இராணுவம் நடத்திய அதிரடி தாக்குதலில் 15 தீவிரவாதிகள் உயிரிழந்தனர் என்று தெரிவிக்கப்பட்டு உள்ளது.



பாகிஸ்தானில் ஜனநாயக அரசை வீழ்த்தி விட்டு கடுமையான இஸ்லாமிய ஆட்சியை அமுல்படுத்தும் நோக்கில், தெக்ரிக் இ தலீபான் (பாகிஸ்தான் தலிபான்) அமைப்பு போராடி வருகிறது. ஆப்கானிஸ்தான் தலி பான் இய்க்கத்துடன் இணைந்து செயற்பட்டு வரும் இந்த அமைப்பு, பாகிஸ்தானின் வடமேற்கில் ஆப்கானிஸ்தான் எல்லையோர பகுதியான வஜிரிஸ்தான் உள்ளிட்ட மண்டலங்களில் தளங்களை அமைத்து செயற்பட்டு வருகிறது.

தெற்கு வஜிரிஸ்தான் மற்றும் கைபர் மண்டலங்களில் ஆதிக்கம் செலுத்தி வரும் தீவிரவாதிகளுக்கு எதிராக இராணுவம் தாக்குதல் நடத்தி வருகிறது.

இந்த நிலையில் பாகிஸ்தானின் பெஷாவர் நகருக்கு மேற்கே கைபர் மண்டலத்துக்கு உட்பட்ட திரா பள்ளத்தாக்கில் தீவிரவாதிகளின் ஏராளமான முகாம்கள் உள்ள பகுதியை குறிவைத்து கடந்த சில நாட்களாக பாகிஸ்தான் போர் விமானங்கள் குண்டு மழை பொழிந்தன.

இதில் 80இற்கும் மேற்பட்ட தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். இராணுவம் முன்னேறி வந்த நிலையில் மாஸ்டாக் பகுதியில் இராணுவ நிலையை குறிவைத்து தீவிரவாதிகள் தாக்குதல் நடத்த தயாரானார்கள். இராணுவ முகாமை தீவிர வாதிகள் சுற்றி வளைத்தனர். அப்போது அவர்கள் எதிர்பாராத விதமாக கூடுதல் இராணுவப்படை அவர்களை சூழ்ந்தது.

இராணுவம் நடத்திய அதிரடி தாக்குதலில் 15 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். சிலரை இராணுவம் சிறைபிடித்தது. காயம் அடைந்த இராணுவ வீரர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு உள்ளனர். பள்ளத்தாக்கில் தீவிரவாதிகளை ஒழிக்கும் பணியில் இராணுவம் தொடர்ந்து ஈடுபட்டு உள்ளது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கச்சதீவு மீட்கப்படும்

## இதில் பா.ஜ.கவுக்கு மாற்றுக் கருத்தில்லை என்கிறார் கட்சியின் தேசிய செயலாளர் இல. கணேசன்

(சென்னை)

**கச்சதீவு இந்தியாவுக்கு சொந்தமானது. அதை மீட்க வேண்டும் என்பதில் பாஜகவுக்கு மாற்றுக் கருத்தில்லை என்று அக்கட்சியின் தேசிய செயலாளர் இல.கணேசன் தெரிவித்துள்ளார்.**



பொற்றாமரை இலக்கிய அமைப்பின் சார்பில் நாகப்பட்டினத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு வருகை தந்திருந்த அவர் செய்தியாளர்களிடம் கருத்துக் கூறியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், இந்திராகாந்தி பிரதமராக இருந்தபோது நாடாளுமன்ற உறுப்பினர்களுடன்கூட விவாதிக்காமல் கச்சதீவை இலங்கைக்கு தாரை வார்த்தார். அப்போது அதை எதிர்த்து வாதாடியவர் வாஜ்பாய். அதற்காக வழக்கு தொடர்ந்தவர் ஜனா.கிருஷ்ணமூர்த்தி.

கர்நாடகத்துக்கும் தமிழகத்துக்கும் காவிரி நீரை பங்கீடு செயவதில் நிலவும் பிரச்சினையை நிரந்தரமாக தீர்க்க பிரதமர் மோடி நடவடிக்கை எடுத்து வருகிறார். அதற்கான நடவடிக்கையாக இந்த பட்ஜெட்டில் நதிநீர் இணைப்புக்கு ரூ.300 கோடி நிதி ஒதுக்கப் பட்டுள்ளது. அதிலும் முதல் கட்டமாக தென்னக நதிகளை இணைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

ஆந்திராவின் கோதாவரி, கிருஷ்ணா நதிகளை இணைத்து அதை ஒகேனக்கல்லில் கொண்டு வந்து காவிரியுடன் சேர்த்து விட்டால், ஆண்டு முழுவதும் காவிரியில் நீர் பெருக்கெடுத்து வரும். இதனால் தமிழகத்தின் நீர் பிரச்சினை முடிவுக்கு வந்துவிடும். தமிழக மீனவர்கள் ஆழ் கடல் மீன் பிடிப்பையும், தடை செய்யப் பட்டவலைகளை பயன்படுத்தாமலும் சமதள பரப்பில் மீன் பிடிக்க வேண்டும் என பேச்சுவார்த்தையின்போது இலங்கை மீனவர்கள் வைத்த கோரிக்கையை, தமிழக மீனவர்கள் ஆய்வுக்குட்படுத்த வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (3)

## மீனவர்களின் பிரச்சினைக்கு நல்லதொரு தீர்வு கிட்டும்

### யாழ். இந்திய துணைத்தூதுவர் நம்பிக்கை

இலங்கை- இந்திய கடற்தொழிலாளர் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் நோக்கில் தற்போது பேச்சுவார்த்தைகள் இடம்பெற்று வருகின்றன. இப்பேச்சுவார்த்தைகளில் நல்லதொரு தீர்வு கிட்டும் எனத் தாம் நம்புவதாக யாழ்.இந்திய துணைத்தூதுவர் ஏ.நட ராஜன் தெரிவித்துள்ளார்.

நேற்று மு.ப 10.30 மணியளவில் கட்டைக்காடு றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலையில், கட்டைக்காடு சென். மேரிஸ் கடற்றொழிலாளர் சங்கத்தைச் சேர்ந்த கடற்றொழிலாளர்களுக்கும் யாழ்.இந்தியத்துணைத் அதிகாரிகளுக்கும் இடையில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், மீனவர் பிரச்சினைக்குத் தீர்வு காணும் நோக்கில் இடம்பெறும் பேச்சு வார்த்தைகள் முன்னேற்றகரமாகச் சென்று கொண்டிருக்கின்றன. எனவே இப்பேச்சுவார்த்தைகளின் மூலம் மீனவர் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காணுவோம் என்ற நம்பிக்கை உள்ளது என்றும் அவர் அங்கு உறுதிபடத் தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பும் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன், வடமாகாணசபை உறுப்பினர் ஆனோல்ட் மற்றும் பருத்தித்துறைப் பிரதேச சபைத்தவிசாளர் பூ.சஞ்சீவன் வடமராட்சி கிழக்கு மீனவர் சங்கங்களின் சமாசத் தலைவர் பு.பிறேம்குமார் உட்பட பல பிரமுகர்கள் கலந்து கொண்டனர். (3-64)

## மகிந்த இல்லாத அரசியலானது மணமகள் இல்லாத திருமணவீடு

### உதயன் கம்மன்பில தெரிவிப்பு



(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷ இல்லாத அரசியலும், நாடும் மணமகள் இல்லாத திருமண வீடு போன்றது என மேல் மாகாண சபை உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

மகிந்த இல்லாத அரசியலில் வெளிச்சம் இல்லை, கவர்ச்சி இல்லை. எனவே எமது உயிரைப் பணயம் வைத்தாவது மீண்டும் மகிந்த ராஜபக்ஷவின் யுகத்தை நாட்டில் ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வோம்.

நாம் மேற்கொள்ளும் இந்த செயற்பாட்டை யாராலும் தடுத்து நிறுத்த முடியும், ஆனாலும் பரவாயில்லை. நாம் ஏமது பாதையில் தொடர்ந்து பயணிப்போம்.

தற்பொழுது எழுச்சி பெற்றுள்ள மக்கள் அலைக்கு மைத்திரி அரசாங்கம் பயந்துள்ளது. எனவே தான் தேசிய அரசாங்கத்தை உருவாக்கியுள்ளது எனவும் உதய கம்மன்பில மேலும் கூறியுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை மீண்டும் அரசியலுக்கு அழைத்து வருவதற்காக மேல் மாகாண சபை உறுப்பினர் பியல் நிஷாந்த டி சில்வாவினால் ஆரம்பிக்கப்பட்ட கருத்தரங்கில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

நாங்கள் மோதுவது ரணிலுடனோ அல்லது மைத்திரியுடனோ அல்ல, அமெரிக்கா மற்றும் இந்தியாவுடனே. ஏகாதிபத்தியவாதிகள் எங்கள் ஆட்சியை பறித்துக் கொண்டது.

100 நாட்களில் ஆட்சியை திருப்பி தருவதற்கல்ல,தடைகள் இருந்தாலும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி உறுப்பினர்கள் தாய் நாட்டிற்காக மகிந்த ராஜபக்ஷவை மீண்டும் அரசியலுக்குள் கொண்டுவருவதற்கான போராட்டத்தில் இணைந்துள்ளனர்.

இன்று ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியை தோற்கடிப்பது, அக்கட்சி உறுப்பினர்கள் அடி வாங்குவது, அவர்களின் தொழில் பறிபோவது ராஜித போன்ற அமைச்சர்களினாலேயே.

தாய் நாட்டை பாதுகாப்பதற்கும் மகிந்தவை மீண்டும் பிரதமராக்குவதற்கான, இப்போராட்டதில் இணைந்துள்ள சுதந்திர கட்சி உறுப்பினர்களுக்கு தண்டனை வழங்கினால் அது தாய் நாட்டை நேசிக்கிற மக்களை தண்டிப்பது போன்றதென அவர் மேலும் தெரிவித்துள்ளார். (3-5)

## பிரிவுத்துயர் பகிர்வு



### செல்லையா நமசிவாயம்

(இளைப்பாறிய பொலிஸ் சார்ஜன்ட்)

தெல்லிப்பழை புகையிரத வீதி மாரியம்மன் கோயிலை பிறப்பிடமாகவும் இளவாலையை வசிப்பிட மாகவும் தாவடி தெற்கு கொக்குவிலை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா நமசிவாயம் நேற்று முன் தினம் சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நேற்று நடைபெற்று காலை 9 மணியளவில் தாவடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.




### சோமசுந்தரம் தெய்வேந்திரம்

(இளைப்பாறிய புகையிரதநிலைய அதிபர்)

சித்தன்கேணியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் தெய்வேந்திரம் நேற்று முன்தினம் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் பிற்பகல் 3 மணியளவில் வழுக்கையாறு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### மனுவல் கிறகறி அன்பு

(உரிமையாளர் சாள்ஸ் மீசாலை)

மீசாலையை வசிப்பிடமாகவும் கவாட்ஸ் லேனில் வசித்து வந்தவருமான மனுவல் கிறகறி அன்பு நேற்று முன்தினம் சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் பூதவுடல் இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு எடுத்துச்செல்லப்பட்டு தூய லிகோரியார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.



### கதிராமர் தம்பிஐயா

நெடுந்தீவு கிழக்கைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட கதிராமர் தம்பிஐயா கடந்த வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை செவ்வாய்க்கிழமை Chapel Ridge Funeral Home,8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada எனும் முகரிவரியில் நடைபெற்று பிற்பகல் 2.30 மணியளவில் தகனம் செய்யப்படும்.



### மத்தியாஸ் அல்பிறட்

(ஓய்வுபெற்ற ஊழியர், காங்கேசன்துறை சீமெந்து கூட்டுத்தாபனம்)

நீர்வேலி தெற்கை பிறப்பிடமாகவும் வயாவிளானை வசிப்பிடமாகவும் கொண்ட மத்தியாஸ் அல்பிறட் கடந்த புதன் கிழமை காலமானார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று முற்பகல் 10 மணியளவில் எடுத்துச் செல்லப்பட்டு பரலோகமாதா சேமக்காலையில் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.



### சீவரட்ணம் சிவரஞ்சன்

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட சீவரட்ணம் சிவரஞ்சன் கடந்த வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் புதன்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் Eglise Notre Dame De I'Assompton, 77550 Moissy Cramayel France எனும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



### ஜெகநாதன் ஐயாத்துரை

(ஓய்வுபெற்ற யாழ்.கல்வி வலய விஞ்ஞான ஆலோசகர்)

புத்தூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஜெகநாதன் ஐயாத்துரை நேற்று முன்தினம் சனிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் புத்தூர் சிந்துசிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாலி அகற்றும் விவகாரம்; தமிழிசை,வானதி கண்டனம்

திராவிடர் கழகம் சார்பில் அறிவிக்கப்பட்டுள்ள தாலி அகற்றும் நிகழ்ச்சிக்கு பா.ஜனதா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து தமிழக பா.ஜனதா தலைவர் டாக்டர் தமிழிசை சவுந்தரராஜன் கூறியதாவது,

பெரியாரின் புகழுக்கு களங்கம் விளைவிக்கிற செயலாகத்தான் இதை நான் பார்க்கிறேன். மக்களால் மறந்துபோன திராவிட கொள்கைகளை மீண்டும் நினைவுபடுத்த வீரமணி இப்படி ஒரு காரியத்தை கையில் எடுத்துள்ளார்.

தாலி என்பது பா.ஜனதா அல்லது இந்து இயக்கங்களின் பிரச்சினை அல்ல. ஒவ்வொரு சகோதரியின் உணர்வு பிரச்சினை. எல்லா மதத்தவரும் தாலியை புனிதமாக சுமக்கிறார்கள். வைத்தியசாலையில் சந்திரசிகிச்சை பிரிவில் கூட தாலியை கழற்றி வைக்க தயங்கும் சகோதரிகளின் உணர்வோடு இவர்கள் விளையாடுகிறார்கள்.

உணர்வுபூர்வமான விடயத்தை கூட கொச்சைப்படுத்தும் செயலாகத்தான் இது கருதப்படும். வீரமணி போன்றவர்கள் ஆழ்ந்து சிந்திக்க கூடியவர்கள். நாட்டில் எத்தனையோ பிரச்சினைகள் இருக்கும்போது இதற்கு என்ன அவசியம் வந்தது?

மக்களையும், அவர்களின் உணர்வுகளையும் உதாசீனப்படுத்தும் மனநிலையில்தான் இவர்கள் இருக்கிறார்கள் என்பதை புரிந்து கொள்ள முடிகிறது. இதற்கான எதிர்க்கருத்துக்களையும், எதிர் விளைவுகளையும் வீரமணி நிச்சயம் சந்திப்பார்.

நாங்கள் போராட வேண்டியதில்லை. தமிழகத்தின் ஒவ்வொரு பெண்களும் கணவனின் அடையாளமாக தனது உயிரினும் மேலாக மதித்து சுமக்கும் தாலியை அறுப்பதும், வெறுப்பதும் கணவனை வெறுப்பதற்கு சமமாகத்தான் கருதுவார்கள்.

பா.ஜனதா துணைத் தலைவர் சட்டத்தரணி வானதி சீனிவாசன் கூறியதாவது,

திராவிடர் கழகம் பெரியாரின் கொள்கை வழி நடப்பது. அவர் நிறைய விடயங்கள் சொல்லி இருக்கிறார். ஆனால் அடுத்தவர் உணர்வுகளை புண்படுத்த சொல்ல வில்லை.

சாதி மறுப்பு அவரது கொள்கைகளில் முக்கியமானது. திராவிடர் கழகமும் சரி, திராவிடர் கழகத்தை தாய்க்கழகமாக கொண்டு உருவான தி.மு.க., அ.தி.மு.க. கட்சிகளானாலும் சரி, சாதி பாகுபாட்டைகளைய முழு மனதுடன் முன்வர வில்லை. அதற்கான திராணியும் இல்லை.

தமிழர் பண்பாடு, தேசியம், கலாசாரம் பற்றி வாய்கிழிய பேசுகிறார்கள். இந்த பண்பாட்டில் திருமணத்தின் அடையாளமாக தாலி விளங்குகிறது. அது குறிப்பிட்ட மதத்துக்கு மட்டும் சொந்தமானது அல்ல. மதம் மாறி சென்றவர்களும் தங்கள் மத சின்னாங்களுடன் தாலியை அணிந்து புனிதமாக கருதுகிறார்கள்.

பகுத்தறிவு என்று சொல்லி பெண்களின் உணர்வு சம்பந்தப்பட்ட செயல்களோடு விளையாடுவது தமிழ் பண்பாட்டுக்கு எதிரானது. எதிர்விளைவு களை உருவாக்கும்.


திராவிடர் இயக்க கொள்கைகள் சிறிது சிறிதாக மங்கிவரும் நிலையில் ஒட்டு மொத்தமாக மக்களால் முழுமையாக புறக்கணிக்கப்படுவதற்கான அடுத்த முயற்சியாகத்தான் இது அமையும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

பாரதச் செய்தி

# ரவிசங்கருக்கும் கொலை மிரட்டல்

(பெங்களூர்)

**மலேசியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள வாழும் கலை அமைப்பின் நிறுவுநர் ஸ்ரீஸ்ரீ ரவிசங்கருக்கு, (ஐ.எஸ்.ஐ.எஸ்) பயங்கரவாத அமைப்பு கொலை மிரட்டல் விடுத்து கடிதம் அனுப்பியுள்ளது.**



இதுகுறித்து பெங்களூரில் உள்ள வாழும் கலை அமைப்பு நேற்று முன்தினம் சனிக்கிழமை வெளியிட்ட அறிக்கையில்,

மலேசியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டிருக்கும் வாழும் கலை, சர்வதேச மனித மாண்புகள் சங்கத்தின் நிறுவுநரான ஸ்ரீஸ்ரீ ரவிசங்கருக்கு, ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாத அமைப்பு கொலை மிரட்டல் விடுத்து கடிதம் அனுப்பியுள்ளது.

மலேசிய நாட்டின் பினாங்கில் ரவிசங்கர் தங்கியிருந்த ஹோட்டல் பொது மேலாளர் கவின் வெயிட் ஹெட், மலேசியா வாழும் கலை மற்றும் சர்வதேச மனித மாண்புகள் சங்க இயக்குநர் அம்பிகா மேனன், வாழும் கலை அமைப்பு மூத்த நிர்வாகி ஆகியோருக்கும் மிரட்டல் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

இந்த நிலையில், ரவிசங்கருக்கு கொலை மிரட்டல் விடுத்துள்ளது குறித்து இந்தியத் தூதரகம், மலேசிய பொலிஸாருக்கு தகவல் அளித்துள்ளது. இந்தக் கடிதம் 4 நாட்களுக்கு முன்பு அனுப்பப்பட்டுள்ளதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனிடையே, மலேசியத் தலைநகர் கோலாலம்பூரில் ரவிசங்கரின் உதவியாளர் நகுல் நேற்று முன்தினம் சனிக்கிழமை கூறுகையில், பினாங்கு நகரில் ஸ்ரீஸ்ரீ ரவிசங்கரின் நிகழ்சசி நடத்தபட்டால், அதன் பின்விளைவுகளை நீங்கள் சந்திக்க வேண்டி வரும் என்று மிரட்டல் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

ஐ.எஸ்.ஐ.எஸ்.தீவிரவாதிகள் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா உள்ளிட்ட அரசியல் தலைவர்களுக்கு கொலை மிரட்டல் விடுவித்து வந்த நிலையில் ஆன்மீகத் தலைவர் ஒருவருக்கும் கொலை மிரட்டல் விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

# உள்நாட்டுப்போர் காரணமாக வெளியேறிய இந்தியர்கள்

(டில்லி)


உள்நாட்டுப் போர் தீவிரமடைந்துள்ள ஏமனில் வாழும் வெளிநாட்டவர் தங்களது சொந்த நாடுகளுக்கு திரும்புகின்றனர். நேற்று முன்தினம் சுமார் 80 இந்தியர்களும் பத்திரமாக இந்தியா திரும்பியுள்ளனர்.

ஏம னில் ஹவுதி கிளர்ச்சியாளர்கள் அரசை எதிர்த்து சண்டையிட்டு வருவதால் ஏமன் நாட்டில் உள்நாட் டுப் போர் வெடித்துள்ளது. அரசுக்கு ஆதரவாக சவுதி அரேபியா தலை மையில் 8இற்கும் மேற்பட்ட நாடுக ள் ஒன்றிணைந்து ஏமனில கிளர்ச் சியாளர்களுக்கு எதிராக தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.

ஏமன் ஜனாதிபதி கிளர்சிக்குப் பின் நாட்டிலிருந்து வெளியேறி சவுதியில் தஞ்சமடைந்துள்ளார். இந்நிலையில் தலைநகர் சனா பகுதியில் வான்வழித் தாக்குதல் இரவு நேரங்களில் நடத்தப்படுவதால், அப்பகுதி மக்கள் வீடுகளை விட்டு வெளியேறி வருகின்றனர்.

ஏமனில் பல்வேறு மாகாணங்களில் சுமார் 3,500இற்கும் அதிகமான இந்தியர்கள் உள்ளனர். இவர்களில் பெரும்பாலானோர் செவிலியர்களஆவர், அதிலும் பலர் கேரளா மாநிலத்தவர். ஏமனில் உள்நாட்டுப போர் தீவிரமடையத் தொடங்கியதுமே அங்குள்ள இந்தியர்கள் நாட்டை விட்டு வெளியேறுமாறு இந்திய வெளியுறவு அமைச்சகம் அறிவுறுத்தியது. அத்துடன் அவர்களை பத்திரமாக இந் தியா அழைத்து வர இந்தியா 2 கப்பல்களையும் ஏற்பாடு செய்துள்ளது. மேலும் 80 இந்தியர்கள் சனா விமான நிலையத்தில் இருந்து திஜிபவுதி வந்திறங்கினர். பின்னர், அங்கிரு ந்து அவர்கள் பத்திரமாக இந்தியா அழைத்து வரப்பட உள்ளனர். (இ-5)

# பல்கலை.கட்டடம் இடிந்ததில் மூவர் மரணம்;பலர்படுகாயம்



திருவாரூர் மாவட்டம் நன்னிலம் அருகே நீலக்குடி சர்க்கர மங்கலம் என்ற இடத்தில் மத்திய பல்கலைக்கழகம் 100 ஏக்கர் பரபரப்பளவில் அமைக்கப்பட்டு வருகிறது.

இதையொட்டி பல்கலைக்கழக ஊழியர்களுக்கு குடியிருப்புகள் கட்டப்பட்டு வருகிறது.அங்கு கேந்திர வித்யாலயா பாடசாலை செயற்பட்டு வருகிறது. இந்த பாடசாலைக்கு புதிய கட்டடம் கட்டி வருகின்றனர்.

இந்த கட்டடத்தில் கொன்கிறீட் போடும் பணி நேற்று காலை நடைபெற்றது. இதில் 27 தொழிலாளர்கள ஈடுபட்டனர். அப்போது எதிர் பாராத விதமாக கொன்கிறட் இடிந்து விழுந்தது.

இதில் இடுபாடுகளில் சிக்கி 16 பேர் படுகாயமடைந்தனர். 3 பேர் சடலமாக மீட்கப்பட்டனர். இதுபற்றி தகவல் கிடைத்ததும். திருவாரூர் தீயணைப்பு நிலைய வீரர்கள் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று மீட்பு பணியில் ஈடுபட்டனர். அவர்கள் காயமடைந்த தொழிலாளர்களை மீட்டு 108 அம்புலன்ஸ் மூலம் திருவாரூர் மருத்துவகல்லூரி வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர். அங்கு அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்படுகிறது.

இந்த விபத்தில் சிக்கிய மேலும் சிலரை மீட்கும் பணியில் தீயணைப்பு வீரர்கள்தொடர்ந்துஈடுபட்டுவருகிறார்கள்.

இதுபற்றி தகவல் கிடைத்ததும். நன்னிலம் பொலிஸார் விரைந்து சென்று விசாரணை நடத்தினர். ஆர்.டி.ஓ. முத்து மீனாட்சி, தாசில்தார் அம்பிகாபதி ஆகியோரும் சம்பவ இடத்திற்கு சென்று விசாரணை நடத்தினர்.இந்த சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. (இ-5)

# இந்திய விமானங்களில் விரைவில் வைபை சேவை

(டில்லி)

இந்தியாவில் விமானங்களில் பறக்கும் போது வைபை இணையத்தை பயன்படுத்தும் வசதியை தற்போது எமிரேட்ஸ், லூப்தான்சா, டர்கிஷ் ஏர்லைன்ஸ் உள்ளிட்ட வெளிநாட்டு விமான நிறுவனங்களே வழங்கி வருகின்றன. பெரும்பாலான விமான பயணிகள் நீண்ட காலமாக இந்த இன்பிளைட் வைபை வசதியை எல்லா விமானங்களிலும கொண்டு வர வேண்டும் என கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

இந்நிலையில், விரைவில் இந்திய விமானங்களில் வைபை இணைய வசதியை கொண்டு வருவதற்கு அனுமதியளிக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது. ஏற்கனவே, விமானத்துறை அமைச்சகம் இதுதொடர்பாக தொலைத் தொடர்பு அதிகாரிகளுடன் ஆலோசனை செய்து வருகிறது. எனவே, விரைவில் முறையான அதிகாரபூர்வ அறிவிப்பு வெளியாகும் என எதிர்பார்க்கலாம். பிராண்ட்பேண்ட் வசதிகளை வழங்கி வரும் ஆபரேட்டர்களுக்கு இதற்கான அனுமதி வழங்குவது குறித்தும் தொலைத் தொடர்புத்துறை யோசித்து வருகிறது.

விமானங்களில் பறந்து கொண்டிருக்கும் போது மொபைல் போன்களை பிளைட் மோடில் பயன்படுத்துவதற்கும் கூட விதிமுறைகள் இருக்கின்றன.

ஆகவே, வைபை இணைய வசதியை கொடுக்க விதி முறைப்படி அனுமதி பெற வேண்டும். பொதுவாக, கிரவுண்ட் ஸ்டேஷனில் உள்ள பிராண்ட்பேண்ட் நெட்வொர்க்குடன் இணைக்கப்பட்டிருக்கும் சர்வரிலிருந்து சற்றலைட் வழியாக வானில் விமானத்திற்கு இணைய வசதி கொடுக்கப்பட்டு வருகிறது. சர்வதேச அளவில் பல முன்னணி விமான நிறுவனங்கள் இந்த வைபை வசதியை வியாபார யுக்தியாக செயற்படுத்தி வருகின்றன. குறிப்பாக, ஏர்-கிரவுண்ட் தொழில் நுட்பம் மூலம் 3.1 Mbps வேகத்தில் வழங்கும் இணையத்தை காஸ்ட்லியாகவும், 256 Kbps குறைவான வேகத்தில் இயங்கும் இணையத்தை குறைந்த கட்டணத்திலும் வெளிநாட்டு விமானங்கள் வழங்குகிறது.

ஏற்கனவே, மத்திய அரசு நாடு முழுவதிலும் உள்ள 30 முக்கிய எயாபோர்ட்டுகளில் இலவச வைபை இணையத்தை அறிமுகப்படுத்த திட்டமிட்டுள்ளது. முதல் 30 நிமிடங்களுக்கு இலவசமாகவும் அதன் [illegible] (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசின் அறிவிப்புக்கு எதிராக காலியில் மக்கள் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

**முகத்தை முழுமையாக மறைக்கும் தலைக் கவசங்கள் அணிந்து மோட்டார் சைக்கிள்களில் பயணிப்பதற்கு தடை விதிக்கப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து கொழும்பு காலி முகத்திடலில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று நேற்று முன்னெடுக்கப் பட்டது.**



முகத்தை முழுமையாக மறைக்கும் தலைக் கவசங்கள். எதிர்வரும் ஏப்ரல் மாதம் 2 ஆம் திகதி முதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது என பொது ஒழுங்குகள் அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்திருந்தார்.

அதன்படி ஏப்ரல் மாதம் 2 ஆம் திகதி முதல் மோட்டார் சைக்கிளை செலுத்துவோரோ அல்லது பின்னால் அமர்ந்து செல்பவரோ முகத்தை முழுமையாக மறைக்கும் தலைக்கவசத்தை அணிந்து பயணித்தால் அவர்களுக்கு எதிராக உடன் தண்டப் பண பத்திரம் பொலிஸாரினால் வழங்கப்படும்.

மோட்டார் வகன சட்டத்தின் 158 ஆவது அத்தியாயத்தின் 2 ஆவது மற்றும் மூன்றாவது உப பிரிவுகளின் கீழும் 1991 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 11 ஆம் திகதி வெளியிடப்பட்ட 644/ 26 ஆம் இலக்க அரசின் விஷேட வர்த்தமானி அறிவித்தலின் கீழும் 2015 ஆம் ஆண்டின் தண்டப்பண அதிகரிப்பு சட்டத்தின் கீழும் இந் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

எனினும் சாதாரணமாக பயன்படுத்தப்படும் தரமான தலைக் கவசங்களில் முன் பக்கமாக வைசர் எனப்படும் திரையினை பயன்படுத்த தடை இல்லை. அப்படி வைசர் திரையை பயன்படுத்துவதனால் அது பல் வர்ணாங்களைக் கொண்டதாக இருக்க முடியாது என்பதையும் சட்டம் குறிப்பிடுவதுடன் முகம் தெளிவாக தெரியும் படி இருக்க வேண்டும் என்பதையும் வலியுறுத்துகின்றது.

1983 ஆம் ஆண்டு மே மாதம் 13 ஆம் திகதி வெளியிடப்பட்ட 245 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் இந்த விடயம் குறித்து வலியுறுத்தப்பட்டுள்ளது. அதில் மோட்டார் சைக்கிளில் பயணிப்பவர்களை 25 மீற்றர்களுக்கு அப்பால் இருந்தே தெளிவாக அவதானிக்க கூடியதாக தலைக்கவசங்கள் அமைய வேண்டும் என்பது வலியுறுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் இத் திட்டத்துக்கு எதிராக காலி முகத்திடலில் நேற்று எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. (இ)

## கோத்தவின் கணக்கு விபரங்களை பத்திரிகையில் பிரசுரிக்க வேண்டும்

### மெதகொட அபயதிஸ்ஸ தேரர் கோரிக்கை

முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ வின் வங்கி கணக்கு விபரங்களை பத்திரிகையில் வெளிப்படையாக பிரசுரிக்க வேண்டும் என மெதகொட அபயதிஸ்ஸ தேரர் குற்ற புலனாய்வு பிரிவிடம் வேண்டுகோள் முன்வைத்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன் தினம் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கோரிக்கையை முன்வைத்துள்ளார்.கடந்த வாரம் கோத்தபாய ராஜபக்ஷவின் வங்கி கணக்குகளை விசாரணை செய்ய குற்ற புலனாய்வு பிரிவிற்கு அனுமதி கிடைத்துள்ளதாக பத்திரிகைகளில் முதல் பக்கத்தில் பிரதான செய்தியாக பிரசுரிக்கப்பட்டிருந்தது.

இதனால் தெளிவாக ஒன்றைக் கேட்டுக்கொள்கிறோம்.அவரின் வங்கி கணக்குகளை விசாரணை செய்வது மட்டுமின்றி குறித்த வங்கி கணக்குகளில் என்ன இருந்ததென வெளிப்படையாக பத்திரிகையில் பிரசுரிக்க வேண்டும். அப்படி இல்லையேல் அவர் குற்றமற்றவர் எனக் கருதி விடுவோம். மக்கள் பணத்தை கொள்ளை யடித்து இவர்கள் வாழ்வதாக சமூக கத்திடம், உண்மைக்கு புறம்பான விடயங்களை முன்வைக்க முயற்சிக்கிறார்கள் எனவும் தேசிய வீரர்களுக்கு சேறு பூச முயற்சிப் பதாகவும், பொம்மைகளை வீரர்களாக்கவும் சிலர் முயற்சிப்பதற்கு கடுமையாக எதிர்ப்பதாகவும் அவர் தெரிவித்தார். (இ)

## மத்தள விமான நிலையத்தை குத்தகைக்கு விடுவதற்கு முடிவு

மத்தள விமான நிலையம் குத்தகைக்கு விடப்படவுள்ளதாக விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் நிறுவனம் தெரிவித்துள்ளது.

இலங்கையிலுள்ள அல்லது வெளிநாட்டு நிறுவனங்களுக்கே விமான நிலையத்தை குத்தகைக்கு வழங்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மத்தள விமான நிலையத்தினால் மாதாந்தம் 250 மில்லியன் ரூபா நட்டம் ஏற்படுவதாக நிறுவனத்தின் தொடர்பாடல் அதிகாரி டெரிக் கருணாரட்ன தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே பல்வேறு நிறு வனங்கள் மத்தள விமான நிலையத்தை பெற்று வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு ஆர்வம் காட்டி வருகின்றன என அவர் தெரிவித்துள்ளதுடன்,

விமான பயிற்சி நிலையம் உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகளுக்காக மத்தள விமான நிலையத்தை குத்தகையில் எடுப்பதற்கு மேலும் 5 வெளிநாட்டு நிறுவனங்கள் எழுத்துமூல ஆவணங்கள் மூலம் கோரிக்கை விடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

வெளிநாட்டு நிறுவனங்களை தவிர வட ஆசியாவின் முன்னணி நிறுவனமொன்று உலகம் முழுவதிலும் மின்னணு உபகர ணங்கள் மற்றும் பொருட்களை விநியோகிக்கும் களஞ்சியசாலையாக மத்தள விமான நிலையத்தை பயன்படுத்துவதற்கு ஆர்வம் காட்டியுள்ளது.


அத்துடன் குறித்த விமான நிலையத்தை கட்டுவதற்காக பெறப்பட்ட கடன்களை எதிர்வரும் செப்டெம்பர் மாதத்திற்குள் செலுத்துவதற்கு கால அவகாசம் பெறப் பட்டுள்ளதாகவும் டெரிக் கருணாரட்ன தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு வருடமும் கடன் தொகையை செலுத்துவதற்கு ஏற்பட்டுள்ள சிரமம் காரணத்தினாலேயே இந்த விமான நிலையத்தை குத்தகைக்கு விட தீர்மானித்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## இரும்பு இவரால் துரும்பாக தெரிகிறது

(மியான்மு)

தற்காப்பு கலை வல்லுநரான ழோ ரி (24) பல கலைகளை முறையாக கற்று தனது சாகசத்தால் பார்ப்பவர்களை ஆச்சரியத்தில் ஆழ்த்துகிறார். இவர் சீனாவின் மியான்மு என்ற பகுதியில் வசித்து வருகிறார்.



இவர் தனது உடலை இரும்பு போல் மாற்றி வியக்கத்தக்க பல சாகசங்களை செய்து வருகிறார்.

இவர் மேல் கம்பியை அடித்தால் கம்பியே வளைந்து விடுகிறது. நீண்ட இரும்பு கம்பியை எடுத்து தலையில் பலம் கொண்டு தொடர்ந்து அடித்துக் கொண்டே இருக்கிறார். ஆனால், அவரது தலையில் சிறு காயமும் ஏற்படவில்லை.

அடுத்ததாக, சுவரில் துளையிடும் மின்சார டிரிலிங் கருவியின் முனையை தனது நெற்றியில் வைத்து ஓட்டைபோட வைக்கிறார்.

சில நிமிடங்களில் துளையை போட்டு மறுபக்கம் செல்லும் கருவி அவரது தலையில் சிறு சிதைவை கூட உண்டாக்கவில்லை.

ஆரம்பத்தில் தலையை துளையிட முயற்சித்தபோது சிறிது காயம் ஏற்பட்டது என்றும், தற்போது இந்த பயிற்சியை எந்த ஆபத்தும் இல்லாமல் சாதாரணமாக செய்ய முடிவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். இதை பார்த்த [illegible] வரும் ஆச்சரியத்தில் [illegible]

பிறகு, மூன்று ஈட்டிகளை நிற்க வைத்து அவற்றின் மீது படுத்து தனது முதுகில் ஒரு கல்லை வைத்து அதை ஒரு பெரிய சுத்தியலை கொண்டு உடைக்க செய்கிறார். இவ்வாறு பல அதிசய, வியக்கத்தக்க செயல்களை செய்துவருகிறார். 16 வயதில் தனது வீட்டை விட்டு ஓடிவந்த இவர், ஒவ்வொரு நாளும் பல கலைகளை ஆர்வத்துடன் கற்று தனது உடலை இரும்பாக்கி [illegible] (இ-5)


"என்னை எனக்கறிவித்தான் எங்கள் குருநாதன்"

தவத்திரு சிவயோக சுவாமிகளின் 51 ஆவது குருபூசைத் தினம்



ஆன்மீகப் பாத யாத்திரையும் வழிபாட்டுச் சிறப்பு நிகழ்வுகளும்

ஆரம்பம்:– நல்லூர்த் தேரடி முன்றல்
நிறைவு:– சுவாமிகளின் கொழும்புத்துறை சமாதிக்கோயில்
காலம்:– 31.03.2015 (செவ்வாய்க்கிழமை)
நேரம்:– காலை 7.30 மணி
பாதயாத்திரை- நல்லூர்→ பருத்தித்துறை வீதி→ குமாரவீதி→ கச்சேரி நல்லூர் வீதி→ நாவலர் வீதி→ இலந்தைக்குளம் வீதி→ சமாதிக் கோயில்.

அன்பர்கள் அனைவரையும் இந்நிகழ்வில் கலந்து சுவாமிகளின் அருளாசி பெற்றிட அன்புடன் அழைக்கின்றோம்.

ஆன்மீகப் பணியில்
இந்துமா மன்றம்
யா/ கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம், யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

அரிய குணங்களைக் கொண்டிருந்தால் மட்டும் போதாது. அவற்றைச் சிறப்பாகப் பயன்படுத்தவும் தெரியவேண்டும். -ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தன்னை ஸ்திரப்படுத்தவேண்டும்

நல்ல குணம் என்பதும் பலவீனம் என்பதும் வேறுபட்டவை. எனினும் பொதுவில் நல்ல குணத்தைப் பலவீனமாகப் பார்க்கின்ற நிலைமை நம்மிடம் உண்டு.

அந்த வகையில் நாட்டின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஒரு நல்ல மனிதர் என்பது புரிகின்றது. எனினும் அவரின் நல்ல குணம் அவரின் பதவியை–அதிகாரத்தைப் பலவீனமாக்கி விடுகிறதோ! என்று எண்ணத் தோன்றுகின்றது.

ஜனாதிபதியாக மைத்திரிபால சிறிசேன பதவியேற்ற பின்னரும் நாட்டின் சில இடங்களில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் கட்டவுட்டுக்கள் அகற்றப்படாமல் இருந்தன.

முன்னாள் ஜனாதிபதியின் கட்டவுட்டுக்கள் பற்றி எனக்குக் கவலையில்லை. இதெல்லாம் வெறுவிலிகள் செய்கின்றவேலை. ஆகையால் அவை பற்றி நான் கருத்தெடுக்கமாட்டேன். அதேநேரம் எனக்கும் கட்டவுட் வைக்க வேண்டாம் என்பது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் முடிவு.

இது நல்ல முடிவு. எனினும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்தபோது, யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கு வளாகத்தில் இருந்த மகிந்த ராஜபக்ஷவின் கட்டவுட்டுகள் இரவோடு இரவாக அகற்றப்பட்டன.

மகிந்தவின் கட்டவுட்டுக்களை பிரதமர் ரணில் கண்டால் கடுப்படைவார் என்பதால் அப்படி ஒரு அதிரடி நடவடிக்கை இடம்பெற்றது.

இதில் வேடிக்கை என்னவெனில், பிரதமர் ரணில் வருவதற்கு முன்னதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்திருந்தார். ஆனால் அந்த நேரம் மகிந்த ராஜபக்ஷவின் கட்டவுட்டுகள் அகற்றப்படவில்லை.

இங்குதான் நல்ல குணம் பலவீனமாகிப் போகிறது. அதாவது ஜனாதிபதி மைத்திரி வரும்போது இருந்த மகிந்தவின் கட்டவுட்டுகள் பிரதமர் ரணில் வரும்போது அகற்றப்பட்டிருக்கக் கூடாது. அவ்வாறு அகற்றப்பட்டால், அங்கு ஜனாதிபதியை விட பிரதமர் அதிகாரம் கூடியவர் என்றாகிவிடும்.

இதேபோல் யாழ்ப்பாணத்திற்கு வருகைதந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கான பாதுகாப்பை விட, பிரதமர் ரணிலுக்கான பாதுகாப்பு பலமடங்கு அதிகமாக இருந்தது. அது மட்டுமன்றி யாழ். செயலகத்திற்கு ரணில் செல்வதற்கு முன்னதாக அங்கு பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

ஆனால், ஜனாதிபதி மைத்திரி மிக எளிமையாக யாழ்ப்பாணத்திற்கு வந்து போனார். இத்தகையதொரு நிலைமைப்பாட்டின் அடிப்படையில்தான் வடக்கின் முதலமைச்சரை சந்திக்க மாட்டேன் என்று பிரதமர் ரணில் கடும்பிடியாக நின்றார்.

ஆனால், இப்படி ஒரு விடாப்பிடியை மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்தபோது பிரதமர் டி.எம். ஜயரட்னவால் செய்திருக்கமுடியாது. இங்குதான் அதிகாரம் வேறு, நல்ல குணம் வேறு என்பது உணரப்படுகின்றது.

மகிந்தவின் இறுக்கமான போக்கு–கண்டிப்பான நிர்வாகம் என்பவற்றால், பிரதமர் உள்ளிட்ட அமைச்சர்கள் எவரும் தாம் நினைத்தபாட்டில் செயற்படமுடியவில்லை.

மகிந்த ராஜபக்ஷவின் இறுக்கம் சரியானதா? என்பதற்கு அப்பால் இப்படியானதொரு இறுக்கம் தேவையாக உள்ளது என்பதே நிலைப்பாடாக உள்ளது.

இன்றுவரை மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சி தேவை என்று நினைக்கின்ற அளவில் ஏராளமான சிங்கள மக்கள், அரசியல்வாதிகள் உள்ளனர் எனில், அதன் உள்ளார்ந்தம் மைத்திரியின் நல்ல குணம் ஏனையவர்களால் பலவீனப்படுத்தப்படுகிறது என்பதே பொருளாகும்.

எனவே, வேடம் போட்டால் குலைத்துத்தான் ஆகவேண்டும் என்பது போல ஜனாதிபதி மைத்திரியும் தன்னை ஸ்திரப்படுத்துவது மிகவும் கட்டாயமானது.

# ஐ.தே.கவுக்கு முண்டு கொடுக்கும் கட்சியாக சுதந்திரக் கட்சி மாற்றம்

## தயான் ஜயதிலக சுட்டிக்காட்டு

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி தற்போது ஐக்கிய தேசியக் கட்சியின் விருப்பு வெறுப்புகளை நிறைவேற்றும் கட்சியாக மாறியுள்ளதாக அரசியல் விமர்சகரான கலாநிதி தயான் ஜயதிலக்க தெரிவித்துள்ளார்.

இலங்கையின் சிரேஷ்ட அரசியல்வாதிகளில் ஒருவரான பிலிப் குணவர்தனவின் 43வது சிரார்த்த தின நிகழ்வில் கலந்து கொண்டு பேசும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி தேசியத்துவத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதான ஜனநாயகக் கட்சியாகும். ஏகாதிபத்திய சார்பு ஐக்கிய தேசியக் கட்சிக்கு மாற்றாக சமூக ஜனநாயக, தேசியத்துவ கட்சியாக பண்டாரநாயக்க ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியை ஸ்தாபித்தார்.

இதனை மறந்து விட்டு, தற்போதைய ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி, ஏகாதிபத்திய சார்பான சம்பிரதாயத்தை கொண்ட எதிரியான ஐக்கிய தேசியக் கட்சிக்கு முண்டு கொடுக்கும் கட்சியாக மாறியுள்ளது.

இதற்காக பண்டாரநாயக்க ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியை 1951 ஆம் ஆண்டு தொடங்கவில்லை. ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியை அழிக்கும் மேற்குலக சக்திகளின் சதித்திட்டங்கள் தற்போது செயற்பட்டு வருகிறது.

பண்டாரநாயக்கவின் கொள்கைகள் என்ற பெயரில் தற்போது அனுர பண்டாரநாயக்கவின் கொள்கைகளை சுதந்திரக் கட்சி பின் பற்றி வருகிறது.

இது சிறிமாவோ பண்டாரநாயக்கவின் கொள்கையோ, எஸ்.டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்கவின் கொள்கையோ அல்ல எனவும் தயான் ஜயதிலக்க குறிப்பிட்டுள்ளார்.

# புகையிரத பாதைகளில் சமிக்ஞைகள் பொருத்தித் தருமாறு கோரிக்கை

(சுன்னாகம்)

யாழ்ப்பாணம் வலி.தெற்கு பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பிரதான வீதிகள் மற்றும் குறுக்கு வீதிகளை ஊடறுக்கும் புகையிரதப்பாதைகளில் தானியங்கி வீதிச் சமிக்ஞைகள் உடன் பொருத்தப்பட ரயில்வேத் திணைக்களம் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என வலி.தெற்கு பிரதேச சபைத் தவிசாளர் தி.பிரகாஷ் தெரிவித்துள்ளார்.

புகையிரதப் பாதைகளின் தானியங்கி சமிக்ஞை சம்பந்தமாக அவரால் வெளியிடப்பட்ட அந்த செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

எமது பிரதேசத்தில் ரயில்வேத் திணைக்களம் புகையிரதப் பாதைகளை இடும்போது மக்களின் பாவனையிலுள்ள பல்வேறு வீதிகளை நிரந்தரமாக மூடியுள்ளது. இதனால் அந்த வீதிகளைப் பயன்படுத்திய மக்கள் மிகவும் விசனமடைந்துள்ளனர்.

அதற்கு ரயில்வேத் திணைக்களம் தானியங்கி வீதிச் சமிக்ஞைகளைப் பொருத்துவதில் ஏற்படும் சிரமம் காரணமாகத்தான் தாம் அந்த வீதிகளை மூடியுள்ளதாகத் தெரிவித்தனர்.

இதேவேளை, அவர்களால் மக்கள் பாவனைக்கு விடப்பட்டுள்ள வீதிகளில் தானியங்கி வீதிச் சமிக்கைகள் இன்னமும் பொருத்தப்படாமலுள்ளன. இதனால் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர். பல இடங்களில் உயிரிழப்புக்கள் ஏற்படுகின்ற நிலைமைகள் கூட எம்மால் அவதானிக்கப்பட்டுள்ளது.

முக்கியமாக மருதனார்மடத்தில் இருந்து கோப்பாய் நோக்கிச்செல்லும் மானிப்பாய் பிரதான வீதியில்கூட தானியங்கி வீதிச் சமிக்ஞைபொருத்தப்படவில்லை. இன்னும் சிறுசிறு வீதிகள் பலவற்றில் தானியங்கி வீதிச் சமிக்ஞைகள் பொருத்தப்படாமலுள்ளன.

ஆகவே, எமது பிரதேச மக்களின் நலன்கருதி உடனே இந்தத் தானியங்கி வீதிச் சமிக்ஞைகளைப் பொருத்துவதற்கு ரயில்வேத்திணைக்களம் உரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். தவறின் நாம் எமது மக்களைத் திரட்டி வெகுஜனப் போராட்டம் ஒன்றை நடத்தவேண்டிய துர்ப்பாக்கிய நிலைமை ஏற்படும் என்றுள்ளது.

# இன்று முதல் 26 இடங்களில் வைபை

(கொழும்பு)

நாட்டில் இன்று முதல் 26 பொது இடங்களில் வைபை (WIFI) இணையத்தொடர்பு வசதிகளை பெறமுடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. வெளியுறவு மற்றும் தொலைத் தொடர்புகள் அமைச்சு இதனை அறிவித்துள்ளது.

இந்தநிலையில் எதிர்வரும் ஆகஸ்ட் மாத அளவில் சுமார் ஆயிரம் பொது இடங்களுக்கு வைபை இணையத் தொடர்பு வசதிகளை பெறமுடியும் என்று தகவல் தொடர்பு மற்றும் தொழில்நுட்ப நிறுவனம் அறிவித்துள்ளது.

இந்தநிலையில் வைபை இணையத் தொடர்பை இன்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, வெளியுறவு அமைச்சர் மங்கள சமரவீர மற்றும் ஆறு அமைச்சர்கள் கொழும்பு ரயில்வே நிலையத்தில் இந்த சேவையை ஆரம்பித்து வைக்கவுள்ளனர்.


இந்த ஆரம்ப வைபவம் யாழ்ப்பாணம், பொலநறுவை, மாத்தறை ரயில்வே நிலையங்களிலும் பஸ் தரிப்பிடங்களிலும் பாரிய திரைகள் மூலம் காண்பிக்கப்படவுள்ளன.

இதேவேளை இன்று முதல் வைபை இணையத்தொடர்பை பெறவுள்ள இடங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

கோட்டை ரயில்வே நிலையம், புறக்கோட்டை பொது மற்றும் தனியார் பஸ் நிலையங்கள், கண்டி தலதா மாளிகை, புறக்கோட்டை மிதக்கும் சந்தை, கொழும்பு சட்டக்கல்லூரி, கொழும்பு பொது நூலகம், லிபர்ட்டி பிளாஸா, கொழும்பு ரேஸ்கோஸ், பொலிஸ் தலைமையகம், காலி ரயில்வே நிலையம், யாழ்ப்பாண ரயில்வே நிலையம், கோட்டைச் ஹொஸ்பிட்டல், காலிமுகத்திடல், பத்தரமுல்ல வெளிநாட்டு வேலை வாய்ப்பு மையம், கொழும்பு நூதனசாலை, கராப்பிட்டிய வைத்தியசாலை, இரத்தினபுரி நூதனசாலை, பொலநறுவை தள வைத்தியசாலை, மாத்தறை பஸ் நிலையம், பொலநறுவை ரயில்வே நிலையம், மாத்தறை ரயில்வே நிலையம், மிரிஜ்ஜாவில தாவரவியல் பூங்கா, யாழ்ப்பாண பொது நூலகம், கண்டி ரயில்வே நிலையம், பேராதனை ரயில்வே நிலையம் என்பனவே அந்த 26 இடங்களாகும்.

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## மனைவிநல வேட்பு



உலகில் இதுவரை தந்தையர் தினம் (Father's Day), அன்னையர் தினம் (Mother's Day) தனித்தனியே கொண்டாடுகிறார்கள். சுமங்கலி பூஜை என்றளவிலே கணவன் நல வேட்புநாளும் கொண்டாடுகின்றார்கள். மனைவிநல வேட்பு நாளும் கொண்டாடுகிறார்கள். மனைவிநல வேட்புநாள் எந்த ஊரிலேயும் இல்லை. இது ஒரு நன்றி கெட்டதனம் இல்லையா? இது என் மனதை உறுத்திக்கொண்டே இருந்தது. ஆனாலும் ஒருவர் தலையிட்டுச் செய்தால் மட்டும் போதாது. இதுநாடு முழுவதும் ஆண்மக்கள் அனைவரும் தெரிந்துகொள்ளவேண்டும்.

பெண்மையின் பெருமையை உணரவேண்டும் என்ற மனதோடு ஆராய்ச்சி செய்தபோது இந்த ஆண்டு என் மனைவியினுடைய (அருள் அன்னை லோகாம்பாள்) பிறந்த நாள் 30.08 இல் வந்தது. அன்பர்களிடம் சொன்னேன். என் மனைவியின் பிறந்த நாளையே வைத்துத் தொடங்கி மனைவிநல வேட்புநாள் கொண்டாடலாம். இதையே வைத்துக்கொண்டு இது முதல் கொண்டு ஒவ்வொரு ஆண்டும் ஓகஸ்ட் 30 ஆவது நாளை மனைவி நல வேட்பு நாளாகக் கொண்டாடுவது நம் சங்கத்தின் வழக்கமாக வரட்டும். பிறகு உலக நாடுகளிலும் பரவட்டும் என்றேன். ஆண்களும் பெண்களும் உற்சாகமாக அதை ஏற்றுக்கொண்டு பல இடங்களில் கொண்டாடுகிறார்கள். நீங்களும் உங்கள் வாழ்க்கைத் துணையை நன்றியோடு வாழ்த்தி இக்கவியைச் சொல்லி மகிழுங்கள்.

பெற்றோரைப் பிறந்தகத்தைப் பிறந்த ஊரை விட்டுப்
பிரிந்து வந்து, பெருநோக்கில் கடமையறம் ஆற்றப்,
பற்றற்ற துறவியெனக் குடும்பத்தொண்டேற்றுப்
பண்பாட்டின் அடிப்படையில் எனைப் பதியாய்க் கொண்டுஎன்
நற்றவத்தால் என் வாழ்க்கைத் துணையாகிப் பெண்மை
நல நோக்கில் அன்போடு கருணை இவை கொண்டு
மற்றவர்க்கும் தொண்டாற்றும் மாண்புமிக்க எந்தன்
மனைவியை நான் மதிக்கின்றேன் வாழ்த்தி மகிழ்கின்றேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதல் செலவு: திட்டங்களைவிட செயல்படுத்துதல் முக்கியம்



ஒரு ஐரோப்பிய ராணுவப் பழமொழி ஒன்று உண்டு – "வரைபடத்தில் உள்ளது போல் நிலம் இல்லையென்றால், நிலத்தை நம்புங்கள்". இந்த வாசகம் சொல்லும் செய்தி என்னவென்றால், நாம் போடும் திட்டங்கள் நடைமுறைக்கு ஒத்துவரவில்லையென்றால், நடைமுறைக்கு ஏற்றபடிதான் நமது திட்டங்களை நாம் மாற்றிக் கொள்ள வேண்டும் என்பதுதான்.

திரும்பத் திரும்ப நாம் வலியுறுத்த விரும்பும் கருத்துகளும், வாசகர்கள் மனதில் திடமாகக் கொள்ள வேண்டியவை என்று நான் கருதும் எண்ணங்களும் இவைதாம்:

1. நீண்ட கால முதலீடுகள் அவசியம். எப்பொழுதுமே அடுத்த ஒரு வருடம், இரு வருடங்கள் என்று எண்ணி முதலீடு செய்தல் நல்ல பலன்கள் தராது. நமது வருமானம், சேமிப்பு ஆகியவற்றிலிருந்து ஒரு சிறு பகுதியேனும் நீண்டகால முதலீடுகள் (பத்து வருடங்களுக்குக் குறையாமல்) என்று இருக்க வேண்டும். அப்பொழுதுதான் நமக்குப் பல வகையான முதலீட்டுச் சாதனங்களிலிருந்து தேர்ந்தெடுப்பதற்கான வாய்ப்பு கிட்டும்.

2. ரிஸ்க் எடுத்து முதலீடு செய்வது அவசியம். மொத்தமாக ரிஸ்க்கே வேண்டாம் என்று புறந்தள்ள முயற்சிப்பது நமது முதலீட்டு வளர்ச்சியைக் கடுமையாகப் பாதிக்கும். நாம் சேமிக்கும் பணத்தின் மீதான நமது பிடிமானத்தைச் சற்று தளர்த்தினால் அதன் வளர்ச்சி சாத்தியங்கள் அதிகரிக்கும் நமது நிதி வளமும் மேம்படும். நீண்ட காலத்திற்கு முதலீடு செய்வதனால் ரிஸ்கினை ஓரளவிற்குக் குறைக்க முடியும். மாதாந்திர சேமிப்பு/முதலீடு என்பதன் மூலமும் ரிஸ்க்கினைக் குறைக்க முடியும்.

3. ரிஸ்க் எடுப்பது முக்கியமென்றாலும் அளவிற்கு அதிகமாக ரிஸ்க் எடுப்பது ஆபத்து என்பதை உணர வேண்டும். நேரடி பங்குச் சந்தை முதலீடுகள் செய்வதற்கு திறமையும் உழைப்பும் நேரமும் வேண்டும். இதைப் பல வருடங்கள் தொடர்ந்து செய்வதென்பது மிகப் பலருக்கு சரிப்பட்டு வராத ஒன்று. நமக்கு இது சரி வருமா என்ற சிந்தனை வந்தாலே, புத்திசாலித்தனமாக ஒதுங்கி இருப்பதே உசிதம்.

4. ஆயினும் பங்குச் சந்தையில் முதலீடு செய்தால் மட்டுமே தகுந்த அளவிற்கு ரிஸ்க் எடுத்து நமது நிதி வளத்தை ஆரோக்கியமான முறையில் வளர்க்க முடியும். பங்குச் சந்தையில் முதலீடு செய்ய பல வழிகள் உள்ளன. நேரடி பங்கு வர்த்தகம் என்பது ஒரு முறை மட்டுமே. பரஸ்பர நிதிகள் மூலமாக செய்யப்படும் முதலீடுகளில் ஓரளவிற்குக் குறைவான ரிஸ்க் எடுத்து, வேண்டிய அளவிற்கு லாபம் ஈட்டலாம்.

5. இவையெல்லாம் செய்வதற்கு முதலீடுகள் குறித்த நமது சிந்தனை மற்றும் கண்ணோட்டத்தினை முறைப்படுத்திக் கொள்ள வேண்டும். முதலீட்டுத் திட்டம் என்பது ஒரு மாரத்தன் போல உணர வேண்டும். தொடர்ந்து, விடாமல், சீரான ஓட்டம்போல நமது முதலீட்டுத் திட்டம் அமைந்தால், வெற்றிக் கோட்டினை நிச்சயம் எட்டலாம். இங்கே கொஞ்சம், அங்கே கொஞ்சம், இப்பொழுது ஒரு மாதிரி, நாளை வேறு மாதிரி என்று நிலையில்லாமல் முதலீடுகள் செய்வது மிகவும் தவறான அணுகுமுறை.

இந்த 5 கருத்துகளைத் தாண்டி ஒரு ஆறாவது கருத்தையும் இப்பொழுது பார்க்கலாம்.

ஒற்றைச் சொல்லில் சொல்ல வேண்டுமென்றால், இப்படிச் சொல்லலாம் – ஆரம்பியுங்கள். ஒரு முதலீட்டுத் திட்டத்தைத் தொடங்குவதற்கு நல்லநாள் பார்க்கத் தேவையில்லை. நீண்ட காலத் திட்டம் என்பதை மட்டும் மனதில் இருத்திக் கொண்டால் போதும். சந்தைக் குறியீடு பற்றிக் கவலை தேவையில்லை. இது சரியா தவறா, இது நல்ல நேரமா இல்லையா என்றெல்லாம் ஆராயத் தேவையில்லை. எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் ஒரு எளிமையான பங்குச் சந்தை சார்ந்த நம்பிக்கை நிதி முதலீட்டுத் திட்டம் ஒன்றினைத் தொடங்குங்கள்.

ஏனெனில், இந்தக் கட்டுரையின் ஆரம்பத்தில் சொன்ன பழமொழி கட்டுரையாளர்களுக்கு மட்டுமல்ல, முதலீட்டாளர்களுக்கும் பொருந்தும். திட்டங்களெல்லாம் ஓரளவிற்கே பயன் தரும். அவற்றை செயல்படுத்தும் போதுதான் அவற்றிலிருக்கும் குறைகள் தெரியும். அவற்றிற்கேற்ப நமது திட்டத்தினை சரி செய்து கொள்வதற்கு வாய்ப்புகளும் உண்டு, வழிகளும் உண்டு. ஆகையால், தயங்கத் தேவையில்லை. ஒரு வளமான எதிர்காலத்தை நோக்கிய பயணத்தைத் தொடங்குவதை தாமதிப்பதில் என்ன பயன்?




## மற்றோர் அங்கீகாரத்தை வென்ற DIMO




சிறந்த மனிதவள நடைமுறைகள் ஒரு கம்பனிக்கு பலவழிகளில் பெறுமதியினை உருவாக்கும். டிமோவானது (DIMO) அதிகரிக்கும் ஊழியர் பங்குகள், உயரிய பெறுமதி விகிதங்கள் மற்றும் உயரிய அக்கறையுள்ளோர் மனநோக்கினை உருவாக்குதல் போன்றவற்றில் கவனஞ்செலுத்துவதானது, நிறுவனத்திற்கு ஊழியர் மேலும் பெறுமதியினை வழங்குவதற்குக் காரணமாகின்றது. ஏனைய எந்தவொரு யுகத்தையும் விட, இன்று சிறந்த திறமையுடையோரைக் கவருதல், ஈடுபடுதல், மற்றும் வைத்திருப்பதற்காக, ஆக்கபூர்வமான மனிதவள முகாமைதத்துவ நடைமுறைகள் திறமை முகாமைத்துவத்திற்குத் தேவைபபடுகின்றன. நிறுவனத்தின் நோக்கங்களை அடைந்துகொள்வதற்கான கருவியாக, மிகச் சிறந்த மனித வள முகாமைத்துவ நடைமுறைகளே வேண்டப்படுகின்றன.

நிறுவனத்திற்கு இறுதியாகப் பெறுமதியினை வழங்குபவர்களாக ஊழியர்களே காணப்படுவதால், டிமோவானது எப்போதுமே ஊழியர்களுக்கு முதலிடம் அளிக்கின்றது. 2014 இற்கான மனிதவள முகாமைத்துவ விருது வழங்கல் விழாவிலே தொடர்ச்சியாக 3-வது முறையாகவும் தங்க விருதினையும், ஊழியர் உறவுகள் மற்றும் மக்களுக்காக (Employee Relations & People) விசேட துறை (special category) விருதினையும் வென்றமையானது, அதன் ஊழியர் தொடர்பான அணுகு முறை நிலையானதும் பொருத்தமானதுமாகும் என்பதனை நிரூபிக்கின்றது.

## பங்குச்சசந்தை கொடுக்கல்வாங்கல் விவகாரம் மீண்டும் விசாரணை

கடந்த காலங்களில் பங்குச் சந்தையில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் மீண்டும் விசாரணை நடத்தப்பட வேண்டுமென இலங்கை பிணையங்கள் மற்றும் பங்கு பரிவர்த்தனை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

மூடிவைக்கப்பட்டுள்ள சில ஆவணங்கள் மீண்டும் திறக்கப்பட்டு, விசாரணை நடத்தப்பட வேண்டுமென ஆணைக்குழுவின் தலைவர் திலக் கருணாரத்ன வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை பங்குச் சந்தையின் கொடுக்கல் - வாங்கல்கள் தொடர்பில் இதுவரை இடம்பெற்ற விசாரணைகளின் தரம் தொடர்பிலும் திலக் கருணாரத்ன கருத்து வெளியிட்டிருந்தார்.

மேலும் பங்கு சந்தையின் ஒழுங்குமுறைகள் தொடர்பில் சட்ட திருத்தங்களை மேற்கொள்ள வேண்டிய தேவை காணப்படுவதாகவும் இலங்கை பிணையங் கள் மற்றும் பங்கு பரிவர்த்தனை ஆணைக்குழு தலைவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

## பங்குச் சந்தை விபரம்

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 7,054.58 | 6,873.52 ⇩ |
| எஸ் & பி 20 சுட்டி | 4,016.9 | 3,901.34 ⇩ |

**விலை அசைவுகளின் அடிப்படையில்** புரள்வு (ரூபா.மில்.) 4,340.394

***உயர்வடைந்த பங்குகள்(ரூ.):*** சிரஸ் கிக்கடுவ(17.70), ரம்பொட போல்ஸ்(27.90), சிங்கப்புத்திர பினான்ஸ்(174.50), ஏஸ்மஸ் கோ லிமிட்(440.00), ஆர்பிகோ(155.00).

***சரிவைக் காட்டிய பங்குகள்(ரூ.):*** சிரஸ் லிசர்(W) (0.20), ஜேகேஎச் (W) (21.20), சிலோன் பேவரேஜ்(700.13), ஜேகேஎச் (W) (33.80), சுஜே (43.40).

**மேலதிக தகவல்கள்: www.cse.lk**

## சொப்ட்லொஜிக் உரிமைவழங்கல்

சொஃப்ட்லொஜிக் ஃபினான்ஸ் நிறுவனத்தினால் அண்மையில் மேற்கொள்ளப்பட்டிருந்த உரிமை வழங்கல்கள் 150 சதவீதத்தால் மிகைக் கொடை முனைவுடன் நிறைவடைந்திருந்தது.

இதன் மூலம் ரூ.401 மில்லியன் புதிய உரிமை முதல் உட் பாய்ச்சல் (Equity Infusion) பெறுமதியை எய்தியிருந்ததுடன், கம்பனியின் மொத்த பங்கு நிலைப படுத்தல் 1.9 பில்லியன் ரூபாவாக அதிகரித்திருந்தது.

உரிமை வழங்கல் பிரகாரம், 2015 பெப்ரவரி 26-ம் திகதியன்று காணப்பட்டவாறு, பங்குதாரர்கள் கொண்டிருந்த ஒவ்வொரு 28 சாதாரண பங்குகளுக்கும் 10 சாதாரண பங்குகள் வீதம் பங்கொன்றுக்கு 30 ரூபா வீதம் வெளியிடப்பட்டிருந்தன.

இவை மொத்தமாக 20.1 மில்லியன் பங்குகளுக்கான விண்ணப்பங்களை கவர்ந்திருந்ததுடன், மேலதிக கோரல் 6.7 மில்லியன் பங்குகளையும் விட அதிகரித்திருந்தன. 13,376,411 பங்குகள் தலா 30 ரூபா வீதம் கம்பனியின் மூலம் ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்ததுடன், 2015 மார்ச் 16-ம் திகதி இந்த உரிமை வழங்கலுக்கான விண்ணப்பம் கோரல் பூர்த்தி செய்யப்பட்டன.

சொஃப்ட்லொஜிக் ஃபினான்ஸ் பிஎல்சி நிறுவனத்தின் மூலதன இருப்பை விஸ்தரித்திருந்தமைக்கு மேலதிகமாக, உரிமை முதல் உட் பாய்ச்சல் (Equity Infusion) என்பது கம்பனியின் உயர் வளர்ச்சியை ஊக்குவிப்பதற்கு அத்தியாவசியமானதாக அமைந்திருந்தது. இதன் மூலமாக மொத்த சொத்துக்களின் பெறுமதி 20 பில்லியன் ரூபாவாக அதிகரித்திருந்தது.

சொஃப்ட்லொஜிக் குழுமம் இந் நிறுவனத்தை கையகப்படுத்தியிருந்தபோது காணப்பட்ட 1.8 பில்லியன் ரூபா பெறுமதியை விட, 4 1/2 ஆண்டு காலப்பகுதியில் 10 மடங்கு அதிகரிப்பாக இது பதிவாயிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த வழங்கல்மூலமாக மூலதன கட்டமைப்பை மேம்படுத்தும் என எதிர்பார்க்கப்படுவதுடன், கம்பனியின் கடுமையான வியாபார திட்டங்களுக்கு பக்கபலமாக அமைந்திருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மூலதன உட்பாய்ச்சல் (Capital Infusion) என்பது பொருத்தமான காலப்பகுதியில் கிடைத்துள்ளதாகவும், தனியார் துறை என்பது கடன் மீது அதிகளவு கவனம் செலுத்தும் நிலையில், கடந்த ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் வட்டி வீதங்களும் குறைந்துள்ள நிலையில் இது உட்செறிவு கிடைத்துள்ளமை சாதகமாக அமைந்துள்ளதென கம்பனி அறிவித்துள்ளது.

சொஃப்ட்லொஜிக் குழுமத்தின் அங்கத்துவ நிறுவனமாக சொஃப்ட்லொஜிக் ஃபினான்ஸ் பிஎல்சி செயலாற்றி வருவதுடன், சுகாதாரத்துறை, விற்பனை, நிதிச் சேவைகள், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம், ஓய்வுநேரம், வாக னங்கள் மற்றும் உணவகங்கள் ஆகிய துறைகளில் ஈடுபாட்டை கொண்டுள்ளது.

## SLIIT பட்டமளிப்பு விழா 2015



SLIIT இன் வருடாந்த பட்டமளிப்பு நிகழ்வில் 1000க்கும் அதிகமான மாணவர்களுக்கு பட்டம் வழங்கப்பட்டிருந்தது. தகவல் தொழில்நுட்பம், பொறியியல் மற்றும வணிக முகாமைத்துவம் ஆகிய பிரிவுகளில் மாஸ்டர்ஸ் கற்களை பூர்த்தி செய்தவர்களுக்கு இவ்வாறு பட்டம் வழங்கப்பட்டிருந்தது. மாலபே பகுதியில் அமைந்துள்ள SLIIT கம்பஸ் இல் இந்த பட்டமளிப்பு வைபவம் இடம்பெற்றது.

SLIIT இன் தலைவர் பேராசிரியர் லஷ்மன் ரத்நாயக்க இந் நிகழ்வில் பட்டங்களை கையளித்திருந்தார்.

பட்டதாரிகளுடன் பெறு மதி வாய்ந்த கொள்கைகளை பகிர்ந்து கொண்டு கொள்கை, திட்டமிடல் மற்றும் பொருளாதார விவகார பிரதி அமைச்சர் கலா நிதி. ஹர்ஷ டி.சில்வா கருத்து தெரிவிக் கையில், "கல்லூரிக்கு செல்வதன் நோக் கம், பரிபூரண அனுபவத்தை பெற்றுக் கொள்வதுஇ கடும் அழுத்தங்களுக்கு மத்தியில் பணியாற்ற பழகிக் கொள்ள, வெவ்வேறு நபர்களுடன் பணியாற்ற பழகிக் கொள்ள, பரீட்சை அழுத்தங்களை கைய மற்றும் இலகுவில் விட்டுக் கொடுப்பதை தவிர்க்க பழகிக் கொள்வது என்பதாகும். இந்த சந்தர்ப்பத்தை உங்கள் அடிப்படை விடயமாக கொண்டு, உங்கள் ஆளுமைகளை பயன்படுத்தி SLIIT பயின்று இந்நாட்டை பெருமைக்குரியதாக்குங்கள். எதிர் காலத்தில் தாம் முன்னெடுக்கும் தொழில் மீதும் அன்பை செலுத்துமாறு குறிப்பிடுகிறேன்" என்றார். SLIIT இன் நீண்ட கால சர்வதேச கல்வி பங்காளர்கள் மற்றும் துறை சார் பங்காளர்கள் ஆகியோர் இந் நிகழ்வில் பங்கேற்றிருந்தனர்.

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 131.91 | 134.73 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 195.19 | 200.79 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 142.59 | 147.33 |
| சுவிஸ் பிராங் | 135.99 | 140.77 |
| கனேடிய டொலர் | 104.99 | 108.46 |
| அவுஸ்திரேலிய டொலர் | 101.93 | 106.10 |
| சிங்கப்பூர் டொலர் | 95.83 | 98.91 |
| ஜப்பான் யென் | 1.10 | 1.13 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.11 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 36.18 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 248 பேருக்கு...

நடைபெறவுள்ளது.

ஏற்கெனவே இடம்பெற்ற பட்டதாரி ஆசிரியர்களுக்கான நேர்முகப் பரீட்சைகளின் அடிப்படையில் வட மாகாண கல்வி அமைச்சினால் இந்த நியமனங்கள் வழங்கப்படவுள்ளன.

இதன்படி, ஆங்கில பாடத்துக்கு 64 பேருக்கும், கணிதப் பாடத்துக்கு 56 பேருக்கும், விவசாய விஞ்ஞானப் பாடத்துக்கு 35 பேருக்கும், விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் பாடத்துக்கு 69 பேருக்கும், தகவல் தொழில்நுட்பத்துக்கு 24 பேருக்குமாக 248 பேருக்கு நியமனம் வழங்கப்படவுள்ளது. இவர்களின் விபரம் நேற்றைய மற்றும் இன்றைய வலம்புரியில் பிரசுரமாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (11)

## சிறிசேன...

அமையவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்கும் வல்லமை மைத்திரிபால சிறிசேன அரசாங்கத்திற்கு இருக்கவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

மைத்திரிபால சிறிசேன ஓர் வலுவான அரசியல் ஆளுமை படைத்த நபராக கருதப்படவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தேர்தல் முறைமை பற்றி எப்போதும் பேசாத எதிர்க்கட்சித் தலைவர் நிமால் சிறிபால டி சில்வா திடீரென தேர்தல் முறைமை மாற்றம் குறித்து பேசி வருவதாகத் தெரி[illegible]துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இது குறித்து ஏன் கருத்து வெளியிடவில்லை என அவர் கேள்வி எழுப்பியுள்ளார். (11)

## படையினரால்...

விடுவிக்கும்போது எங்களை சமூகத்தில் ஒருவர் என்று கூறியே விடுவித்தீர்கள். ஆனால் நாங்கள் சமூகத்தில் ஒருவர் என்றால் எங்களை பொலிஸார் விசாரிக்க வேண்டும். ஆனால் எங்களுடைய வீடுகளுக்கு படையினர் வருகிறார்கள்.

நாங்கள் வேலைக்குச் சென்றதன் பின்னர் எங்கள் வீடுகளுக்குள் நுழைகின்றார்கள். எங்களை விசாரிக்கிறார்கள்.

இவர்களால் நாங்கள் தினசரி துன்புறுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றோம் என சுட்டிக்காட்டினார்.

மேலும் ஒரு முன்னாள் போராளி கூறுகையில்,

எனது மனைவி படுத்த படுக்கையில் உள்ளார். எனது பிள்ளைகளுக்கு மனநலன் குறைவு, எனக்கும் தலையில் துப்பாக்கி ரவை இருக்கின்றது.

இந்த நிலையிலும் என்னை தினசரி விசாரணைக்கு அழைக்கிறார்கள். நான் வேலைக்குச் சென்றால் வீட்டே வருகிறார்கள். எதற்காக கொடுமைப்படுத்துகிறீர்கள்? என கேள்வி எழுப்பினார்.

இதன்போது பிரதமரும் சபையிலிருந்த மற்றய அமைச்சர்களும் முன்னாள் போராளிகளை பார்த்து, ஆட்சிமாற்றத்தின் பின்னரும் வருகிறார்களா? எனக் கேட்டனர்.

அதற்கு ஆட்சிமாற்றத்தின் பின்னரும் வருகிறார்கள் என அவர்கள் பதிலளித்த நிலையில் வாய்மூடி மௌனிகளாக அதனை நாங்கள் பார்த்து நடவடிக்கை எடுப்போம் என்ற பதிலுடன் நிறுத்திக் கொண்டனர்.

இந்நிலையில் சபையில் இருந்த படை அதிகாரிகள் அவ்வாறு நடந்ததா? எப்போது நடந்தது? அவ்வாறு நடந்ததாக நாங்கள் கேள்விப்படவில்லை. அவ்வாறு நடந்திருக்க வாய்ப்பில்லை. இதனை நாங்கள் நம்பவில்லை. என வழக்கம்போன்றே பதிலளித்தனர்.

எனினும் அங்கிருந்த தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஒன்றுசேர்ந்து, இந்த முன்னாள் போராளிகள் கதை சொல்லவில்லை. அவர்கள் அனுபவிக்கும் துயரங்களைச் சொல்கிறார்கள்.

நடந்ததா? நாங்கள் நம்பமாட்டோம். என்ற பேச்சை விடுங்கள் இந்த சபையில் கற்பனை கதை சொல்ல அவர்கள் வர வில்லை. என்பதோடு நீங்கள் நம்பவேண்டும் என்பதற்காகவும் அவர்கள் சொல்லவில்லை. உங்களுடைய அடக்குமுறைகள் வெளியே தெரியவேண்டும் என்பதற்காகவே சொல்கிறார்கள் என படை அதிகாரிக்கு பதிலளித்தனர். (11)

## எனக்கு ஏதும்...

அவருக்கு வழங்கியுள்ள பாதுகாப்பு போதுமானதல்ல எனவும் குறிப்பிட்டுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதிக்கு அரசாங்கம் 6 வாகனங்களை வழங்கியுள்ளது. எனினும் 21 வாகனங்கள் தேவை என மகிந்தவின் ஊடக இணைப்பாளர் கூறியுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி விடுதலைப் புலிகளை தோற்கடித்ததால், விடுதலைப் புலிகளின் ஆதரவாளரிடம் இருந்து உயிர் அச்சுறுத்தலை எதிர்நோக்கி வருவதாகவும் ரொஹான் வெலிவிட்ட தெரிவித்துள்ளார்.

மகிந்த ராஜபக்ஷவின் ஆதரவாளர் ஒருவர் அவரது பாதுகாப்புக்காக கடந்த 27 ஆம் திகதி பஸ் ஒன்றை வழங்கியுள்ளார்.

எனினும் அரசாங்கம் இதுவரை முன்னாள் ஜனாதிபதி ஒரு உத்தியோபூர்வ இல்லத்தை கூட வழங்கவில்லை எனவும் மகிந்த ராஜபக்ஷவின் ஊடக இணைப்பாளர் மேலும் தெரிவித்துள்ளார். (11)

## கூட்டமைப்பை அரசியல்...

கோணமலை நகரில் நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிய போதே இந்த கருத்தை அவர் வெளியிட்டுள்ளார்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு பதிவு விடயத்தில் விஷேடமாக தான் சார்ந்த கட்சியான இலங்தைத் தமிழ் அரசுக் கட்சி உறுப்பினர்கள் அந்த நிலைப்பாட்டை ஏற்றுக்கொள்ள வேண்டியது மிக முக்கியமானது என அவர் கூறினார்.

இலங்கை தமிழ் அரசுக் கட்சி உறுப்பினர்கள் நீண்ட காலமாக தமிழ் மக்களின் அரசியல் போராட்டத்தில் ஈடுபட்டு பாரிய பங்களிப்புகளை செய்தவர்கள் என்று கூறிய அவர், தமிழரசுக் கட்சியினரின் ஒத்துழைப்பும் அங்கீகாரமும் இன்றி இதனை முன்னெடுக்க முடியாது என்றும் குறிப்பிட்டார்

இலங்கை தமிழ் அரசுக கட்சி, ரெலோ, புளொட் மற்றும் ஈ. பி.ஆர்.எல்.எப் ஆகிய கட்சிகளை உள்ளடக்கிய தமிழ் தேசிய கூட்டமைப்பு அரசியல் கட்சியாக பதிவு செய்யப்பட வேண்டும் என்பதில் இலங்கை தமிழரசு கட்சி தவிர்ந்த ஏனைய கட்சிகள் தொடர்ந்தும் அழுத்தம் கொடுத்துவரும் நிலையிலே இந்த கருத்தை அவர் வெளியிட்டுள்ளார்.

தமிழ் தேசிய கூட்டமைப்பை அரசியல் கட்சியாக பதிவு செய்ய மாட்டோம் என நாம் ஒரு போதும் கூறவில்லை. அதனை பதிவு செய்வதென்றால் அதற்கான வழிமுறைகளை கையாள வேண்டும். எமது மக்கள் முழுமையாக அதனை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

தற்போது சகலரும் ஒருமித்து செயல்படும் வேளையில், உள்நாட்டிலும் சர்வதேச ரீதியிலும் தமிழ் தேசிய கூட்டமைப்பு ஒரு உயர்ந்த அங்கீகாரத்தை பெற்றுள்ள நிலையில், அந்த அங்கீகாரத்தை சகலரும் தக்க வைத்துக்கொள்ள வேண்டும் என இரா.சம்பந்தன் குறிப்பிட்டார்.

தமிழ் தேசிய கூட்டமைப்பை அரசியல் கட்சியாக பதிவு செய்துவிட்டவுடன் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வு கிடைத்து விடும் என கூறிவிட முடியாது என்றும் இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

சம கால அரசியல் நிலவரம் தொடர்பாக இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்ட அங்கத்தவர்களுக்கு விளக்கமளிக்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த நிகழ்வு கிழக்கு மாகாண கல்வி அமைச்சர் எஸ். தண்டாயுதபாணி தலைமையில் நடைபெற்றது. (11)

## வடக்கில் சிவில்...

துரையாடினார்.

கிளிநொச்சியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களையும் சந்தித்துப் பேச்சு நடத்தியிருக்கின்றார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன், வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோரைச் சந்திப்பதற்காக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் அழைப்பு விடுக்கப்பட்டிருந்த போதிலும், இந்தச் சந்திப்பில் சிறிதரன் கலந்து கொள்ளவில்லை.

எனினும், பிரதமருடனான சந்திப்பில் தானும் மற்றுமொரு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான வினோ நோகராதலிங்கம் மற்றும் நலன் விரும்பிகள் சிலரும் கலந்து கொண்டிருந்ததாக நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

கிளிநொச்சி உட்பட வன்னி மாவட்டங்களின் நிலைமைகள், மக்களின் வாழ்க்கை நிலைமைகள் என்பவை குறித்து பிரதமர் தங்களிடம் கேட்டறிந்து கொண்டதாகத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், மக்களின் வீடில்லாப் பிரச்சினை, வாழ்வாதாரப் பிரச்சினைகள், இராணுவம் ஆக்கிரமித்துள்ள பொதுமக்களின் காணிப் பிரச்சினைகள், மீனவர் பிரச்சினைகள் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் குறித்து பிரதமரிடம் எடுத்துரைத்ததாக அடைக்கலநாதன் கூறினார்.

இதனிடையே, கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு அரச செயலகங்களில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் அந்தந்த மாவட்டங்களின் பிரச்சினைகள் குறித்து ஆராயப்பட்டுள்ளன.

குறிப்பாக, யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு உடல்அங்கங்களை இழந்துள்ள விடுதலைப் புலிகளின் முன்னாள் உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் தொடர்பான பல விடயங்கள் குறித்து இங்கு ஆராயப்பட்டுள்ளன.

அவ்வாறே, புனர்வாழ்வு பெற்று சமூகத்தில் இணைந்துள்ள முன்னாள் போராளிகளின் வாழ்வாதாரப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காணப்படும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார்.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உளவியல் ஆற்றுப்படுத்தல் உதவிகள் வழங்கப்பட வேண்டிய தேவை இருப்பதாகவும், அதற்குத் தகுதியானவர்கள் 300 பேரையாவது தமிழகத்திற்கு அனுப்பி பயிற்சி கொடுப்பதற்கான நடவடிக்கைகள் குறித்து இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியுடன் பேசப்பட்டிருப்பதாகவும் ரணில் தெரிவித்தார்.

மேலும் மலேசியா, சிங்கப்பூர், மொரீசியஸ் போன்ற நாடுகளில் இருந்து மருத்துவர்களின் உதவியைப் பெறுவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மீனவர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. இந்திய மீனவர்களின் இழுவை மீன்பிடித் தொழிலை முற்றாக நிறுத்துவதற்கு நாங்கள் தீர்மானித்திருக்கின்றோம். அதற்கு அடுத்ததாக தென் பகுதிகளில் இருந்து வருகின்ற சிங்கள மீனவர்களின் பிரச்சனை குறித்து கவனம் செலுத்தப்படும் என்று கூறியுள்ளார் ரணில் விக்கிரமசிங்க.

யுத்தத்திற்கு முன்னர் தெற்கிலிருந்து முல்லைத்தீவுக்கு வந்து மீன்பிடித்த மீனவர்கள் அனுமதிக்கப்படுவார்கள். ஏனையவர்களுக்கு அனுமதி வழங்கப்படமாட்டாது என்றும் பிரதமர் தெரிவித்திருக்கின்றார்.

கைத்தொழில் வணிகத்துறை அமைச்சர் ரிசாட் பதியுதீனின் வேண்டுகோளையடுத்து, முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள முஸ்லிம் மக்களின் காணிப்பிரச்சனைகளுக்குத் தீர்வு காணும் வகையில் ஒருவார காலத்தில் நடவடிக்கை எடுக்குமாறு முல்லைத்தீவு கூட்டத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மீள்குடியேற்ற அமைச்சருக்குப் பணிப்புரை வழங்கியுள்ளார்.

இதன்போது கருத்துத் தெரிவிக்கையிலேயே பிரதமர் மேற்கண்டவாறு கூறினார். அவர் அங்கு மேலும் கூறுகையில், நாங்கள் நிறைய வேலைகள் செய்ய வேண்டியுள்ளது.

மிகவும் வறிய மாவட்டங்களாக 2009 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்கள் காணப்பட்டன. 2014ஆம் ஆண்டில் மிகவும் வறிய மாவட்டமாக மொனறாகலை மாவட்டம் காணப்பட்டது. இதை வைத்து பார்க்கும் போது கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் சில வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

ஆனால், அனைத்து பிரச்சினைகளும் தீர்வில்லை. நிறைய வேலைத்திட்டங்களை மேற்கொள்ள வேண்டியுள்ளது. இராணுவத்தினரால் மேற்கொள்ளும் சமூக நலன்சார் செயற்பாடுகள் சிவில் சமூகத்தால் மேற்கொள்ளப்பட வேண்டும் என இங்குள்ளவர்கள் வலியுறுத்துகின்றனர். இதற்காக சிவில் அமைப்புக்கள் பலப்படுத்தப்பட வேண்டும்.

அடுத்து வரும் 5 ஆண்டுகளில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு விசேட வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளவுள்ளோம். இதற்காக வடபகுதிக்கான பிரதமர் உபசெயலகம் ஒன்றை நிறுவி அதன்மூலம் தீர்வு காணப்படும் என தெரிவித்தார். (11)

# சங்கக்காரவைப் போல் இளம் வீரர்களும் சாதிப்பர்

## அத்தபத்து நம்பிக்கை



11ஆவது உலகக் கிண்ண தொடரில் காலிறுதியில் தோல்வியைத் தழுவிய இலங்கை அணி நாடு திரும்பிய பின்னர், இலங்கை கிரிக்கெட் சபையால் ஊடகவியலாளர் சந்திப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதில் இலங்கை அணித் தலைவர் அஞ்சலோ மத்யூஸ், இலங்கை கிரிக்கெட் சபையின் தெரிவுக்குழுத் தலைவர் சனத் ஜெயசூரிய மற்றும் பயிற்றுவிப்பாளர் மாவன் அத்தபத்து ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

இதில் பேசிய பயிற்றுவிப்பாளர் மாவன் அத்தபத்து, இலங்கை அணி வீரர்கள் காயத்தால் தொடர்ந்து அவதிப்பட்டு வருகின்றனர். இதுவும் இலங்கை அணியின் தோல்விக்கு காரணமாக அமைந்தது என தெரிவித்துள்ளார்.

மேலும், இனி இலங்கை கிரிக்கெட் அணியில் தெரிவு செய்யப்படும் வீரர்களின் உடற்தகுதி கவனமுடன் கண்காணிப்படும் என்றும், இது இலங்கையின் ஏ அணிக்கும் பொருந்தும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் தோல்விக்கு இந்தியாவுடனான ஒருநாள் தொடரை 5-0 என்ற கணக்கில் இழந்தது ஒரு வகையில் காரணமாக அமைந்ததா என்ற கேள்விக்கு பதிலளித்த அத்தபத்து, கண்டிப்பாக அதை முக்கிய காரணமாக கூறமுடியாது.

இருப்பினும் உலகக் கிண்ணத் தொடருக்கு செல்லும் இலங்கை அணிக்கு அது ஒரு நல்ல நிகழ்வாக அமையவில்லை. இந்தியாவுடன் ஒருநாள் தொடர் என்பது அப்போது அனைவரும் சேர்ந்து எடுத்த முடிவு என்று தெரிவித்துள்ளார்.

மேலும், இளம் வீரர்களுக்கு வாய்ப்பு வழங்க வேண்டும் என்று பேசிய அத்தபத்து, இதுகுறித்து கூறுகையில், சண்டிமல் எடுத்த ஓட்டங்களை சங்கக்காரா 15 போட்டிகளுக்கு பிறகே எடுத்தார். ஆனால் தற்போது அவர் ஒரு உலக தரம் வாய்ந்த வீரராக இருக்கிறார்.

எனவே பொறுமை காத்து இளம் வீரர்களுக்கு வாய்ப்பளிக்கும் போது அவர்களும் சாதிப்பார்கள் என்று நம்பிக்கையுடன் கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிஹின் எயார் அவசரமாக தரையிறக்கம்



விமானமே இவ்வாறு தரையிறக்கப்பட்டுள்ளது என்று விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

(கொழும்பு)

கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் இருந்து பங்களாதேஷின் தலைநகர் டாக்காவுக்கு சென்ற மிஹின் எயார் விமானம், தொழில்நுட்ப கோளாறு காரணமாக மீண்டும் கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் தரையிறக்கப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை 7.30க்கு புறப்படவிருந்த விமானம், காலை 9.30 க்கே புறப்பட்டது என்று பயணிகள் தெரிவிக்கின்றனர்.

விமானத்தில் ஏற்பட்ட இயந்திர கோளாறு காரணமாக. அந்த விமானம் 10.45 க்கு கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் தரையிறக்கப்பட்டதாக விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

159 பயணிகளுடன் புறப்பட்டு சென்ற எம்.ஆர்.எல் 501 என்ற விமானமே இவ்வாறு தரையிறக்கப்பட்டுள்ளது என்று விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்தனர்.


# கண்ணீர் அஞ்சலி



மூத்த எழுத்தாளர்
நவாலியூர் நடேசன்
அவர்களின் அன்பு மனைவி
திருமதி
**புவனேஸ்வரி நடேசன்**
அவர்களின் மறைவுக்கு எமது கண்ணீர் அஞ்சலியை செலுத்துவதுடன் அன்னாரின் இழப்பால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

– வலம்புரிக் குடும்பம்

FALC FRENCH LANGUAGE CENTRE
REGISTERED FRENCH CENTRE.

# FRENCH CLASSES



Embassy ஆல் அங்கிகரிக்கப்பட்ட International Diploma in French
FRANCE, CANADA, SWISS, BELGIUM செல்வோர் கற்கிறார்கள்...
விரிவுரையாளர் : MR. V. JEGAN (Trained teacher in France - 2007, University இல் French விரிவுரைகளை மேற் கொண்டவரும்)
இதுவரையில் எமது ஆசிரியரிடம் 906 பேர் கற்று சென்றுள்ளனர்
Register now : 0779 789 456 / 021 221 7781
ஆரம்பம்: 04.04 சனி 10am No. 40, Palaly Road, Jaffna.(ஆரியகுளம்)
ஆரம்பம்: 04.04 சனி 4pm. No.181, 1st Floor, பிரதான வீதி, நெல்லியடி.
சாவகச்சேரியில் விரைவில் எம் கிளை
(C-447)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

தென்னம்குற்றிகள்
**தேவை**
விறகுக்கு கொள்வனவு செய்யப்படும்.
கிலோ: 2 ரூபாய்
தொடர்பு:
நிப்போன் ரான்ஸ்போட் சேவிஸ்
இல.57/11, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
0212222121, 0779505195
(C-503)


# மரண அறிவித்தல்

## மனுவல் கிறகோரி அன்பு

## (உரிமையாளர் - சாள்ஸ் மீசாலை)



இல.30, பங்களா வீதி, மீசாலையை வசிப்பிடமாகவும், இல 29, சுவாட்ஸ் லேனில் வசித்து வந்தவருமான மனுவல் கிறகோரி அன்பு 28.03.2015 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மனுவல் - மேரிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சாள்ஸ் ஆனாசிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகனும், செபபாக்கியத்தின் பாசமிகு கணவரும், மரியலீனஸ், (சாள்ஸ் - மீசாலை), மரிய அலிஸ்ரா (சாள்ஸ் மீசாலை), மாகிறேட் லூசியா (தயா), மரிய அன்ரனி (அன்ரனி ஜுவல்ஸ் - யாழ்ப்பாணம்), இம்மானுவேல் (தினேஷ் மெஷின் கட்டிங் - சாவகச்சேரி) ஆகியோரின் அன்புத் தந்தையும்,

சாந்தா கிறேஸ் (ஆசிரியை - நவாலி அட்டகிரி சைவ வித்தியாலயம்), மேரி பாமினி, தேவநேசன் (சாரதி இ.போ.ச), ஜெயசில்டா யோசப்பின் (ஆசிரியை - யாழ்.சென்.ஜேம்ஸ் ஆண்கள் பாடசாலை), ஜேன் மாலினி ஆகியோரின் பாசமிகு மாமனும், சௌதினி யோய், பியோஜின், காலஞ்சென்ற வினோ, றொபினா மற்றும் கிறேஸ் வேஜினி, சாள்ஸ் றெனால்டோ பற்றிக்றோய், பிரகாஜினி, சாம்சன் (பிரான்ஸ்), பல்சியா - மதன்ராஜ் (டோகா - கட்டார்), யோண்சன் ஜெரமி, அரோன், மெரிஸ், ரிவான்கன்னி, சியோனா, கப்ஸ்ரன், றெஜிஸ்ரன் ஆகியோரின் பாசமிகு பேரனும், சிங்கராயர், அம்புறோஸ், லூர்த்தம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இல.30, பங்களா வீதி, மீசாலையில் அமைந்திருக்கும் அவரது இல்லத்தில் இருந்து இன்று (30.03.2015) திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு சாவகச்சேரி தூய லிகோரியார் ஆலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு இறுதி ஆராதனையைத் தொடர்ந்து தூய லிகோரியார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

"சாள்ஸ்"
பங்களா வீதி,
மீசாலை.

தகவல் : டி.தேவநேசன் (மருமகன்)
077-5548179

(9930)


போட்டிப் பரீட்சைக்கான
**விசேட வகுப்புக்கள்**
- முகாமைத்துவ உதவியாளர்
- வருமான பரிசோதகர்
- புகையிரத நிலைய அதிபர் தரம் III

பிரிவு - I சனி, ஞாயிறு - 3.00 - 5.30 pm
பிரிவு II திங்கள், புதன் - 4.00 - 5.30 pm
பிரிவு III செவ்வாய், வியாழன் - 4.00 - 5.30 pm
அச்சடித்த பாடக்குறிப்புக்கள், கையேடுகள் வழங்கப்படும்.
ஆரம்பம் - 30.03.2015 திங்கள் - 4.00 pm
மேலதிக தொடர்பு - 0772170065
ஐடியல் கல்லூரி - மானிப்பாய்
கிறீன் ஆஸ்பத்திரி பின் வீதி.
(9928)

SIKARAM Education Abroad Work, Migration & Visa Solutions
**கனடா** Express Entry Visa
தொழில்வாய்ப்புடன் நிரந்தர குடியுரிமை
University Lecturers, Instructors, Vocational Trainers, Teachers, Librarians முதல் Sports Managers, Referees, Coaches, Athletes வரை
150க்கு மேற்பட்ட தொழில் நிலைகளுக்கு 180,000* க்கு மேற்பட்ட வெற்றிடங்கள்
கனேடிய அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தின் மூலம் புள்ளி அடிப்படையில் உங்கள் விண்ணப்ப தகைமையை மதிப்பீடு செய்து, கனேடிய முகவர் ஊடாக நேரடியாக விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும் 100% பாதுகாப்பான ஏற்பாடு
ஏற்கனவே விண்ணப்பித்து பயனடைந்தவர்கள் பற்றிய மேலதிக விபரங்களை அறிந்தகொள்ள
FREE Assessment www.sikaram.lk
Sikaram (Pvt) Ltd. *நிபந்தனைகளுக்கு உட்பட்டது
No.2/1, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம்.(வைத்தியசாலை பின்புறம்)
Tel: 077 36 16 798, 021 222 00 11
(C-510)

விற்பனையாளர்
**தேவை**
கட்டிடப் பொருளில் அனுபவம் உள்ள விற்பனையாளர் தேவை.
தொடர்பு:
சிற்றி ஹாட்வெயார் அன் ஸ்ரோர்ஸ்
இல.55, 57, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(C-503)

Digital இண்டர்நஷனல் எக்ஸ்பிரஸ்
பொதி விநியோக சேவை
விஷேட கட்டண சலுகைகள்



- 200க்கும் மேற்பட்ட நாடுகளுக்கான உலகின் முதற்தர கூரியர் நிறுவனம் மூலம் தபால் மற்றும் பொதி விநியோக சேவையினை தரமாகவும் பாதுகாப்பாகவும் அனுபப்பிட நாடுங்கள்
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- மிகச்சிறந்த வாடிக்கையாளர் சேவை
- அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம்

WESTERN UNION MONEY TRANSFER
மிக விரைவான பணப்பரிமாற்ற சேவையினை நம்பிக்கையாகவும் பாதுகாப்பாகவும் பெற்றுக்கொள்ள முடியும்
62/16 ஸ்ரான்லி வீதி (சம்பத்வங்கி முன்பாக) யாழ்ப்பாணம்
தொடர்புகளுக்கு - 021 753 8330, 0777 151 101
(C-479)

# வெளிநாடுகளிற்கான துரித தபால்கள் பொதிகள் சேவை

வடமாகாணத்தின் பொதிகள் சேவை துறையின் முன்னோடிகள்
உங்கள் பெறுமதி மிக்க் பொதிகளுக்கும் பணத்திற்கும் 100% உத்தரவாதம் எம்மிடம் மட்டுமே
அருள்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
இல.10, கஸ்தூரியார் வீதி, (புதிய மாநகரசபை கட்டடத்தொகுதி) யாழ்ப்பாணம். 021 222 3536

- இலட்சக்கணக்கான வாடிக்கையாளர்களைக் கொண்டு
- ஆகாய, கடல் மார்க்கமாக
- அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மையுடன்
- மறைமுக கட்டணம் ஏதுவுமின்றி
- முக்கிய ஆவணங்கள், மிளகாய்த்தூள், கருவாடு, எண்ணெய் வகைகள், அனுமதிக்கப்பட்ட மருந்துப்பொருட்கள், உடுபுடவைகள், பால்மா வகைகள் என அனைத்துப்பாவனைப் பொருட்களையும்,
- 3-4 நாட்களில் உலகின் எப்பாகத்திற்கும் குறித்த முகவரியில் ஒப்படைக்கின்றோம்.



வெளிநாடுகளிற்கான பொதிகள் சேவையை வழங்கிக்கொண்டிருக்கும் முன்னணி நிறுவனம்
(C-506)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் எனும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.03.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.